## உள்ளே உள்ளவை


| | |
|---|---|
| 1. மனிதனின் சிறப்பு | 7 |
| 2. உள்ளம் | 15 |
| 3. உயிர் | 20 |
| 4. உணர்ச்சி | 23 |
| 5. பகுத்தறிவு | 28 |
| 6. உள்ளத்தின் ஆற்றல் | 31 |
| 7. உள்ளமும் உவமானமும் | 38 |
| 8. மானிட உள்ளத்தின் தனிச்சிறப்பு | 46 |
| 9. மனிதனுக்குள் மிருகம்! | 59 |
| 10. மனமும் கண்ணாடியும் | 71 |
| 11. மனமும் அறிவும் | 88 |
| 12. கல்லூரிப் படிப்பும் ஞானோதயமும் | 102 |
| 13. உவமானங்கள் சில | 116 |
| 14. குர்ஆனின் தீர்ப்பு | 127 |


# உள்ளத்தின் விந்தைகள்

எங்கும் நிறைந்த ஏகனே! எல்லாம் தெரிந்த இறைவனே! உன்னை நாங்கள் பாராட்டுகிறோம். பாராட்டுக்கள் அனைத்தும் உனக்கே உரித்தானவை. ஆனால் முறைப்படி உன்னை எங்களால் பாராட்ட முடியவில்லையே! நாங்கள் எப்படித்தான் பாராட்டுவோம்! பெருந்தன்மைக்கும் சிறப்புக்கும் நிலைக்களனான உன்னை எங்களால் எப்படித் தான் பாராட்ட முடியும்.

உன் நிலையையும் ஆற்றலையும் சரிவர உணர முடியாமல் மானிட மனம் தடுமாறுகிறது. உன் அறிவுச் சுடர் மனிதனின் மனத்தில் பிரதிபலிக்கும் போது அவன் நிலைகுலைகிறான். கண்டதை அவனால் சொல்ல முடியவில்லை. உன் விஷயத்தில், 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்பது எத்துணைப் பொருத்தமாக இருக்கிறது! உன் சக்தியையும் பெருமையையும் சரிவர உணர்ந்து கொள்வதற்கு மனிதனின் பகுத்தறிவு படாத பாடுபடுகிறது.

மற்றவர்களால் உன்னை அறிய முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் நீ அனைவரையும், அனைத்தையும்

அறிந்து வைத்திருக்கிறாய். மனிதனின் மனத்தில் நெளியும் எண்ணங்களைக்கூட நீ தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறாய். மனிதன் தன் செயலை மறைக்கிறான். அவன் மறைப்பவை அனைத்தும் உனக்கு நன்றாகத் தெரிகின்றன. அனைத்தையும் உணர்ந்த இறைவனே! உன்னை எங்களால் எப்படிப் பாராட்ட முடியும்! ஆழம் காண முடியாத உன்னுடைய அறிவுக் கடலுக்கு எங்களால் எப்படி வரம்பு கட்ட முடியும்! எல்லையற்ற இறைவனாகிய உனக்கு எங்களால் எப்படி எல்லை கட்ட முடியும்!

பேரரசனே! மண்ணையும் விண்ணையும் நீ ஏக காலத்தில் ஆட்சி புரிகிறாய். ஆனால் உன் நிர்வாகத்தில் எவருடைய யோசனைக்கும் இடமில்லை. எவருடைய ஆலோசனையையும் நீ ஏற்றுக்கொள்வதில்லை. யாருடைய துணையையும் எதிர்ப்பார்க்காமல் நீ தனியே நின்று தரணி முழுவதையும் ஆள்கிறாய்.

உன்னைப் பற்றி அறியத் துடிக்கிறது, மனிதனின் மனம். ஆனால் நீ அதை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறாய்!

மனிதர்களுக்கு நீ செய்துவரும் உதவிகள் தாம் கொஞ்சமா! அவற்றை என்னால் எப்படிப் பாராட்டாமலிருக்க முடியும். அவன் குற்றம் செய்கிறான்; நீ மன்னித்தருள்கிறாய். அவன் இழிவானவற்றில் பிரவேசிக்கிறான்; நீ மூடி மறைத்து மானத்தைக் காப்பாற்றுகிறாய். அவன் துன்பத்தின் பிடியில் தத்தளிக்கிறான்; நீ அவனுக்குத் துன்பத்திலிருந்து விடுதலையளிக்கிறாய்.

பெருமானாருக்கும் அவர்களின் சந்ததியினருக்கும் நபித் தோழர்களுக்கும் உன் அருள் மழையை நிரந்தரமாகக் கொடுத்தருள்வாயாக!

# மனிதனின் சிறப்பு

மனிதன் சிறப்புள்ளவன்; மற்றப் படைப்பினங்கள் அனைத்தையும் விட மேலானவன். பாய்ந்து வரும் புலிக்கும் கீறிக் கிழிக்கும் சிங்கத்துக்கும் அவன் தாழ்ந்தவனல்லன். உலகமும் அதிலுள்ள அனைத்தும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனிடம் இத்துணைச் சிறப்பு ஏற்படுவதற்குக் காரணம் என்ன? எண்ணிப் பாருங்கள். மனிதனிடம் தனிச்சிறப்பு ஒன்றுண்டு. அதன் விளைவால்தான் அவன் மற்ற அனைத்தையும்விட உயர்ந்து நிற்கிறான்.

மனித இனத்திற்கு உள்ளம் என்று ஒரு பொருள் இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மிகச் சிறப்பு வாய்ந்த ஒன்று. அது சிறப்புற்று விளங்கினால் மனிதன் சிறப்புற்று விடுவான். அது சீர்குலைந்தால் மனிதன் சீர் குலைந்து விடுவான். அதற்கு இறைவனையும் அவன் பேராற்றலையும் அறியும் சக்தியுண்டு. இந்தச் சக்தி மனிதனின் அவயங்களில் வேறு எதற்கும் கிடையாது.

கண்கள் அனைத்தையும் பார்க்கின்றன. மண்ணில் முளைக்கும் புற்பூண்டுகளையும் விண்ணில் முளைக்கும் விண்மீன்களையும் அவை பார்க்கின்றன. ஆனால் அவற்றிற்கு இறைவனைப் பார்த்தறியும் ஆற்றல் கிடையாது.

இறைவனின் உருவத்தையோ அவன் செயல்முறை களையோ இந்தக் கண்கள் பார்த்தறிய மாட்டா. உருவமும் உறுப்பமைப்பும் இல்லாத அவனை உங்களால் எப்படித் தான் கண்டுணர முடியும்! இதற்கு உங்கள் புறக் கண்களை ஏன் வீணாகப் பயன்படுத்துகிறீர்கள்? ஆனால் இறைவ னைப் பார்ப்பதற்கு உங்களிடம் வேறொரு கண் உண்டு. அதற்கு புறக்கண் என்று பெயரிடமுடியாது. உங்கள் மனக் கண்ணைத் திறந்து பாருங்கள். அந்தக் கண் புறக்கண்ணை விடச் சக்தி வாய்ந்தது. புறக்கண்கள் எதிரிலுள்ளவற்றையும் அன்மையிலுள்ளவற்றையும் மட்டுமே பார்த்தறிகின்றன. தூரத்திலுள்ளவை, பின்னாலிருப்பவை, நாளைக்கு நடக்கப் போகிறவை, நுண்ணிய அமைப்பைப் பெற்றவை - இவற்றை உங்கள் புறக் கண்களால் கண்டறிய முடியாது.

ஆனால் இவை அனைத்தையும் உங்கள் மனக்கண் எளிதில் பார்த்துத் தெரிந்து கொண்டுவிடும். இறைவனைப் பார்க்கும் ஆற்றல் இந்தக் கண்ணுக்குத்தான் உண்டு.

உங்கள் காதுகள் இன்னிசையையும் கூப்பாடுகளையும் கேட்கின்றன. ஆனால் இந்தச் செவிகளின் உதவியால் உங்களால் இறைவனின் பேச்சைக் கேட்க முடியுமா? நிச்சயமாய் முடியாது. எழுத்தோ மொழியோ இல்லாமல், வார்த்தையோ குரலோ இல்லாமல் பேசப்படும் இந்தப் பேச்சை நீங்கள் கேட்க விரும்பினால், உங்கள் மனச் செவிக்குத் திறமையூட்டுங்கள்.

இப்படி மனிதனின் உறுப்புக்கள் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வாருங்கள். இறைவனை அறியும்பேறு மனிதனின் அவயவங்களில் எதற்கும் கிடையாது - உள்ளம் ஒன்றைத் தவிர்த்து.



இந்தச் சிறப்பு மனிதனிடம் இருப்பதால்தான் அவன் மற்றப் படைப்புகள் அனைத்தையும்விடச் சிறந்து விளங்கு கிறான். உள்ளம்தான் இறைவனை அறிகிறது. அதுதான் அவனை நெருங்குகிறது. அதுவேதான் இறைஞானம் அனைத்தையும் தனக்குள் சேகரித்துக் கொள்ள முயற்சி செய்கிறது.அதைத் தவிர்த்து மற்ற அனைத்தும் அடிமை களைப்போல செயலாற்றுகின்றன.

அரசன் சேவகனை வேலை வாங்குகிறான். பணக்காரன் பணியாளைப் பயன்படுத்துகிறான். தொழிலாளி கருவியை உபயோக்கிறான். இதே போன்று உள்ளம் என்ற சக்தி வாய்ந்த அரசன் மற்ற உறுப்புக்கள் அனைத்தையும் அடக்கி யாண்டு வேலை வாங்குகிறான். அதன் கட்டளையை மீறும் துணிவு கண்ணுக்கும் நாவுக்கும் கிடையாது. அதன் தீர்ப்பை மாற்றும் துணிவு காலுக்கும் காதுக்கும் கிடையாது. அதன் அடக்கு முறையைத் தகர்த்தெறியும் துணிவு எந்த உறுப் புக்கும் கிடையாது. உறுப்புக்கள் அனைத்தும் உள்ளத்தின் கட்டளையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தின் ஆட்சி மனிதனின் உடல் முழுவதும் வியாபித்து நிற்கிறது.

அது எப்போதுமே தூய்மையுடனிருக்க வேண்டும். இறைவன் மீது அது பேரன்பு கொணடால், அந்த அன்பின் எதிரொலியாக அது மற்ற அனைத்தையும் மறந்து விட்டால், இறைவனின் பேரன்பு அதற்குண்டு. இறை ஞானம் பொங்கிப் பெருக வசதியுண்டு. அது தீய வழியில் திரும்பி விட்டால், இறைவனின் வெறுப்பு அதுற்குண்டு. அப்புறம் இறைஞானம் அந்த உள்ளத்தில் ஒளி விடுவதற்கு வழியே இல்லை! மனத்துக்குத்தான் தண்டனை அளிக்கப் படுகிறது; மனம்தான் வெகுமதியையும் பெறுகிறது. நல்லதைச் செய்யும் மனம் நன்மையடைகிறது; தீமையைச் செய்யும் மனம் தண்டனைக்குள்ளாகிறது.

உங்களைக் கெட்டவர் என்று நான் தீர்மானிப்பதானால், உங்கள் மனத்தையே நான் முதலில் ஆராய வேண்டும். உங்களைப்பற்றி நீங்களே என்ன எண்ணுகிறீர்கள்? நெஞ்சில் கைவைத்துப் பாருங்கள். உங்கள் மனம் புனிதத் தன்மை அடையும்வரை உங்களுக்குப் புனிதமானவர் என்ற பெயர் பொருந்தாது. நஞ்சூட்டப்பட்ட தேனை யார்தான் விரும்பப் போகிறார்கள்? உங்கள் மனத்தில் நச்சுத் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, உங்கள் சிரிப்பிலுள்ள தித்திப்பு யாருக்குப் பயன் தரப்போகிறது.

இறைவனுக்கு வழிபட்டு நடப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். உண்மையில் உங்கள் உடலில் எந்தப் பகுதி இறை வணக்கம் புரிகிறது தெரியுமா? உங்கள் உள்ளம் தான் இறைவணக்கம் புரிகிறது. இறைவனை வணங்குவதும், அவனுக்கு மாற்றம் செய்வதும் அதுதான். உங்கள் மனத்தில் பக்தி உருவாகும்பொழுது அதன் ஒளிக்கற்றைகள் அவயங்களில் படிகின்றன. உங்கள் மனத்தில் தீய எண்ணம் உருவாகும்போது அதற்கொப்ப உங்கள் அவயங்கள் செயல்புரிகின்றன. மனத்தில் பக்தி ஏற்படாமல் உங்களால் இறை வணக்கம் புரிய முடியுமா? மனத்தில் தோன்றும் தீய எண்ணமும் நல்லெண்ணமும் உடனுக்குடன் அவயவங்களால் செயல்படுத்தப்படுகின்றன. உண்மையில் 'பக்தன்' எனற பெயர் மனத்துக்குத்தான் பொருந்தும். மனத்தின் தூண்டுதலால்தான் இறைவணக்கம் உருப்பெறுகிறது. 'நாத்திகன்' என்ற பெயரும் மனத்துக்குத்தான் பொருந்தும். மனத்தின் உணர்வால் தானே மனிதன் நிலையின்றித் தடுமாறுகிறான்? அதன் கட்டளையினால் தானே அவன் அறிவுக்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுகிறான்?



'பானையில் உள்ளதுதான் அகப்பையில் வரும்!' என்று ஒரு முதுமொழியுண்டு. உண்மைதானே! மனத்திலுள்ளது தானே செயலில் வர முடியும்? தான் எண்ணாத ஒன்றை, தான் சிந்திக்காத ஒன்றை எந்த மனிதனும் செய்யப்போவதில்லை.

உங்களுடைய மனம் எப்படி இருக்கிறது? அதைப் பற்றி நீங்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். மனத்தை நீங்கள் அறிந்துகொண்டால், இலகுவாக இறைவனை அறிந்துகொண்டு விடுவீர்கள். மனத்தை அறிந்து கொள்ளாதவர்கள் இறைவனை அறிந்து கொள்ள முடியாது. உங்கள் மனத்தைப் பற்றியே உங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை எனறால், மற்றவர்களைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும் உங்களால் எப்படி அறிந்துகொள்ள முடியும்?

பெரும்பாலோர் இந்தத் துறையில் பெரிதும் பின் தங்கிவிட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன். அவர்கள் தம் மனத்தைப் பற்றியும் அதன் உணர்வுகளைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பதில்லை, இதனால் அவர்கள் தம் மனத்தைப்பற்றியே அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேறு திக்கில் பிரவேசிக்கிறார்கள். அவர்களின் மனம் வீணான எண்ணங்களுக்கு அடிமையாகிக் கிடக்கிறது.

அது சில வேளை சிந்தனையின் சிறப்பால் வானோக்கி உயர்கிறது. இன்னும் சில சமயம் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அதல பாதாளத்தில் விழுந்து விடுகிறது. எல்லாம் வல்ல இறைவன் மனிதனின் மனத்தை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறான்! அவனுடைய சக்திக்கரங்களில் சிக்கிக் கொண்டு மானிட உள்ளங்கள் தடுமாறுகின்றன.

உங்கள் மனத்தை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களால் இறைவனைத் தெரிந்துகொள்ள முடியும். இந்தக் காரியத்தை அலட்சியம் செய்துவிடாதீர்கள். ''...அவர்கள் இறைவனை மறந்தார்கள். எனவே இறைவன் அவர்களின் மனநிலையை அவர்களுக்கு மறக்கடித்துவிட்டான்!'' என்ற திருக்குர்ஆனின் கண்டனக் குரலுக்கு இலக்காகி விடாதீர்கள். இந்தக் கண்டனத்திற்கு இலக்கானவர்கள் பலர் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைப் பொருட்படுத்தாதீர்கள். ஏனெனில் திருக்குர்ஆன் அவர்களைக் ''குற்றம் புரிபவர்கள்'' என்று குறிப்பிடுகிறது.

மனத்தைப்பற்றியும் அதன் தன்மைகளைப் பற்றியும் அறிந்துகொள்வது மகத்தானதொரு காரியமாகும். இதற்கு மார்க்கத்தில் பாராட்டுண்டு. இந்த அறிவை மார்க்கத்திற்கே ஆணிவேர் என்றும் குறிப்பிடலாம்.

'இஹ்யாவு உலூமித்தீன்' என்ற இந்தப் பெருநூலை இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறேன். முதற் பிறிவில் மட்டும் 20 சிறிய நூல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் 10 நூல்கள் வணக்க வகைகளையும் எஞ்சிய 10 நூல்கள் பழக்க வழக்கங்களையும் விவரிக்கின்றன. மனிதனின் அவயவங்களோடு சம்பந்தப்படும் காரியங்கள் அனைத்தும் இந்த இருபது நூல்களில் விரிவாக ஆராயப்படுகின்றன.

உங்கள் கையிலிருக்கும் இந்நூல் இரண்டாம் பிரிவில் முதலாவதாக இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பிரிவிலுள்ள இருபது நூல்களும் மனத்தில் தோன்றும் நல்ல குணங்களையும் தீய குணங்களையும் விவரிக்கின்றன. எந்தக் குணத்தினால் அவன் அதல பாதாளத்திற்குப் போகிறான்



என்பதை அடுத்துவரும் நூல்களில் நீங்கள் விரிவாகக் காணலாம்.

இந்த இருபது நூல்களில் இரண்டு நூல்களுக்கு நான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன். 1. 'உள்ளத்தின் விந்தைகள்' 2. 'உளத் தூய்மை!' 'உள்ளத்தின் விந்தைகள்' என்ற இந்த நூலில், மனத்தில் தோன்றும் எண்ணங்களும் சூழல்களும் விரிவாக ஆராயப்படுகின்றன. 'உளத்தூய்மை' என்ற நூலில் மனத்தைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிவகைகள் தெளிவாகக் காட்டப்படுகின்றன. இந்த இரண்டு நூல்களையும் எழுதி முடித்த பிறகு, மனிதனின் குணங்கள், உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் தனித் தனியே ஆராய்வோம் - இன்ஷா அல்லாஹ்!

இப்போது நாம் உள்ளத்தைப் பற்றி ஆராய்வோம். அதைச் சாதாரணமாக எண்ணிவிடாதீர்கள். அற்புதமான சக்திகள் பல அதனுள் மறைந்திருக்கின்றன. மர்மங்கள் நிறைந்த அதைப் பெரும்பாலோர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. ஏனெனில், உள்ளத்தின் அடித்தள மர்மங்களையும் அற்புதங்களையும் புரிந்து கொள்வது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல. அவற்றைப் புரிந்து கொள்வதில் யாருக்கும் சிரமம் ஏற்படத்தான் செய்யும். எனவே நாம் அவற்றை எல்லாம் உவமானங்களின் மூலம் ஆராய்வோம். உவமானத்துக்கு மர்மம் துலக்கும் சக்தியுண்டு.

மனிதனைக் குறிப்பாக நான்கு பொருள்கள் ஒன்று சேர்ந்து இயக்குகின்றன. இயங்கிக் கொண்டிருக்கும் மனிதனிடம் இந்த நான்கு பொருள்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. உள்ளம், உயிர், உணர்ச்சி, பகுத்தறிவு ஆகிய

இந்த நான்கும் மனிதனிடம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இவற்றின் பொருள்களை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், உங்களால் இந்த நூலைத் தெளிவாக உணர முடியும்.

இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் களைப் பெற்றிருக்கின்றன. சில வேளை ஒரு வார்த்தையின் பொருள் வேறொரு வார்த்தையின் பொருளாக உபயோகிக் கப்படுகிறது. இப்படியெல்லாம் இந்த நான்கு வார்த்தை களும் குழப்பத்தை ஏற்படுத்துவதால் தான் இவற்றைப் பற்றி நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் சொல்கிறேன்.

● ❖ ●

## உள்ளம்

இது எல்லோருக்கும் பழக்கமான வார்த்தை. இது மிருதுவானதொரு சதைத்துண்டு, மனிதனின் நெஞ் செலும்புகளுக்குள் இடப்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மாமிசத்துண்டு, மனிதனின் வாழ்வுக்குத் தேவையான வேலையைச் செய்கிறது. இதன் துடிப்பினால் உடல் முழுவதும் பரவி விரியும் உதிரம் மனிதனை இயங்கச் செய் கிறது. இந்தச் சதைத்துண்டின் நடுப்பகுதியில் சிறியதொரு இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளியைக் கரிய நிறத்தில் ஒருவிதத் திரவம் அடைத்துக் கொண்டிருக்கிறது.

''இந்தத் திரவத்திலிருந்துதான் உயிரோட்டம் உருவா கிறது. இதயத் துடிப்பு நின்று விட்டால் உயிரோட்டம் தடைப்படுகிறது!'' என்று உடற்கூறு ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். உள்ளம் என்ற வார்த்தைக்கு அவர்கள் மேற் குறிப்பிட்ட சதைத் துண்டைத்தான் பொருளாகக் கொள் கிறார்கள். நோயாளியைப் பரிசீலனை செய்த பிறகு வைத்திய வல்லுணர்கள். ''இந்த மனிதன் பிழைப்பது அரிது, ஏனெனில் இவர் இதயம் உள்ளம் பலவீன மடைந்து விட்டது!'' என்கிறார்கள்.

இதற்குப் பொருள் என்ன? 'ஓய்ச்சல் ஒழிவில்லாமல் துடித்துக் கொண்டிருக்கும் இந்த மாமிசத் துண்டு பழுதடைந்து விட்டது என்பதே இதன் பொருள்.

ஏனெனில் உள்ளம் என்ற வார்த்தையை இவர்கள் இந்தச் சதைத்துண்டுக்குத்தான் உபயோகிக்கிறார்கள். அவர்கள் வைத்தியர்கள். வைத்தியத் துறையில் அவயவங்களை ஆராயவேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே மனிதனின் அவயங்களில் ஒன்றான இந்தச் சதைத்துண்டையும் அவர்கள் ஆராய்கிறார்கள். இதன் அமைப்பு என்ன? இதன் வேலை என்ன? வியாதிக்குரிய காரணம் எதனால் உருவாகியிருக்கிறது? - இப்படியெல்லாம் அலசி ஆராய வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுகிறது. வைத்தியத் துறையின் அடிப்படையே அவயவத்தைப் பற்றிய ஆராய்ச்சியில்தான் அமைந்திருக்கிறது.

ஆனால் நமக்கு இந்த ஆராய்ச்சி தேவையில்லை. வைத்திய நிபுணர்களிடமே அதை விட்டுவிடுவோம். ஏனெனில், இந்தச் சதைத்துண்டு மனிதனின் உயிரோட்டத் துக்குத் தேவையான முக்கிய வேலையைச் செய்தாலும், இந்த மாமிசத் துண்டுதான் மனிதனுக்குச் சிறப்பைக் கொடுக்கிறது என்று சொல்ல முடியாது. உயிருள்ள மனித னிடம் மட்டுமல்ல, உயிரற்ற வெற்றுடலிலும் இந்த மாமிசத் துண்டு இருக்கத்தான் செய்கிறது. மனிதனை விடுங்கள். மிருகங்களுக்கு இந்தச் சதைத் துண்டு கிடை யாது என்றா எண்ணுகிறீர்கள்? அது தவறு. உங்களுக் கிருப்பது போல் அவற்றிற்கும் அது இருக்கிறது. எப்போதும் துடிக்கிறது.

நெஞ்சைப் பிளந்து பாருங்கள், இந்த உள்ளத்தின் தோற் றத்தையும் இயக்கத்தையும் உங்களால் பார்க்க முடியும். நீங்கள் மட்டுமல்ல - தெருவில் திரியும் நாயும், வனத்தில் வதியும் புள்ளினமும் இந்த மாமிசப் பிண்டத்தைப் பார்த்தறியும் ஆற்றல் பெற்றவைதாம்!



இந்த மாமிசத் துண்டைப் பற்றிய ஆராய்ச்சி உலகியல் அறிவுகளில் ஒன்று. இது ஆத்மீக வழிக்குப் பயன்படாது. எனவே உள்ளம் என்ற வார்த்தைக்கு நான் வேறொரு பொருள் கொடுக்கிறேன். இந்த நூலில் உள்ளம் என்ற வார்த்தை எங்கு வந்தாலும், அதற்கு அடியில் இடம்பெறப் போகும் பொருளைத்தான் நீங்கள் கொள்ளவேண்டும். உணர்ச்சியற்ற வெறும் சதைத்துண்டு நம்முடைய நூலில் கண்டிப்பாய் இடம் பெறாது.

உள்ளம் என்ற இந்தச் சதைத் துண்டில் அற்புதமான சக்தி ஒன்று உண்டு. தெய்வீகம் பொருந்திய இந்த சக்தி உள்ளம் என்ற மாமிசப் பிண்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இந்த ஆத்மீக ஆற்றல்தான் மனிதனின் சிறப்புக்கே அடிப்படைக் காரணம். இந்த ஆற்றல் மனிதனைத் தவிர்த்து வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது.

இந்த ஆற்றலை நான் மனிதனின் அந்தரங்கம் என்று துணிந்து குறிப்பிடுகிறேன். இந்த ஆற்றல்தான் அனைத்தை யும் அறிகிறது. படைத்தவனை அறியும் பேறும் படைக்கப் பட்டவற்றை ஆராயும் பேறும் இந்த ஆற்றலுக்குத்தான் உண்டு.

இந்த நூலில் உள்ளம் என்ற வார்த்தை எங்கு வந்தாலும் அதற்கு இந்தத் தெய்வீக ஆற்றலைத்தான் நீங்கள் பொருளா கக் கொள்ளவேண்டும்.

இப்போது நீங்கள் நன்கு உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். மேற்குறிப்பிட்ட விரிவுரையை வைத்துப் பார்க்கும்போது, உள்ளம் என்ற வார்த்தைக்கு இரண்டு பொருள்கள் உண்டாகின்றன. மாமிச உள்ளம்; தெய்வீக உள்ளம்!

**மாமிச உள்ளம்:** இது மனிதனுக்கு மட்டுமின்றி மிருகங்களுக்குமுண்டு. காற்றில் பறக்கும் பறவை இனம், கடலில் நீந்தும் மீனினம், தரையில் வாழும் புள்ளினம் இவை அனைத்துக்கும் இந்த உள்ளம் உண்டு. எனவே இது மனிதனுடைய சிறப்பை எந்த விதத்திலும் உயர்த்தாது.

**தெய்வீக உள்ளம்:** இது அபாரமான ஆற்றல் படைத்தது. விண்ணையும், மண்ணையும் அளந்து பார்க்கும் ஆற்றல் இதற்குண்டு. இந்த உள்ளம் மனித இனத்தைத் தவிர்த்து வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது.

''மாமிச உள்ளத்துடன் இந்த ஆத்மீக உள்ளம் தொடர்பு கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டீர்களே, இந்தத் தொடர்பு எத்தகையது?''என்று நீங்கள் கேட்கலாம்.

உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் குழப்பம் பெரும் பாலோரை வதைத்துக் கொண்டிருக்கிறது. இந்த வினாவிற் குரிய விடையைத் தெளிவாக உணராததால் அவர்கள் வீணான கற்பனையில் காலம் கழிக்கிறார்கள். உண்மை யான நிலையைத் தெரிந்துகொள்ள முடியாமல் அவர்களின் உள்ளங்கள் திகைக்கின்றன.

மரத்திலுள்ள இலைகளையும் செடியிலுள்ள மலர்களை யும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். பச்சைப் பசேலென்ற ஓர் இலையை எடுத்துக் கொள்ளுங்கள். பச்சை நிறம் இலை யுடன் எப்படித் தொடர்பு கொண்டிருக்கிறது? கண்ணைப் பறிக்கும் வர்ணங்களுக்கும் மலர்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு எத்தகையது? - இந்த உவமானத்தை வைத்து உண்மையை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். வர்ணங்கள் இலைகளுடனும் மலர்களுடனும் தொடர்பு



கொண்டிருப்பதுபோல், ஆத்மீக உள்ளம் மாமிச உள்ளத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது.

பளிங்கு போன்ற ஆற்றுத் தண்ணீரை நீங்கள் பார்த்திருக் கிறீர்கள் அல்லவா? தண்ணீரைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். பள்ளத்தை நோக்கி ஓடும் தன்மை அதற்குண்டு. இந்தத் தன்மை எப்படி நீருடன் கலந்து நிற்கிறதோ, அப்படித்தான் மாமிசப் பிண்டத்துடன் ஆத்மீகம் கலந்து நிற்கிறது.

நீங்கள் கேட்ட கேள்விக்கு இதைவிட விரிவாகப் பதில் எழுத நான் தயாராயில்லை! ஏனெனில் விரிவாக எழுத ஆரம்பித்தால், அந்த விரிவுரை மனிதனின் உயிரைப்பற்றிய மர்மங்கள் அனைத்தையும் வெளியில் கொண்டு வந்து விடும். இதனால் பல விபரீதங்கள் ஏற்பட வழியுண்டு. இந்த மர்மங்கள் அனுபவத்தினாலும் மனப் பயிற்சியி னாலும் தெரிந்துகொள்ள வேண்டியவை. அவற்றை நூல்களில் இடம்பெறச் செய்வது முற்றிலும் தவறு.

என்னால் எப்படி அந்த மர்மங்களைப் பகிரங்கப்படுத்த முடியும்? பெருமானாரே இந்த மர்மங்களைத் தெளிவு படுத்தாத போது நான் மட்டும் இந்தக் காரியத்திற்கு எப்படி துணிய முடியும்?

அவற்றை நீங்கள் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டால் முன்னோரின் நூல்களை ஆராயுங்கள். மனப்பயிற்சியில் ஈடுபடுங்கள்! இறை சிந்தனையில் பொழுதைக் கழியுங்கள்! மனத்தைக் கண்ணாடியாக்குங்கள்! அப்புறம் உங்களுக் கொரு வாய்ப்பு உண்டு. இந்த மர்மக் கடலிலிருந்து சிறிதளவாவது நீர் பெறும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம்.

## உயிர்

கண்ணுக்குத் தெரியாத அரூபியான ஒரு பொருள், தெய்வீகத் தன்மை பொருந்திய இந்த ஆற்றல் உள்ளத்தின் நடுப்பகுதியிலுள்ள இடைவெளியிலிருந்து உருவாகிறது. அபார சக்தி பொருந்திய இந்த அரூபப் பொருள் நரம்புகளின் வாயிலாக மனிதனின் உடல் முழுவதும் பரவுகிறது. விரைவாகப் பரவும் இந்தத் தெய்வீகத்தன்மை கண்ணுக்குப் பார்வையைக் கொடுக்கிறது; காதுக்குக் கேள்வியைக் கொடுக்கிறது. உடலின் பகுதிகள் ஒவ்வொன்றிலும் இது நிறைந்து நிற்கிறது.

ஒரு மூலையிலுள்ள விளக்கின் ஒளி வீடு முழுவதும் பரவுவது போல் உயிர் என்ற இந்த ஆற்றல் உடல் முழுவதும் பரவுகிறது. வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒளி பரவி நிற்பதுபோல் உடலின் எல்லாப் பகுதிகளிலும் உயிரின் ஒளி பரவி நிற்கிறது. விளக்கின் காரணமாகச் சுவரிலும் சன்னலிலும் பிரகாசம் உருவாவது போல், உயிரின் காரணமாக உடல் முழுவதும் உணர்ச்சி உருவாகிறது. இந்த உணர்வைத் தான் நாம் ''உயிரோட்டம்'' என்று குறிப்பிடுகிறோம். உயிரற்ற வெற்றுடலுக்கு உணர்ச்சி ஏது?



உயிர் என்பது ஓர் ஆற்றல். உள்ளத்தின் வெப்ப நிலையிலிருந்து இது உருவாகிறது. இந்த வெப்பநிலையை இங்கு நாம் ஆராயவேண்டிய தேவையில்லை. அது வைத்திய நிபுணர்களின் வேலை. அவர்கள் மனிதனின் உடலுக்கு வைத்தியம் செய்கிறவர்கள். இவர்கள் தான் இந்த ஆராய்ச்சிக்குரியவர்கள். ஆனால் மனிதனின் உயிருக்கு வைத்தியம் செய்யும் அறிஞர் குலம் இத்தகைய ஆராய்ச்சியில் நேரத்தை வீணாக்காது. இந்த வைத்திய நிபுணர்கள் மனிதனை இறைவனுக்கருகில் அழைத்துச் செய்வார்கள்.

உயிர் என்ற வார்த்தைக்கு மற்றொரு பொருளுண்டு. இந்தப் பொருளை 'உள்ளம்' என்ற அத்தியாயத்தின் இறுதியில் விவரித்திருக்கிறேன். அபாரமானதொரு சக்திக்கு அறிஞர் குழாம் உயிர் என்று பெயரிடுகிறது. விண்ணையும் மண்ணையும் அளந்து பார்க்கும் பேராற்றல் இதற்குண்டு என்று முதலிலேயே நான் எழுதிவிட்டேன்.... நீங்கள் குழம்ப வேண்டியதில்லை. மேற்குறிப்பிட்ட நான்கு வார்த்தைகளில் ஒன்றின் பொருள் மற்றொன்றுக்கு உபயோகிக்கப் படுவதுண்டு என்று நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதை மறந்து விட்டீர்களா? உள்ளத்தில் சொல்லப்பட்ட பொருள் இந்தக் கட்டத்தில், உயிருக்கும் பொருந்துகிறது...

இதற்கு முந்திய அத்தியாயத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் 'தெய்வீக உள்ளம்' என்று ஆரம்பிக்கும் பத்தியிலிருந்து படித்துப் பாருங்கள்.

உள்ளத்திலிருந்து உருவாகும் இந்த ஆற்றல் மானிட அறிவுக்குப் புலப்படாத பல மர்மங்கள் நிறைந்தது.

''உயிரைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்பார்கள். அதற்கு நீர், 'உயிர் என்பது இறைவனின் காரியங்களில்

ஒன்றாகும்' என்று சொல்லிவிடும்!'' என்று திருமறை கூறுகிறது. இது பெருமானாருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. இன்றும் அதன் மூலத்தையும் அதன் தன்மை களையும் அறிந்தவர்கள் அரிது என்றே நான் எண்ணு கிறேன். பெரும்பாலான அறிஞர்கள் இந்தத் துறையில் தோல்வியடைந்து விட்டார்கள். இந்த ஆராய்ச்சியில் இறங்கும் போது மனிதனின் அறிவு திகைத்து நின்று தடுமாறுகிறது.

● ❖ ●

# உணர்ச்சி

'நப்ஸ்'* என்ற அரபிப்பதம் இங்கு இப்படிமொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இது சினம், காமம் முதலிய தன்மைகளின் கூட்டுப் பொருள். இந்தக் கூட்டுப் பொரு ளைப் பற்றிய விரிவுரை உரிய கட்டத்தில் இடம் பெறும். இதற்குத்தான் மெய்ஞ்ஞானிகள் 'நப்ஸ்' என்று பெயரிடு கிறார்கள். அனேக சமயங்களில், இந்தப் பொருளில்தான் அவர்கள் 'நப்ஸ்' என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்கள்.

''நப்ஸுடன் போராடவேண்டும்; 'நப்ஸை' முறியடிக்க வேண்டும்!'' என்று அவர்கள் குறிப்பிடுவதுண்டு. இதற்குப்

* *'நப்ஸ்' என்ற வார்த்தையை நான் உணர்ச்சி என்று மொழி பெயர்த்திருக்கிறேன். ஆனால் இது நேரடியான மொழி பெயர்ப்பல்ல. 'நப்ஸ்' என்ற பதத்திற்குப் பல பொருள்கள் உள்ளன. உயிர், மூச்சு, ஆசை, மனம் - இப்படி எத்தனையோ பொருள்கள் அதற்குண்டு. என்றாலும், அடுத்துவரும் விரிவுரையை வைத்துப் பார்க்கும்போது, 'உணர்ச்சி' என்ற ஒரு வார்த்தையைத் தவிர்த்து மற்ற எதுவும் பொருத்தமாகத் தெரியவில்லை. அரபிய இலக் கணமும் இதற்கு ஓரளவு துணை செய்கிறது. உணர்ச்சி வசப்பட்டவனை அரேபியர்கள் 'நப்ஸுக்கு அடிபணிந் தவன்' என்று குறிப்பிடுகிறார்கள். எனவேதான் 'நப்ஸ்' என்ற மூலநூலின் அரபிப் பதத்திற்கு 'உணர்ச்சி' என்று நான் பொருள் கொடுத்திருக்கிறேன்.*

பொருளென்ன? ''உணர்ச்சியுடன் போரிட்டு அதன் வேகத்தைக் குறைக்க வேண்டும்'' என்பதே பொருள்.

''உங்கள் உடலிலுள்ள 'நப்ஸ்'தான் உங்களுக்குக் கொடிய விரோதி!'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள். காமம், சினம் முதலிய உணர்ச்சிக் கூட்டத்தைத்தான் அவர்கள் இங்குக் குறிப்பிடுகிறார்கள்.

'நப்ஸ்' என்ற அரபிப் பதத்திற்கு உணர்ச்சி என்று நாம் பொருள் கொடுத்தோம். அந்தப் பதத்திற்கு மற்றொரு பொருளும் உண்டு. அதை இப்போது பார்ப்போம்.

சில வேளைகளில் 'நப்ஸ்' என்ற பதம் மனிதனுக்கே சொல்லப்படுவதுண்டு.* என்றாலும், மனிதன் என்ற

** 'நப்ஸ்' என்ற அரபிப் பதத்திற்கு இமாம் கஸ்ஸாலியவர்கள் இரண்டு பொருள்கள் கொடுக்கிறார்கள். உணர்ச்சி மனிதன்! முதற் பொருளை ஓரளவு விவரித்த பிறகு அவர்கள் இரண்டாவது பொருளுக்கு வருகிறார்கள். வெளிப்படையாகப் பார்க்கும்போது குழப்பம் ஒன்றும் கிடையாது. ஆனால், கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால் இதில் பல சிக்கல்களும் கேள்விகளும் உற்பத்தியாகின்றன.*

*இதுமுதல் கேள்வி: ''...'நப்ஸ்' என்றால் மனிதன் என்று பொருள். மனிதன் என்றால் பொருள் என்ன?''*

*கை, கால், தலை முதலிய அவயங்களுடன் கூடிய ஓர் உயிரினத்தை நாம் மனிதன் என்று அழைக்கிறோம். அப்படியானால் கையற்ற மனிதனை எப்படி அழைப்பீர்கள்? மனித இனத்தை விட்டே அவனை நீக்கிவிடுவீர்களா? கண்ணற்ற குருடனை 'மனிதனல்லன்' என்று தீர்மானித்து விடுவீர்களா? இங்கு நம் மனம் குழம்புகிறது; அறிஞர்களிடையிலும் குழப்பம் தான் .*



பொருளைத் தாங்கிவரும் 'நப்ஸ்' எல்லா நேரத்திலும் ஒரேவிதமாக இருப்பதில்லை. அதற்கு ஏற்படும் சூழலை யொட்டி அதன் பெயர் மாற்றமடையும். சில சமயம் அது இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து அமைதியோடு செயலாற்றுவதுண்டு. அப்போது அதற்கு 'அமைதி கொண்ட மானிடத் தன்மை' என்று பெயரிடலாம். அரபி மொழியில் 'அந்நப்ஸுல் முத்மயின்னா' என்று பெயரிடப்படுகிறது.

''அமைதி கொண்ட 'நப்ஸே' உன்னுடைய இறைவனிடம் திரும்பிச் செல்வாயாக!'' என்று திருக்குர்ஆன் பாராட்டுகிறது.

இந்த இறை வசனத்தில் 'நப்ஸ்' என்ற வார்த்தைக்கு உணர்ச்சி என்று நிச்சயமாய்ப் பொருள் கொடுக்க முடியாது. ஏனெனில் சினம், காமம் முதலிய உணர்ச்சிகள் இறைவனின் அன்பை அழிப்பவை. அவற்றிற்கு இறைவனை அணுகும் ஆற்றல் கிடையாது. இந்தக் கட்டத்தில் 'நப்ஸ்' என்ற பதத்துக்கு மனிதன் என்றும் மானிடத் தன்மை என்றும் தாராளமாகப் பொருள் கொள்ளலாம். மானிடத் தன்மைக்கு இறைவனை அணுகும் பேறு நிச்சயம் உண்டு.

*சிலர் இப்படிக் கூறினார்கள்: ''கை, கால், தலை முதலிய உறுப்புகளுடன் கூடிய சதைப் பிண்டத்திற்குத்தான் மனிதன் என்று பெயர். 'நப்ஸ்' என்ற வார்த்தை மனிதனின் உடலைத்தான் குறிக்கும்....'' இந்தக் கருத்து நமக்கு நன்றாகப் புரிகிறது. மனிதன் நடந்தான் என்று நீங்கள் சொல்லும்போது உங்கள் வார்த்தை அவன் உடலைத்தானே குறிப்பிடுகிறது? 'சுல்தான் ஓடினான்' என்று நாம் குறிப் பிடும்போது, சுல்தான் என்ற மனிதனின் உடலைத்தான் நாம் மனதில் கொண்டிக் கிறோம்? ஆனால் இது தவறு. எனவே வேறுசில அறிஞர்கள்*

இன்னும் சில சமயம் அதன் தன்மை அமைதி இழப்பதுண்டு. என்றாலும், தீய உணர்வுகளையும் மார்க்கத்திற்கு முரணான எண்ணங்களையும் அது வன்மையாக இகழ ஆரம்பிக்கும். இந்தக் கட்டத்தில் 'அந்நப்ஸுல் லவ்வாம' என்று பெயரிடப்படுகிறது. தமிழில் 'மனச்சாட்சி' என்று குறிப்பிடலாம். அதன் வேலையே இதுதானே? மனச்சாட்சியின் குரலுக்குப் பதில் குரல் கொடுக்க முடியாமல் எத்தனை குற்றவாளிகள் இம்மையிலேயே நரகத் தண்டனை அனுபவிக்கிறார்கள்!.

''மனச் சாட்சியின்மீது ஆணையாக..'' என்று திருமறை கூறுகிறது.

இன்னும் சில வேளை அந்த மானிடத்தன்மை முற்றிலும் இறை வழிக்கு முரணாக இயங்குவதுண்டு. இந்தக் கட்டத்தில் 'அந்நப்ஸுல் அம்மாரா' என்ற பெயர் அதற்குக் கிடைக்கிறது. 'தீமையை செய்யத் தூண்டும் தன்மை' என்று

---

இதை மறுக்கிறார்கள். ''மனிதன் என்றால் உடலல்ல. நான் என்ற வார்த்தை எதைக் குறிக்கிறதோ, அதுதான் மனிதன்!'' உயிரற்ற வெற்றுடலை யாரும் மனிதன் என்று சொல்வதில்லையே! பாரூக் என்பவர் இறந்துவிட்டால், அவருடைய வெற்றுடலுக்கு நாம் என்ன பெயர் சொல்கிறோம்? பாரூக்கின் கட்டை என்றுதானே சொல்கிறோம். அப்படியானால் பாரூக் என்ற மனிதன் யார்? அந்த வார்த்தை யாரைக் குறிக்கிறது? 'நான் பேசினேன்' என்று நீங்கள் சொல்லும்போது, உங்கள் வாக்கியத்திலுள்ள 'நான்' என்ற பதம் எந்தப் பொருளைக் குறிக்கிறதோ அதுதான் 'நப்ஸ்'. அதைத்தான் இமாமவர்கள் மனிதன் என்று குறிப்பிடுகிறார்கள். மனிதனின் உடலை அவர்கள் குறிப்பிடவில்லை.



அர்த்தம். இந்தக் கட்டத்தில் மட்டிலும் நப்ஸுக்கு உணர்ச்சி என்று பொருள் கொடுக்கலாம். காமம், சினம் ஆகிய உணர்ச்சிகள் மனிதனைத் தீய வழிக்குத்தானே தூண்டுகின்றன.

''நப்ஸ்' என்பது தீயவற்றைச் செய்யத் தூண்டக் கூடியதாகும்..'' என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இங்கு 'நப்ஸ்' என்ற பதத்துக்கு உணர்ச்சி என்று பொருள் கொடுக்கலாம். உணர்ச்சி என்ற பொருளைத் தாங்கி வரும் 'நப்ஸ்' இறைவனின் வெறுப்புக்கு இலக்காகிறது. மனிதத் தன்மை என்ற பொருளைத் தாங்கிவரும் 'நப்ஸ்', அவன் அன்புக்கு அருகதையாகிறது.

● ❖ ●

# பகுத்தறிவு

இங்கு, 'அக்ல்'' என்ற அரபிப் பதம் பகுதத்றிவு என் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், இந்தப் பதத்திற்கு பொருள்கள் பல உள்ளன. அவற்றை எல்லாம் 'அறி ஙங்கள்' நூலில் விவரித்திருக்கிறேன். அவற்றை மீண்டு இந்த நூலில் விவரிப்பது வீண்வேலை. 'உள்ளத்தின் விந் கள்' என்ற இந்த நூலில், 'அக்ல்' என்ற வார்த்தை பகு தறிவு என்ற அர்த்தத்தில்தான் உபயோகிக்கப்படுகிறது.

நேர்மையையும், முரணையும் பிரித்தறியும் ஆற்றலை தாம் நாம் பகுத்தறிவு என்று குறிப்பிடுகிறோம். கண்ணு குத் தெரியாத இந்த ஆற்றல் மண்ணிலுள்ள அனைத் யுமே எடைபோடுகிறது. இது மர்மமானவற்றை எல்லா சுத்தமாக அறிந்து கொள்ளத் துடிக்கிறது.

சில சமயம் இதற்கு வேறொரு பொருளும் சொல்ல படுவதுண்டு. அறிவு என்பது ஓர் ஆற்றல். இந்த ஆற்ற மனிதனின் உள்ளுறுப்பு ஒன்றில் அமைந்திருக்கிறது. எந் உறுப்பில் பகுத்தறிவாற்றல் அமைந்திருக்கிறதோ அந் உறுப்பையே 'அக்ல்' என்று அழைப்பதுண்டு.

''இறைவனின் படைப்புகளில் முந்தியது 'அக்ல்'தா என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள். பகுத்தறிவி இயக்கத்துக்கு நிலைக்களனான உறுப்பே இங்கு குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் பகுத்தறிவு என்பது ஓ



ஆற்றல்; இதற்கு உருவம் கிடையாது. சடப்பொருளின் துணையின்றி அது உண்டாகவும் முடியாது. இலையில் நிறம் கலந்திருப்பதுபோல் குறிப்பிட்ட ஓர் உள்ளுறுப்பில் பகுத்தறிவு கலந்திருக்கிறது. இலையின்றி இலையின் நிறம் மட்டும் எப்படி உருவாக்கப்பட முடியும்? எனவே பெருமானார் இறைவனின் படைப்புகளில் முந்தியது பகுத்தறிவுக்குரிய இடமாகிய ஓர் உறுப்புத்தான் என்று குறிப்பிடுகிறார்கள். ஏனெனில், பகுத்தறிவு எனப்படும் உருவற்ற ஆற்றல் முதற் படைப்பாக இருக்க முடியாது.

போகப் போக உங்களுக்குத் தெளிவு ஏற்பட வேண்டும் என்பதற்காக, இந்நூலில் அதிகமாக அடிபடக் கூடிய நான்கு வார்த்தைகளையும் ஓரளவு விளக்கி விட்டேன். சிக்கலுக்கும், சிரமத்துக்கும் வழி வகுக்கும் இந்த வார்த்தைகளை நீங்கள் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் இந்த நூலை உங்களால் சுத்தமாக உணர முடியும். எனவே நீங்கள் படித்துமுடித்த சில பக்கங்களைத் தயவுசெய்வு திரும்பிப் படியுங்கள்.

இந்த நான்கு வார்த்தைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாததால் அனேகர் இறை வழியில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறியாமை நீங்க வேண்டும் என்பதற்காகவே இந்த நூலின் ஆரம்பத்திலேயே அவற்றிற்கு இடம் கொடுத்து விட்டேன்.

இறைவனையும் உலகிலுள்ள மர்மங்களையும் ஆராய்ந்தறியும் பேராற்றல் ஒன்று மனிதனிடம் உண்டு என்பதை ஆரம்பத்திலேயே நான் எழுதிவிட்டேன். அந்த ஆற்றலைச் சிலர் உயிர் என்று குறிப்பிடுகிறார்கள். பகுத்தறிவு என்று சொல்பவர்களும் உண்டு. சில வேளைகளில் அந்த ஆற்றலுக்கு உள்ளம் என்று பெயர் சொல்லப்படுகிறது. வேறுசில

சமயம் அதற்கு உணர்ச்சி என்றும் பெயரிடப் படுகிறது.

இந்தக் கட்டத்தில் நீங்கள் இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராயவேண்டும். இதுவரை நாம், 'கல்ப்', 'ரூஹ்', 'நப்ஸ்', 'அக்ல்' ஆகிய நான்கு வார்த்தைகளையும் நன்கு ஆராய்ந்து விட்டோம். இவற்றிற்கு முறையே உள்ளம், உயிர், உணர்ச்சி, பகுத்தறிவு என்று நாம் பொருள் கொடுத்திருக் கிறோம்.

இந்த இடத்தில் 'இறைவனையும் மர்மங்களையும் அறியும் ஆற்றல்' நம் கவனத்தைக் கவர்கிறது. இது என்ன ஆற்றல்? இது மேற்குறிப்பிட்ட வார்த்தைகளில் எதற்குப் பொருள்? அந்த நான்கு வார்த்தைகளுக்குமே இதைச் சிலவேளை பொருளாகக் கொள்ளலாம். இந்த அளவுக்கு நீங்கள் முதலில் உணர்ந்துகொள்ளுங்கள். அதுபோதும் உங்களுக்கு!

திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் 'உள்ளம்' என்ற வார்த்தை இடம்பெறுகிறது. அதற்குப் பகுத்தறிவு என்பதே பொருள். பெரும்பான்மை இப்படித்தான் பொருள் கொள்ளப்படுகிறது. சில சமயங்களில் அதற்கு 'உள்ளம் எனப்படும் சதைத் துண்டு' என்று பொருள் கொடுப்பதும் உண்டு. ஏனெனில் மனிதனின் நெஞ்சுக் கூட்டுக்குள்ளிருக்கும் இந்தச் சதைத்துண்டுக்கும் பகுத்தறிவுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. உள்ளத்தின் வாயிலாகவே பகுத்தறிவு அவயவங்களுடன் தொடர்பு கொள்கிறது. உள்ளத்தின் கட்டளைக்குப் பிறகு தானே மனிதனின் உறுப்புக்கள் இயங்குகின்றன. இதை உரிய இடத்தில் விரிவாக ஆராய்வோம்.

# உள்ளத்தின் ஆற்றல்

''உம்முடைய நாயனின் சைனியத்தை அவனைத் தவிர்த்து வேறு யாராலும் அறிய முடியாது!'' என்று திருக்குர்ஆன் கூறுகிறது. சர்வ சக்தனான இறைவன் ஆற்றல் நிறைந்த ராணுவத்தை ஏற்படுத்தியிருக்கிறான்! இந்த ராணு வத்தில் வேலை செய்கிறவர்கள் யார் தெரியுமா? வான வர்கள்! அவர்கள் தாம் இந்தச் சைனியத்தில் சேர்ந்து இறைவ னின் கட்டளையை முறைப்படி நிறைவேற்றுகிறார்கள்.

அவர்கள் தாம் லூத் நபியின் காலத்தில் தரையைத் தலைகீழாகப் புரட்டினார்கள். அந்தச் சைனியம்தான் பெருமானாரின் காலத்தில், பத்ர் யுத்தத்தில் இஸ்லாமியச் சைனியத்துக்கு உதவி புரிந்தது. இது இறைவனுடைய கட்டளையின் அடிப்படையில் இயங்கும் சைனியம். அவன் கட்டளையைப் புறக்கணிக்கும் துணிவு இந்தச் சைனியத்திற்குக் கிடையாது.

இறைவன் தனக்கென்று ராணுவத்தை அமைத்துக் கொண்டிருப்பதுபோல், அவன் மனிதனின் உள்ளத்திற்கும் அவனது உயிருக்கும் தனித்தனியே ராணுவங்களை அமைத் துக் கொடுத்திருக்கிறான். வானவர்களால் உருவான ராணுவம் இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பது போல் உள்ளத்தின் ராணுவம் உள்ளத்தின் கட்டளைக்கு முற்றிலும் அடிப்பணிந்து நடக்கிறது.

உள்ளத்திற்கு இரண்டு ராணுவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று கண்ணுக்குத் தெரியும் ராணுவம். மற்றொன்று, கண்ணுக்குத் தெரியாத ராணுவம். இந்த இரண்டையும் முறையே நாம் ஆராய்வோம்.

**கண்ணுக்குத் தெரியும் ராணுவம்:** இந்த ராணுவம்தான் மனிதனின் புறஅழகுக்கு அணி செய்கிறது. கை, கால், கண், காது, நாக்கு முதலியவற்றைத்தான் ராணுவம் என்று குறிப்பிடுகிறேன்.

இந்த அவயவங்கள் அனைத்தும் முதலில் நான் எழுதியபடி, உள்ளத்திற்குக் கட்டுப்பட்டிருக்கின்றன. உள்ளத்தின் கட்டளைக்கு அடிபணிகின்றன. அதன் கட்டளையைப் புறக்கணிக்கும் திறன் இவற்றில் எதற்கும் கிடையாது. உள்ளத்தின் திருப்திக்கு மாற்றமாக இந்த அவயவங்கள் என்றைக்குமே இயங்கமாட்டா; அவற்றால் அப்படி இயங்கவும் முடியாது.

பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உளளத்தில் ஏற்படும்போது கண்கள் பார்க்கின்றன. உள்ளம் ''பேசு'' என்று நாவைப் பார்த்துக் கட்டளையிடும்போது நாவு இயங்குகிறது. வார்த்தைகள் வெளிப்படுகின்றன. நடக்க வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் ஏற்படுவதற்கு முன் கால்கள் ஓரங்குலமும் நகரமாட்டா.

வானவர்கள் இறைவனுக்கு எப்படிக் கட்டுப்பட்டிருக்கிறார்களோ, அப்படித்தான் மனிதனின் அவயவங்கள் அவன் உள்ளத்திற்குக் கட்டுப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஒரே ஒரு வேற்றுமை; இறைவனுக்குக் கட்டுப்படும் வானவர்கள் தங்களுடைய நிலையை நன்கு உணர்



கிறார்கள். இறைவனின் கட்டளைகள் தம்மால் நிறைவேற்றப்படுகின்றன என்று அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் மனிதனின் அவயவங்களுக்கு இந்த உணர்வு கண்டிப்பாய்க் கிடையாது. அவை வெறும் சதைத் துண்டுகள். தம் நிலையையும், தம்மால் உள்ளத்தின் கட்டளை நிறைவேற்றப்படுகிறது என்பதையும் அறியும் ஆற்றல் அவற்றிற்குக் கிடையாது. உள்ளத்தில் எண்ணம் ஏற்பட்டதும் கால்கள் நடக்கின்றன. தாம் நடப்பதாக அந்தக் கால்களுக்குத் தெரியவா போகிறது? காலுக்கு என்று தனிப்பட்டதொரு பகுத்தறிவு இருக்கிறதா என்ன? எழுத்தாளனின் வலக்கரத்திலுள்ள பேனாவைப்போல் உள்ளத்தின் பிடியில் அவயவங்கள் கட்டுண்டிருக்கின்றன.

எழுத்தாளனின் அறிவுத் திறன் பேனாவின் வாயிலாகக் காகிதங்களுக்கு வருகிறது. எத்தனையோ அமர காவியங்களைப் பேனா உருவாக்குகிறது. ஆனால் அந்தப் பேனாவுக்குத் தன்னுடைய நிலை தெரியவா போகிறது? தன்னால் உருவாக்கப்பட்ட அரிய நூல்களில் ஒரு வரிகூட அதற்குத் தெரியாது. தான், எழுத்தாளன் ஒருவனின் வலக்கரத்திலிருந்து வேலை செய்வதாகக்கூட அதற்குத் தெரியாது. ஏனென்றால் பேனாவுக்கு உள்ளமோ, பகுத்தறிவோ கிடையாது.

தனக்கு அவயவங்கள் கட்டுப்பட்டிருக்கின்றன என்ற உண்மை நிலை உள்ளத்திற்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் பகுத்தறிவுக்கும் உள்ளத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு என்று நான் சொல்லவில்லையா? ஆனால் இந்தத் தெளிவு காலுக்கோ கைக்கோ மற்ற அவயவங்களுக்கோ கிடையாது; காரணம் அவற்றிற்கு உள்ளமும் கிடையாது; பகுத்தறிவும் கிடையாது.

''இத்துணை ஆற்றல் வாய்ந்த உள்ளத்திற்கு அவயவ களால் என்ன நன்மை? அவற்றின் சேவையால் அதற் என்ன பயன்?'' என்று நீங்கள் கேட்கலாம்.

உள்ளம் என்பது புனிதமான ஒன்று. அது புனிதமா ஒரு குறிக்கோளையொட்டிப் படைக்கப்பட்டிருக்கிற இறைவனை அறியும் ஆற்றல் அதற்குண்டு என்று ஆரம்ப தில் பார்த்தோம். இறைவனை அறிந்து அவனை அடைய புனித வழியில் அது நடைபோடுகிறது. இறைவனை அடைவதுதான் அதன் குறிக்கோள்.

ஆனால் இந்தக் குறிகோளை அடைவது அப்ப ஒன்றும் இலகுவான காரியமல்ல. அது ஓய்ச்சல் ஒ வில்லாமல் இறைவனை வணங்க வேண்டும். நற்காரிய கள் பல செய்ய வேண்டும். நல்லெண்ணம் உள்ளத்தி தான் உருவாகிறது. என்றாலும் நற்செயல்கள் அவயவ களால்தானே உருவாகின்றன? உங்கள் மனத்தில் பக் உருவாகிறது. ஆனால் பாங்கொலி கேட்டதும் பள்ளிக்கு சென்று வணங்குவது உங்கள் உடல்தானே? உள்ளம் சிறப் வாய்ந்ததாக இருந்தாலும் அதற்கு உடலின் தேவையுண்டு உடல் இல்லாமல் உள்ளத்தால் தனித்து நிற்க முடியாது ''என்னை வணங்குவதற்கே மனிதனையும் ஜின்னையு நான் படைத்தேன்'' என்கிறான் இறைவன். மனித உலகில் வாழ்கிறான். உலகிலேயே அவன் இறைவனை வணங்க வேண்டும். இம்மையை அவன் மறுமைக்கு பயன்படுத்த வேண்டும். இதற்காகவே உள்ளம், அவயவ களைத் தனக்குக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிற

இறை வணக்கத்திற்கும் நற்காரியங்களுக்கும் உட தேவைதான். ஆனால் அந்த உடல் ஆரோக்கியத்துடனு இருக்க வேண்டும். நோயுற்று நலிந்துபோன உடலை



வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? அரைமணி நேரம் அது இறைவனை வணங்கினால் அறுபது மணி நேரம் பாயில் படுத்துக் கொண்டு விடுமே! ஒரு நாளைக்கு நோன்பு பிடித்தால் அது ஒரு மாதத்திற்கு இடுப்பைப் பிடித்துகொள்ளுமே!

எனவே இந்தக் கட்டத்தில் ஆரோக்கியத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்படுகிறது. ஆரோக்கிய மான உடல் இருந்தால்தான் நம்மால் இறைவனை முறைப் படி வணங்க முடியும். இதனால்தான் ஆரோக்கியத்திற்கு ஊறு செய்யும் செயல்களையும் உணவு வகைகளையும் இஸ்லாம் தடுத்திருக்கிறது.

ஆரோக்கியத்தோடு வாழ்வது எப்படி? நீங்கள் ஆரோக்கியத்தோடு வாழ விரும்பினால் சத்துள்ள உணவை உட்கொள்ளுங்கள்; தினம் குளியுங்கள்; தேவையின் அளவுக்குத் தூங்குங்கள்; நல்ல காற்றைச் சுவாசியுங்கள்; குளிர்ச்சிதரும் காட்சிகளைக் கண்டு களியுங்கள்...

ஆனால் மேற்குறிப்பிட்ட வேலைகளை எல்லாம் உங்கள் வெளியுறுப்புகள் செய்கின்றனவேயன்றி உங்கள் உள்ளம் செய்வதில்லை. உங்கள் உடல்தான் குளிக்கிறது. உள்ளத்திற்குக் குளிப்புத் தேவையில்லை. நீங்கள் உண் கிறீர்கள்; ஆனால் இது கையும் வாயும் சேர்ந்து செய்யும் வேலை. உள்ளத்திற்குப் பசி கிடையாது. நீங்கள் உறங்கு கிறீர்கள்; இது உங்கள் கண்களின் வேலை. உள்ளத்திற்கு உறக்கமேது? அது உறங்கி விட்டால் உங்கள் உடலில் உயிர் ஏது?....

**கண்ணுக்குத் தெரியாத ராணுவம்:** இது உள்ளத்தின் ஆற்றல்களில் இரண்டாவது. இந்த இராணுவத்தில் பசி,

காமம், கோபம், தாகம், இரக்கம், பாசம் - இப்படிப்பல உணர்வுகள் இடம் பெற்றிருக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் மனிதனுக்கு ஒவ்வொரு சமயத்தில் பயன் தருகின்றது. உடலை ஆரோக்கியமாக வைப்பதற்குச் சத்துள்ள உணவை நீங்கள் உட்கொள்கிறீர்கள். ஆனால் பசியில்லையெனில் உங்களால் எப்படிச் சாப்பிட முடியும்? உங்கள் விரோதிகள் உங்கள் கையை வெட்டக் காத்து நிற்கிறார்கள். தற்காப்புக்குக் கோபம் பயன்படுகிறது. உள்ளத்தில் கோபம் பொங்கியதும் கால்கள் இயங்குகின்றன. உங்களை உங்கள் உள்ளம் எவ்வளவு திறமையுடன் காப்பாற்றுகிறது என்று பாருங்கள். உங்கள் எதிரியை உங்கள் கண்கள் பார்த்ததும் உள்ளம் உடனே கட்டளை பிறப்பிக்கிறது. சினம் பொங்குகிறது. கால்களும் கைகளும் தற்காப்புக்கு யுத்தம் செய்கின்றன. சினம் என்ற உள்ளாற்றலும், கை - கால்கள் என்ற புற ஆற்றலும் எத்தனை வேகமாக இயங்குகின்றன.

உள்ளத்திற்குப் பல்வேறு ஆற்றல்கள் உள்ளன. அவை அனைத்தையும் மூன்று பிரிவுகளில் கட்டுப்படுத்தலாம்.

**முதற்பிரிவு:** இதற்குத் 'தூண்டுபவை' என்று நாம் பெயரிடலாம். இந்தப் பிரிவில் காமம், கோபம் முதலிய உணர்ச்சிகள் இடம் பெறுகின்றன.

**இரண்டாம் பிரிவு:** இந்தப் பிரிவில் உடல் முழுவதும் பரவியிருக்கும் சக்தி இடம் பெறுகிறது. இந்தச் சக்திக்கு 'இயக்கும் ஆற்றல்' என்று நாம் பெயரிடலாம். இது ஒரு குறிக்கோளை அடைவதற்காக மனிதனின் அவயவங்களை வேகமாக இயக்குகிறது.



**மூன்றாம் பிரிவு:** 'துப்பறிபவை' என்று இந்தப் பிரிவுக்குப் பெயரிடலாம். பார்வை, கேள்வி, நுகர்வு, சுவை, ஸ்பரிசம் ஆகிய ஐந்து ஆற்றல்கள் இந்தப் பிரிவில் இடம் பெறுகின்றன. இவை எதிரிலுள்ள ஒவ்வொன்றையும் துப்பறிந்து உள்ளத்திற்குச் செய்தியனுப்புகின்றன.

இந்த ஐந்து ஆற்றல்களும் மாமிசத்தாலும் உதிரத்தாலும் ஆன அவயவங்களுடன் தொட்பு கொள்கின்றன. பார்வை, கண்ணுடன் தொடர்பு கொள்கிறது. சுவை, நாவுடன் சம்பந்தப்படுகிறது. கேள்வி, செவியால் உருவாகிறது இப்படியே பார்த்துக் கொள்ளுங்கள்...

உள்ளத்தின் ஆற்றல்கள் அனைத்தையும் விவரித்து முடிப்பது மிகச் சிரமமான ஒன்று. அதன் ஆற்றல்கள் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நூலே எழுதவேண்டும். இந்த ஆற்றல்களையும் அவற்றின் இயக்கத்தையும் பாமரர்கள் உணர்ந்து கொள்வது மிகச் சிரமம். இந்த நூல் பாமரர்களுக்காக எழுதப்பட்டதல்ல. அறிவுத் திறன்படைத்த சிந்தனையாளர்கள் படித்துணர வேண்டும் என்பதற்காகவே 'இஹ்யாவு உலூமித்தீன்' என்ற இந்த நூலை நான் எழுதுகிறேன். அறிஞர் குலமே புரிந்து கொள்ளாதவற்றைப் பாமரர்கள் எப்படிப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

என்றாலும், பாமரர்களின் நன்மையைக் கருதி அடுத்த அத்தியாயத்தில் உவமானங்கள் சிலவற்றைக் கொண்டு வரத் தீர்மானித்திருக்கிறேன். அந்த உவமானங்களின் உதவியால் உள்ளத்தின் நிலையை அவர்களால் ஓரளவு புரிந்துகொள்ள முடியும் என்று எண்ணுகிறேன்.

# உள்ளமும் உவமானமும்

சினமும் காமமும் உள்ளத்தின் ஆற்றல்களில் மிக முக்கியமானவை.இவை சில சமயங்களில் உள்ளத்தின் கட்டளைக்கும் பகுத்தறிவின் ஆக்கினைக்கும் உட்பட்டு நடக்கின்றன. அப்போது அவற்றினால் உள்ளத்திற்குப் பெரும் பயன் கிடைக்கிறது. இந்த நேரத்தில் உள்ளம் தங்கு தடையின்றி இறைவழியில் முன்னேறுகிறது.

ஆனால் எல்லா நேரத்திலும் அவை உள்ளத்திற்கு அடிபணிவதில்லை. சில வேளைகளில் அவை உள்ளத்தின் கட்டளைக்குப் பணிய மறுப்பதும் உண்டு. அப்போது அவற்றிற்கு உள்ளம் அடிமையாகிறது. அப்போது ஏற்படும் விபரீதங்கள் கணக்கிட முடியாதவை. உணர்ச்சிக்கு அடிமையானவர்கள் எத்தனை தூரம் பின்தங்கி விடுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா என்ன?

இந்தக் கட்டத்தில் தன் அறிவையும் திறனையும் முரண் வழிக்குப் பயன்படுத்துகிறான் மனிதன். காமத்தைத் தணிப்பதற்கு அவன் அறிவாற்றல் 'அருமை'யான பல வழிகளைச் சொல்லிக் கொடுக்கிறது. விரோதியைத் தீர்த்துக் கட்டுவதற்கு அவன் சிந்தனை புதிய வழியைக் கண்டுபிடிக்கிறது.



நாட்டில் நடக்கும் அட்டூழியங்களையும் குற்றங்களையும் நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் இதிலுள்ள உண்மை தெரியும். எத்தனையோ குற்றங்கள் நடக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஒரு குற்றவாளி கையாண்ட முறையை, அவனை அடுத்து வரும் குற்றவாளி கையாள்வதில்லை. ஒருவன் வழிப்பறி செய்தான் என்றால், மற்றொருவன் அரசாங்க அதிகாரியைப்போல் நடித்துக் கொள்ளையடிக்கிறான். ஒருவன் கத்தியால் கொலை செய்தால், மற்றொருவன் நஞ்சூட்டிய உணவால் கொலை செய்கிறான்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? இவர்கள் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டவர்கள். அவர்களின் உள்ளத்தை உணர்ச்சிகள் அடக்கியாள்கின்றன. இவர்களின் அறிவும் ஆற்றலும் குற்றம் புரிவதற்குப் புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கின்றன.

ஆனால் காமமும் கோபமும் இதற்காகப் படைக்கப்படவில்லை. அற்றிற்கு உள்ளம் அடிமையாவது எவராலும் வரவேற்க முடியாத ஒன்று. அவை என்றைக்குமே உள்ளத்துக்கும் பகுத்தறிவுக்கும் அடிமையாக இருக்க வேண்டியவை. அப்படித்தான் அவற்றை நீங்கள் பழக்க வேண்டும். இல்லையேல் அவற்றால் ஏற்படும் விபரீதங்கள் மிகப் பயங்கரமானவை!

உண்மையை உற்றுப்பார்த்தால் நம்மால் திருப்தி அடைய முடியவில்லை. மக்கட் திரளில் பெரும்பாலோர் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. ஆனால் அதன் குரலுக்கு அவர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை. எல்லாருக்கும் இருப்பது போல் அவர்களுக்கும் உள்ளம் உண்டு. ஆனால் அகிலத்தின் அற்புதங்

களை எல்லாம் அப்பட்டமாகப் பிரதிபலித்துக் காட்
வேண்டிய அந்த உள்ளம், காமத்தின் கட்டளைக்கடியி
இருளடைந்து கிடக்கிறது. சீரும் சிறப்புமாக வா
வேண்டிய அரசன் ஒருவன் மிக அற்பமான ஒ
சூழ்ச்சிக்காரனின் வலையில் வீழ்ந்து முடிதுறந்தது போல
அவர்களின் உள்ளம் பொன்னான ஆற்றல்களை எல்லா
இழந்து மண்ணில் கிடந்து புரள்கிறது.

சக்தி வாய்ந்த அரசன் ஒருவன் தன் ஆட்சிக்குட்பட்
பகுதியை நிர்வாகம் செய்து வருகிறான். ஆட்சி செலுத்
வதற்கு வேண்டிய எல்லாத் திறன்களும் அவனிட
அமைந்திருக்கின்றன. இந்த அரசனுக்கு நாம் உள்ளம் என்
பெயரிடுவோம். இவன் ஆட்சி செலுத்தும் நாட்டுக்கு உட
என்று பெயரிடலாம். நாட்டின் பொறுப்புகள் அத்தனை
கும் அரசன் அதிகாரியாக இருப்பதுபோல், உள்ளம் மனி
னின் சிறு சிறு அசைவுக்கும் அதிகாரியாக இருக்கிறது
உள்ளத்தின் தீர்ப்பு இல்லாமல் உடலில் எந்தப் பகுதியு
இயங்காது என்றுதான் உங்களுக்குத் தெரியுமே!

நாடாளும் மன்னனுக்குக் காவற்படை, ராணுவம்
துணை அதிகாரிகள் - இப்படிப் பலதரப்பட்ட தேவைகள்
ஏற்படுகின்றன. இதே போன்று உள்ளம் என்ற மன்ன
னுக்குப் பணியாட்கள் சிலர் தேவைப்படுகின்றனர். கை
கால்கள், கண், வாய் முதலிய உறுப்புகள் உள்ளத்திற்கு
பணியாட்களாகப் பயன்படுகின்றன.

நாடாளும் மன்னனுக்குப் புத்திசாதுரியமுள்ள மந்தி
இருப்பதுபோல் உடலாளும் உள்ளத்திற்கு ஒரு மந்தி
உண்டு. இந்த மந்திரிக்கு நீங்கள் பகுத்தறிவு என்று பெய
டுங்கள். இது எப்போதும் உள்ளத்திற்கு நல்லுபதேசம்
செய்கிறது - அசாத்தியக் கூறுகளை விளக்குகிறது.



''அரசே! அதைச் செய்யாதீர்கள். இந்த முயற்சியில் இறங்காதீர்கள்! இதனால் பல விபரீதங்கள் ஏற்படும். மார்க்கம் என்ற கோட்டையைக் காப்பாற்றுங்கள்'' என்று பகுத்தறிவு அறிவுரை கூறுகிறது.

''தயாங்காதரீகள் அரசே!'' என்று வேறொரு சமயம் அது எச்சரிக்கிறது. பார்வைக்கு இது மோசமாகப் பட்டாலும் இதில் பல நன்மைகள் உள்ளன. உடனே செயலாற்றுங்கள். இதனால் நாட்டுக்கும்,நாடாளும் மன்னருக்கும் நிறையப் பயனுண்டு...''

இந்த மந்திரியைச் சாதாரணமாக எண்ணிவிடாதீர்கள். இவன் ஆற்றல் மிகுந்தவன். அறிவுத் திறனுக்கும் குறை வில்லை. நல்வழி காட்டி நடத்திச் செல்வதற்குரிய முழுத் திறன் அவனிடம் உண்டு. அவன் ஒரு வார்த்தையை உதிர்த் தால் அதில் நிச்சயம் பயனிருக்கும். அவன் ஒரு காரியத்தை எச்சரித்தால் அதில் கண்டிப்பாய் அபாயம் இருக்கும். உள்ளம் என்ற அரசன் இந்த மந்திரியின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து நடந்தால் நாட்டில் அமைதியும் ஆனந்தமும் பரவும். குடிமக்கள் திருப்தியடைவார்கள். நாட்டுக்கு முன்னேற்றம் ஏற்படும். அரசனுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

மந்திரியையும் அவன் கருத்தையும் அரசன் புறகணித்து விட்டால், அரசனுக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள அனை வருக்குமே ஆபத்து ஏற்படுகிறது. மணிமுடியுடன் அரியாசனத்தில் வீற்றிருக்கும் அரசன் முடிதுறக்க வேண்டி ஏற்படும். அரண்மனையிலுள்ள அற்பமான வேலைக்காரன் ஒருவன் அரியாசனத்தில் அமர்வான். உள்ளம் என்ற அரசனின் வாய்க்கு முத்திரை போடப்படும். பகுத்தறிவு

என்ற மந்திரி சிறைக்குத் தள்ளப்படுவான். அவன் கருத்தையும் சிந்தனையையும் கேட்பதற்கு யாரும் இருக்க மாட்டார்கள். உள்ளத்தின் ஆற்றல்கள் நசுக்கப்பட்டு அதன் இடத்தில் காமம் அமரும்போது இப்படி எல்லாம் விபரீதம் ஏற்படுகிறது. உள்ளம் என்ற அரசன் முடி துறந்து விட்டான். காம உணர்ச்சி அரியாசனத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. முதலில் உள்ளத்திற்குக் கட்டுப்பட்டிருந்த அவயவங்கள் அனைத்தும் இப்போது புதிய அரசனான காமத்துக்குக் கட்டுப்படுகின்றன.

இப்படி ஓர் ஆட்சியைக் கைப்பற்றுவது அப்படி ஒன்றும் சாதாரணக் காரியமல்ல. இதை உடனுக்குடன் சாதித்துவிடவும் முடியாது. எனவே இந்தச் சதித்திட்டம் படிப்படியாக உருவாக்கப்படுகின்றது.

மந்திரிகள், அதிகாரிகள் புடைசூழ அரசன் அரியாசனத்தில் வீற்றிருக்கும்போது ஒருவன் சபைக்கு வருகிறான். இவன் அடிக்கடி சபைக்கு வந்து பங்கெடுத்துக் கொள்கிறான். இவன் யார் தெரியுமா? இந்த நாட்டுப் பிரஜைகளின் ஒருவன். வெளியிலிருந்து நாட்டுக்குத் தேவையான பொருள்களை இவன் கொண்டு வருகிறான். இவன் பெயர் தான் காமம்!

இவன் கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் நிர்வாகத்தில் தலையிடுகிறான். மந்திரியின் கருத்தில் தவறு இருப்பதாகப் பிரச்சாரம் செய்கிறான். ''அரசே! உங்களுக்காக உலகத்து இன்பங்களெல்லாம் காத்து நிற்கின்றன. இந்த மூட மந்திரியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட்டு விடாதீர்கள். சந்தர்ப்பத்தை நழுவ விடுவது புத்திசாலிக்கு அழகல்ல!'' என்று 'அறிவுரை' கூறுகிறான்.



அரசனுக்கு அவனைப்பற்றி நன்றாகத் தெரியும். அவன் வார்த்தை இனித்தாலும், அந்த வார்த்தைக்குள் கொடிய விஷம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று அரசன் உணர்ந்திருக்கிறான். எனவே, அவனை முதலில் விரட்டுகிறான் அரசன். ஆனால் அந்த சூழ்ச்சிக்காரன் மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறான். கடைசியில் அவன் வெற்றியும் அடைகிறான். முயற்சியுடையான் இகழ்ச்சியடைந்தது உண்டா?

இதே தன்மை பொருந்தியதுதான் சின உணர்ச்சியும். அது உங்கள் உள்ளத்தோடு ஒட்டி நிற்கிறது. ஆனால் அதை அன்னிய அரசன் ஒருவனின் ஒற்றன் என்று நான் குறிப்பிடுகிறேன்; ஏமாந்து விடாதீர்கள். பகுத்தறிவுக்கு மந்திரிப் பீடத்தைக் கொடுங்கள். உள்ளம் உடலை ஆட்சி செய்யும் அரசனாக இருக்கட்டும். சினமும் காமமும் பணியாட்கள், ஓரளவுக்கு மேல் அவர்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். இந்தப் பணியாட்கள் உங்கள் நன்மைக்காகவே படைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் அனேக சமயங்களில் உங்கள் முன்னேற்றத்தையும் அமைதியையும் குலைப்பதற்குத் திட்டம் வகுக்கிறார்கள்.

காமத்தால் அமைதி இழந்தவர்கள் எத்தனைபேர்! அவர்களைக் கணக்கிட முடியுமா? சினத்தினால் சீர்குலைந்தவர்கள் எத்தனை பேர்! அவர்களை எண்ணிலடைக்க முடியுமா?

இப்போது மற்றோர் உவமானத்தைப் பார்ப்போம்: குதிரை வீரன் ஒருவன் வேட்டைக்குப் புறப்படுகிறான். அவன் குதிரை திறமை மிக்கது. மான் குட்டியையும் முயல் குட்டியையும் துரத்திப் பிடிப்பதற்கு நாய் ஒன்றையும் அவன் தன்னுடன் அழைத்துச் செல்கிறான்.

பகுத்தறிவைக் குதிரை வீரனுக்கு ஒப்பிடலாம். கா உணர்ச்சியை அந்தக் குதிரைக்கு ஒப்பிடலாம். மிருகத் துரத்திப் பிடிக்கிறதே வேட்டை நாய், அதுதான் சி உணர்ச்சி.

வேட்டைக்குப் புறப்படும் குதிரை வீரன் வெற்றி பெ வேண்டுமானால், முன்கூட்டியே அவன் சில காரிய களைச் செய்திருக்க வேண்டும். தன் குதிரையை அவ நன்றாகப் பழக்கியிருக்க வேண்டும். இல்லையேல் அவ கிழக்கே போக எண்ணினால் அது மேற்கிலுள்ள குளத் நோக்கி ஓட ஆரம்பித்துவிடும்!

அவன் குதிரையைப் பழக்குவதுபோல் நாயையு பழக்கியிருக்க வேண்டும். வேட்டைக்குரிய மிருகத்தை அது எப்படித் துரத்திப் பிடிக்கவேண்டும். துரத்திப் பிடித் மிருகத்தை எப்படிக் கொண்டு வரவேண்டும். வேட்டை பிராணியை எத்துணை விரைவாகக் கொண்டு வந் சேர்க்கவேண்டும் என்றெல்லாம் அந்த நாய்க்கு அவன் போதித்திருக்க வேண்டும். இப்படிப் பழக்கப் படுத்துவ தால் அவனுக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. துள்ளி யோடும் மான் குட்டியையோ, வெண் பஞ்சின் மிருதுத் தன்மையைப் பெற்ற முயல் குட்டியையோ அவன் சுட்டிக் காட்டும்போது அந்த நாய் குபீரென்று பாய்கிறது. எல்லாம் பழக்கப்படுத்துவதால் ஏற்படுகின்றன.

இல்லையேல் வேட்டைக்குப் புறப்பட்ட அவனால் வெற்றியைக் காணமுடியாது. முயலை அவன் சுட்டிக் காட்டினால் அது புதரை நோக்கிப் பாயும், மான் குட்டியை அவன் சுட்டிக் காட்டினால் அது ஆட்டுக் குட்டியைப் பார்த்து ரசித்துக்கொண்டு நிற்கும்.



பழகாத குதிரையில், பழகப்படாத நாயுடன் ஒருவன் வேட்டைக்குப் புறப்பட்டால் அவன் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நான் எழுத வேண்டியதில்லை; அது உங்களுக்குத் தெரிந்த ஒன்று. உங்களை எச்சரிக்கிறேன். பழகாத குதிரையில் வேட்டைக்குப் புறப்படாதீர்கள். அது உங்களைச் சிங்கமோ சிறுத்தையோ வசிக்கும் குகைக்குக் கொண்டு போய்விடும். உங்கள் நாயை நன்கு பழக்குங்கள். இல்லையேல் வேட்டைப் பிராணியைத் துரத்திக் கொண்டு ஓடிய அது, உயிருள்ள நல்ல பாம்பைப் பிடித்து வந்து உங்கள் மீது வீசிவிடும்! இந்தச் சூழ்நிலையில் நீங்கள் வேட்டைக்குப் புறப்பட்டால் உங்களுக்கு வெற்றி கிடைக்காது. வெற்றி கிடைப்பதும் கிடைக்காமல் போவதும் இரண்டாவது பிரச்சினை. முதலில் உங்களால் உயிருடன் வீடு திரும்பவே முடியாது.

காமத்தையும் பசியையும் நடுநிலையில் இயங்கச் செய்யுங்கள். இல்லையேல் அவை பழக்கப்படாத குதிரையைப் போல் இக்கட்டான நேரத்தில் உங்களை மோசம் செய்துவிடும். சின உணர்ச்சிக்கு வரம்பு கட்டி அதை நேர்மையான வழியில் செலுத்துங்கள். இல்லையேல் அது, வெறிகொண்ட நாயைப்போல், உங்கள் உயிருக்கே உலைவைத்துவிடும்!

அன்பு நிறைந்த இறைவன் நன்மைக்கு வழி வகுப்பானாக!

● ❖ ●

# மானிட உள்ளத்தின் தனிச் சிறப்பு

உள்ளத்தின் சக்திகளையும் அதற்குப் பணிபுரியும் அவயவங்களையும் முந்திய அத்தியாயத்தில் ஆராய்ந் தோம். காமமும், கோபமும் உள்ளாற்றல்களாக இயங்கு கின்றன என்றும், அவயவங்கள் வெளியாற்றல்களாகப் பயன்படுகின்றன என்றும் நான் எழுதினேன். எல்லாம் வல்ல நாயன் மனிதனுக்கு இத்துணைத் தூரம் உதவி புரிந்திருக்கிறான்.

ஆனால் இவை மனிதனுக்கு மட்டும்தான் அருளப்பட் டிருக்கின்றன என்று எண்ணிவிடாதீர்கள். இந்த ஆற்றல்கள் மனிதனுக்கு மட்டுமன்றி, மிருகங்களுக்கும் அருளப்பட் டிருக்கின்றன.

சினம், காமம், பசி, தாகம் முதலிய உணர்ச்சிகள் மனித னுக்கு இருப்பதுபோல், மிருகத்துக்கும் இருக்கின்றன. மனிதனின் உடலில் கண், காது, வாய் முதலிய வெளி யுறுப்புகள் அமைந்திருப்பதுபோல் மிருகத்தின் உடலிலும் அமைந்திருக்கின்றன. மனிதன் தின்பதுபோல் மிருகமும் தின்கிறது. அவன் உறங்குவது போல் அதுவும் உறங்கு கிறது. விரோதியைப் பார்த்து மனிதன் பாய்வதுபோல் கீரியைப் பார்த்துப் பாம்பு சீறுகிறது.



ஓர் ஆட்டை எடுத்துக் கொள்வோம். தெருவில் அமைதி யுடன் நடந்து கொண்டிருக்கும் ஆடு ஒன்று எதிரில் ஓர் ஓநாயைப் பார்த்தால், அது என்ன செய்கிறது? உடனே ஓநாயைக் கண்ட ஆட்டின் கண்கள் அதன் இதயத்துக்குச் செய்தியனுப்புகின்றன. ஓநாய் தன் விரோதிகளில் ஒன்று என்று ஆடு புரிந்துகொள்கிறது. மறு வினாடி உயிரைக் காப்பதற்காக ஓட்டம் பிடிக்கிறது - ஆயுதம் தாங்கிய எதிரியைக் கண்டதும் ஆயுதமற்ற மனிதன் ஓட்டம் பிடிப்பதுபோல்!

எனவே ஐம்புலன்களாலோ உள்ளுணர்வுகளாலோ மனிதன் சிறப்படைந்திருக்க முடியாது. மனிதனின் சிறப் புக்கும் மதிப்புக்கும் காரணமான ஆற்றலை இப்போது நாம் விரிவாக ஆராய்வோம்.

மனிதனின் உள்ளத்திற்குத் தனித்திறமை - தனியாற்றல் ஒன்றுண்டு. அந்த ஆற்றல் தான் அவனை மற்ற உயிரினங் களைவிடச் சிறப்புள்ளவனாக்குகிறது. அந்த ஆற்றலின் விளைவால்தான் அவன் இறைவனை நெருங்குவதற்குரிய வசதியையும் வாய்ப்பையும் பெறுகிறான். மனிதனின் உள்ளத்தில் ஞானத்திற்கும் சிந்தனைக்கும் நல்ல இட முண்டு.எனவே அவன் இம்மையைப் பற்றிய விவரத்தை யும் மறுமையைப் பற்றிய தெளிவையும் தனக்குள் ஏற்படுத்திக் கொள்கிறான்.

''ஒரு பொருள் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்க முடியாது'' என்பது ஒரு தத்துவம். இதைப் புரிந்து கொண்ட மனிதன் தன் சிந்தனைத் திறனால் அதற்குத் தெளிவு கொடுக்கிறான். இந்தத் தத்துவத்தை அறியும் ஆற்றல் ஐம்புலன்களில் எதற்கும் கிடையாது. உள்ளம்தான் இதை அறிகிறது. இந்த ஆற்றல் மனிதனின் உள்ளத்திற்கு

மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. இந்தத் திறமை வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது.

அவன் கண்கள் ஒன்றைப் பார்க்கின்றன. அவன் செவிகள் வேறொன்றைக் கேட்கின்றன. கண்ணால் கிடைத்த அறிவையும் காதால் கிடைத்த அறிவையும் அவன் பகுத்தறிவு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறது. அது அவற்றிற்குப் புதியதொரு தோற்றத்தைக் கொடுக்கிறது; எப்போதோ கேட்டிருந்த சில கருத்துக்களை வைத்துக் கொண்டு மனிதன் எத்தனை பெரிய சாதனைகளைச் சாதித்துவிடுகிறான்!

ஒவ்வொரு காரியத்தையும் மனிதனின் உள்ளம் ஆராய்ந்து பார்க்கிறது. செயல்களின் முடிவையும் அதன் நிலையையும் கண்டுபிடிக்கும் ஆற்றல் உள்ளத்திற்குக் கண்டிப்பாய் உண்டு. முடிவில் தீமையையும் விபரீதத்தையும் உருவாக்கும் செயல்களை அது சுத்தமாகக் கண்டுபிடித்துவிடுகிறது. சீர்குலைந்த நிலையைத் திருத்தியமைப்பது எப்படி? விரைவில் ஏற்படப்போகும் விபரீதத்தைத் தடுப்பது எப்படி? என்றெல்லாம் அது ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடிக்கிறது.

மனிதனின் பகுத்தறிவு நன்மையையும் தீமையையும் காண்பிக்கிறது. உள்ளத்தில் பொங்கும் ஆற்றலால் நற்காரியங்கள் செயலாற்றப்படுகின்றன; தீமையைக் கொண்டு வரும் செயல்கள் தவிர்த்தொதுக்கப்படுகின்றன.

நீங்கள் நோயுற்றிருக்கிறீர்கள். உங்கள் உதிரத்தை ஆராய்ந்த வைத்திய நிபுணர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ''உப்பையும் புளியையும் நீங்கள் நினைத்துப் பார்க்கக் கூடாது'' என்று. இந்த நிலையில் உங்களுக்கு முன்னால் அறுசுவை உண்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதன்



சுவையை நீங்கள் பலதடவை அனுபவித்திருக்கிறீர்கள்; எனவே எடுத்துப் புசிக்கத் துடிக்கிறது உங்கள் உணர்வு.

இது மிருகத்துக்கும் உண்டு. எந்த உணவு தன் உடல் நிலையில் எவ்வித விளைவை ஏற்படுத்தும் என்று அதற்குத் தெரியாது. அதற்குப் பகுத்தறிவும் கிடையாது. எனவே சிலசமயம் அது தனக்கு ஒத்துக்கொள்ளாததை உட்கொண்டு வேதனைப்படுகிறது. கயிற்றில் தொங்குவதைப் புழுவென்றெண்ணித் தூண்டிலில் அகப்பட்டுக் கொண்டு தொங்கவில்லையா மீனினம்? ஒரு சிறு தேங்காய்க் கீற்றுக்காகப் பொறியில் சிக்கிக் கொள்ளவில்லையா எலியினம்?

ஆனால் வியாதியுற்றிருக்கும் மனிதன் உப்புக் கலந்த உணவை உட்கொண்டு தனக்குத் தீங்கு ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஏனெனில் அவனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. கடைசி நேரத்தில் அது வைத்தியரின் எச்சரிக்கையை அவனுக்கு நினைவூட்டி விடுகிறது. பகுத்தறிவு என்ற இந்த ஆற்றல் மனிதனைத் தவிர்த்து வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது. இந்த ஆற்றலால்தான் அவன் பெருமதிப்புக்கு உரியவனாகிறான்.

வயதுவந்த மனிதனுக்குப் பகுத்தறிவு ஏற்படுகிறது. சிறுவர் சிறுமியருக்குப் பகுத்தறிவு கிடையாது. இதனால்தான் அவர்கள் நச்சரவத்தைப் பிடித்துவைத்து விளையாட ஆசைப்படுகிறார்கள்; விளையாட்டின் மோகத்தில் சத்துள்ள உணவை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள்!

பருவ வயது வந்ததும் பகுத்தறிவு பிறக்கிறது. ஆனால் அது பிறக்கும்போதே தனக்குரிய முழு ஆற்றலையும் பெற்றுவிடுவதில்லை. பொது அறிவு ஏற்பட ஏற்படப் பகுத்தறிவு துலங்குகிறது. ஒரு மனிதனின் அறிவுத் திறனையொட்டியே அவன் பகுத்தறிவு அமைந்திருக்கிறது.

ஞானம் இல்லையேல் பகுத்தறிவு பயனற்றுப் போய்விடும். புலியைப் பற்றியும் அதன் குணத்தைப் பற்றியும் நீங்கள் முன்கூட்டியே அறிந்துகொள்ளாவிடில், உங்கள் பகுத்தறிவு உங்களைப் புலியிடமிருந்து காப்பாற்றாது. விஷம் கலந்த உணவை உட்கொண்டு மாண்டிருக்கிறார்கள் அறிஞர்கள் சிலர்; அவர்களின் பகுத்தறிவில் குறை ஏதும் காணப்படவில்லை. என்றாலும், சக்திமிக்க பகுத்தறிவு அவர்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது. ஏனெனில் எதிரில் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் உணவு நஞ்சூட்டப்பட்டது என்ற ஞானம் அவர்களுக்கு முன்கூட்டியே ஏற்படத் தவறிவிட்டது.

இறைவனின் திருத்தூதர்களை நான் மிகச் சிறந்த பகுத்தறிவாளர்கள் என்று கணிக்கிறேன். ஏனென்றால் எல்லாம் வல்ல நாயன் அவர்களுக்குப் பரந்த ஞானத்தைக் கொடுத்திருந்தான். ஞானம் விரிவடையும் போது பகுத்தறிவின் தரம் தானாகவே விரிவடைகிறது.

அறிவை அடைவதற்காகச் சிலர் கல்லூரிக்குச் செல்கிறார்கள்; வேறு சிலர் அனுபவத்தாலும் சிந்தனையாலும் அறிவைப் பெறுகிறார்கள். அனுபவத்தால் அறிவைப் பெறுகிறவர்கள் எல்லோரும் ஒரே நிலையில் இருப்பதில்லை. இவர்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வு உண்டு. சிலரது அறிவு கடலைப்போலிருக்கும், மற்றும் சிலரது அறிவு மிகக் குறைவாக இருக்கும். சிலர் மேலான விவரத்தைப் பற்றி அறிந்திருப்பார்கள். இன்னும் சிலர் அற்பக் காரியத்திற்காகப் பொழுதை வீணாக்கியிருப்பார்கள். கல்லூரியில் படித்தாலும் சரி, அனுபவத்தால் உணர்ந்தாலும் சரி; இந்தத் தராதரங்கள் எப்போதும் இருக்கத்தான் செய்யும். சிலர் ஒரு விஷயத்தை விரைவாகத் தெரிந்து கொண்டால், வேறு சிலர் அதைத் தெரிந்துகொள்வதற்கு வெகு நேரம் பிடிக்கிறது. சிலருக்குக் கல்லூரி கற்றுக் கொடுத்தால், வேறு



சிலருக்கு இறைவனே ஆசானாக நின்று கற்றுக் கொடுக்கிறான்.

சாதாரணப் பட்டதாரியின் பகுத்தறிவுக்கும் திருத்தூதரின் பகுத்தறிவுக்குமிடையே பாரதூரமான வித்தியாசமுண்டு. சாதாரணமாக திருத்தூதர்கள் பள்ளிக்கூடம் சென்று படிப்பதில்லை. கல்லூரியின் வாசற் படியையும் அவர்கள் மிதிப்பதில்லை. அவர்களைப் பட்டதாரிகள் என்று நம்மால் சொல்லவும் முடியாது. எனினும் அவர்களுக்கு ஞானோதயத்தின் மூலம் தெளிவு கிடைக்கிறது. கண்ணாடி போன்ற அவர்களின் மனம் ஞானத்தை ஈர்த்து வருகிறது.

எனவே, திருத்தூதர்கள் பகுத்தறிவாளர்களின் பட்டியலில் முதலிடம் பெறுகிறார்கள். இதைவிடச் சிறந்த பகுத்தறிவை வேறு எந்தத் துறையினரிடத்திலும் காணமுடியாது. இதுஒரு படித்தரம். இந்தப் படித்தரத்திற்குக் கீழே எத்தனையோ படித்தரங்கள்!

எல்லாம் தெரிந்த மனிதனும் எதுவுமே தெரியாத மானிடனும் உலகில் இல்லை. ஒவவொரு மனிதனும் ஒவ்வொரு படித்தரத்தில் இருக்கிறான். இறைவழி செல்பவர்களிலும் இந்தப் படித்தரங்கள் இருக்கின்றன. அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு படித்தரத்தை அடைந்திருக்கிறார்கள். சிலர் பல படித்தரங்களைக் கடந்து நல்லதொரு நிலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் தம்முடைய படித்தரத்தையும் நிலையையும் நன்கு உணர்கிறார்கள். தமக்குக் கீழுள்ள படித்தரங்களும் அவர்களுக்கு நன்றாகத் தெரிகின்றன. அவற்றையெல்லாம் கடந்துதானே அவர்கள் இப்போதைய நிலைக்கு - படித்தரத்துக்கு வந்திருக்கிறார்கள்? ஆனால் தமக்கு மேலுள்ள படித்தரத்தை அவர்கள்

கண்டிப்பாய் உணர முடியாது. சிறுவன் ஒருவனுக்குக் கல்வியின்பத்தை அறியும் ஆற்றல் உண்டா என்ன?

திருத்தூதர்களுக்கு ஞானோதயம் பிறக்கிறது என்றும் அதனால் அறிவு வளர்கிறது என்றும் நான் குறிப்பிட்டே னல்லவா? இதற்கென்று அவர்கள் பல்லாண்டுகளை வீணாக்குவதில்லை. ஒரு பொருளைப் பார்த்ததும் அதைப் பற்றிய முழு விவரமும் அவர்களுக்குக் கால் வினாடிக்குள் தெரிந்து போய்விடும். முகத்தைப் பார்த்து மனத்திலுள்ள தைச் சொல்லும் ஆற்றல் படைத்தவர்கள் எத்தனைபேர் இந்த மண்ணகத்தில் தோன்றியிருக்கிறார்கள்!

இந்தப் பெருந்தகைகளின் ஆற்றல்களைப் பற்றி நீங்கள் சந்தேகப்படாதீர்கள். அவர்கள் அறிவுத் துறையில் உங்கள் படித்தரத்தைக் கடந்து விட்டார்கள். ஆனால் அவர்களின் படித்தரத்தை நீங்கள் இன்னும் கடக்கவில்லை. எனவே அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடாதீர்கள். அறிவுத் துறையில் நீங்கள் நேற்றுப் பிறந்த பாலகனைப் போல்தான் இருக்கிறீர்கள். பாலகனாகிய உங்களுக்கு அரசியல் மர்மத்தைப் புரியும் ஆற்றல் உண்டா? மழலை பேசி தத்தி நடப்பதுதான் உங்கள் வேலை. தன்னையும் தன் சூழலையும் உணர்ந்துகொள்ள முடியாத வயது. இந்த நிலையிலிருக்கும் நீங்கள் தனிப்பெரும் சக்தியை எடை போட எண்ணுகிறீர்களே, இது அறிவுடைமையா? எனவே பெரியோரின் ஆற்றல்களை மறுக்காதீர்கள்.

பத்துவயதுச் சிறுவன் வீதியில் விளையாடிக்கொண் டிருக்கிறான். விளையாட்டிலுள்ள இன்பம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மணவாழ்க்கையில் இன்பம் நுகரும் இளைஞர்களின் நிலையை அந்தச் சிறுவனால் உணர்ந்து கொள்ள முடியுமா?



ஓர் இளைஞன், இருபத்திரண்டு ஆண்டுகளைக் கடந்து விட்ட அவன் இல்வாழ்க்கையில் இன்பம் காண்கிறான். இந்த இன்பத்தின் தன்மை அவனுக்கு நன்றாகத் தெரிகிறது. ஏனென்றால் இது இப்போது அவன் இருக்கும் படித்தரம். எனவே இந்தப் படித்தரத்தின் நிலையைச் சுத்தமாக உணர் கிறான். அதே சமயத்தில், தான் பத்துவயதுச் சிறுவனா யிருந்தபோது விளையாட்டில் அனுபவித்த இன்பத்தையும் அவன் நன்கு உணர்கிறான். ஏனெனில் 'விளையாட்டுப் பருவம்' என்ற படித்தரத்தைக் கடந்துதான் அவன் இந்தப் படித்தரத்திற்கு வந்திருக்கிறான். ஆனால் இந்த இளைஞனால் வயது முதிர்ந்தவர்கள் இறை வணக்கத்தில் அனுபவிக்கும் இன்பத்தைக் கண்டிப்பாய் உணர முடியாது. காரணம்; அது அவன் அடையாத படித்தரம்.

சிறுவனால் இளைஞனின் நிலையை அறிய முடியாதது போல், இளைஞனால் வயோதிகனின் நிலையை உணர முடியாததுபோல் - சாதாரண மனிதர்களால் இறை தூதர் களின் நிலையை உணர முடியாது. இந்தப் படித்தரத்தை அடையாத எவராலும் இந்த உண்மையை அறிய முடியாது; இதை அறிந்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் மார்க்கத்தில் இல்லை. இப்படியிருக்கும்போது வீணாக ஏன் மூளையைக் குழப்பிக் கொள்கிறீர்கள்?

நாம் முஸ்லிம்கள், பெருமானாரை நாம் நம்புகிறோம். அவர்களை இறைத் தூதர் என்று நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அவர்களின் நிலையையும் அவர்களது பகுத்தறி வாற்றலின் திறனையும் நாம் உணர்ந்து கொண்டு விட்டோமா, இல்லையா! அவர்களின் நிலையை நாம் உணரவில்லை; உணரவும் முடியாது; அதற்குத் தேவையு மில்லை. மரம் கனி தருகிறது என்று நம்புகிறவர்கள், தாவர

ஆராய்ச்சியில் பட்டம் பெற்றவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது என்ன நியாயம்? ஆராய்ச்சி இல்லாமலே இது நன்றாகத் தெரியவில்லையா? விஷம் மனிதனைக் கொல்லக்கூடியது என்று நம்புகிறவர்கள், ஏற்கனவே விஷமுண்டு செத்துப்போய் அனுபவப்பட்டிருக்க வேண்டும் என்பது என்ன தத்துவம்?

திருத்தூதர்களுக்கும் இறையன்பர்களுக்கும் இறைவனின் பேரருள் எப்போதும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அந்தப் பேரருளை ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்தபடி அவர்களின் உள்ளங்கள் தூய்மையுடன் இருக்கும். உள்ளம் தூய்மையடைந்துவிட்டால் இறை ஞானம் ஏற்படுவதற்குத் தடை ஏது? - இதைப் பற்றி விரிவாக எழுதுவதற்கு அவகாசமில்லை. இதன் விளக்கம் உரிய நேரத்தில் இடம் பெறும்.

இந்த இறைஞானத்தைப் பெற எண்ணுகிறவர்கள் முதலில் தம் உள்ளத்தின் தீய உணர்வுகளை நசுக்க வேண்டும். அவை உள்ளத்தின் பரிசுத்த தன்மைக்குக் களங்கம் கற்பித்து விடுகின்றன. தூய்மையடைந்த உள்ளத்திற்கு இறைவனின் பேரறிவு எப்போதும் கிடைக்கும். இதில் இறைவன் கஞ்சத்தனம் காட்டுவதில்லை. ''என் அடியான் என்னளவில் ஒரு சாண் நெருங்கினால், நான் அவனளவில் ஒரு முழம் நெருங்குகிறேன்'' என்ற இறை கருத்தை நீங்கள் கேட்டதில்லையா?

இந்த இறையறிவு பெரும்பாலோருக்குக் கிடைப்பதில்லை. ஏனெனில், பெரும்பாலோருடைய உள்ளத்தைத் தீய சக்திகள் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. சினம், காமம், பொறாமை, சதி முதலிய துர்க் குணங்கள்



பொன்னுக்கு நிகரான உள்ளத்தில் ஆழமான கறையை உண்டாக்கி விடுகின்றன.

ஒரு பாத்திரம்; அதில் நீர் நிறைந்திருக்கும்போது காற்றுக்கு இடமில்லாமற் போகிறது. நீர் வெளியேற்றப்பட்டதும் அதன் இடத்தைக் காற்று ஆக்கிரமித்துக் கொள்கிறது. பாத்திரத்தினுள் ஏக காலத்தில் நீரும் காற்றும் கலந்து நிற்க முடியாது. இந்த உவமை உங்களுக்குத் தெளிவைக் கொடுக்கும் என்று எண்ணுகிறேன். எனவே மனிதனின் உள்ளத்தை ஒரு பாத்திரத்துக்கு நான் ஒப்பிடுகிறேன்.

உள்ளத்தில் இறை ஞானம் ஏற்பட்டதும் மற்ற அறிவினங்கள் அனைத்தும் வெளியேறிவிடுகின்றன. இறைவனைத் தவிர்த்துள்ள இதர சிந்தனைகள் உங்கள் உள்ளத்தில் இடம் பெற்றால், இறைஞானத்தைத் தயவு செய்து எதிர்பார்க்காதீர்கள். இறைவன் உங்களுக்குக் கொடுத்திருப்பது ஒரே ஓர் உள்ளம். முரண்பட்ட இரண்டு பொருள்களைப் பலவந்தமாக அந்த ஒரே உள்ளத்தில் திணிக்காதீர்கள்.

இந்தத் தத்துவம்தான் பெருமானாரின் கருத்தில் பிரதிபலிக்கிறது; ''மனிதனின் உள்ளத்தைச் சுற்றிலும் தீய சக்திகள் வட்டமிடவில்லை என்றால் விண்ணகத்தின் ஆட்சி முழுவதையும் அவன் கண்கூடாகப் பார்ப்பான்!''

அறிவாலும் திறமையாலும் மனிதன் சிறப்படைகிறான் என்ற உண்மை இங்கு நமக்குத் தெரிகிறது. உலகில் எத்தனையோ விதமான அறிவுகள் இருக்கின்றன. இவை அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது இறைவனைப் பற்றிய அறிவு. ஏனெனில் அவன் எல்லாவற்றையும்விட மேலானவன். எனவே, தாவரத்தைப் பற்றிய அறிவைவிட, விண்ணகத்து விண்மீன்களைப் பற்றிய அறிவைவிட,

இறைவனைப் பற்றிய அறிவு சிறந்து விளங்குகிறது. அவன் அனைத்தையும் படைத்த அரசனல்லாவா?

இப்போது புரிகிறதா மனிதனின் தனித்தன்மை என்ன என்று? மனிதன் எதற்குப் படைக்கப்பட்டான் என்று இதுவரை நீங்கள் உணர்ந்திருப்பீர்களே! இந்தத் தன்மை ஒவ்வொரு மனிதனிடமும் அமைந்திருக்கவேண்டும். ஒருவன் இந்தத் தன்மையை இழந்து விட்டால், அவன் மானிட இனத்துக்கே ஓர் அவமானச் சின்னம்!

கழுதையைவிடக் குதிரை சிறப்புள்ளது என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். குதிரைக்குள்ள அவயவங்கள் அனைத்தும் கழுதைக்கும் இருக்கின்றன. குதிரை சுமப்பது போல் கழுதையும் சுமக்கத்தான் செய்கிறது. என்றாலும், கழுதைக்கில்லாத சிறப்பம்சங்கள் சில குதிரைக்கு இருக்கின்றன. குதிரை அழகிய தோற்றத்தைப் பெற்றிருக்கிறது. வேகமாக ஓடும் ஆற்றலும் அதற்குண்டு. எனவே அது கழுதையைவிடச் சிறந்து விளங்குகிறது. சில தன்மைகள் குதிரைக்கும் கழுதைக்கும் பொதுவாக இருக்கின்றன. வேறு சில தன்மைகள் குதிரைக்கு மட்டுமே சொந்தமாக இருக்கின்றன. இவை கழுதைக்குக் கிடையாது.

இதே போன்று மனிதனுக்கும் மிருகத்துக்கும் பொதுவான தன்மைகள் சில இருக்கின்றன. வேறு சில தன்மைகள் மனிதனுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கின்றன. இவற்றை அவன் இழக்கும்போது மிருகத்துக்கு ஒப்பானவனாகிறான். இந்தத் தன்மைகள் முழு உருவை அடையும்போது வானவர்களின் படித்தரத்துக்கு உயர்கிறான் மனிதன்! எந்த நிலையில் இருக்கிறான் என்று எண்ணுகிறீர்கள்? அவன் அமரத்துவத்துக்கும் மிருகத் தனத்துக்கும் இடையில்



அமர்ந்திருக்கிறான். இந்த இரண்டு தன்மைகளும் அவனிடம் இடம் பெற்றிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், அவனுடைய சூழல்களிற் சில, புற்பூண்டுகளையும் மரம், செடி, கொடிகளையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இவை வளர்வதுபோல் தானே அவனும் வளர்கிறான்?

மிருகம் உண்டு களிக்கின்றன; உறங்கி மகிழ்கின்றன. இந்த வேலைகளை மனிதனும் செய்யத்தானே செய்கிறான்? இந்த வேலைகளிலேயே தன் ஆயுள் முழுவதையும் அவன் கழித்துவிட்டால் அவனை 'மிருகம்' என்று துணிந்து கூறலாம். தன் ஆற்றல் முழுவதையும் அவன் இறை ஞானத்துக்கும் செலவிட்டால் அவனை 'வானவர்' என்று தாராளமாக அழைக்கலாம்! ஏனெனில் வானவர்கள் இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். தம் ஆற்றல் முழுவதையும் அவர்கள் இறைபணிக்குச் செலவிடுகிறார்கள்.

மனிதனிடமுள்ள தனித்தன்மை வளர்ந்து விரியும்போது அவன் வானவர்களின் பட்டியலில் சேர்க்கப்படுகிறான். யூசுஃப் நபியின் அழகில் மயங்கிய பெண்கள் ''இவர், மனிதரல்ல; நிச்சயமாக இவர் சிறப்புள்ள ஒரு வானவர்'' என்று பாராட்டியிருப்பதை இறைவன் திருக்குர்ஆனில் விவரிக்கிறான்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதவர்கள் அறியாமைக்கு நிலைக்களனாக இருப்பார்கள் - மாட்டைப்போல்! தெளிவில்லாதவனை நாம் 'மாடு' என்று குறிப்பிடவில்லையா? அல்லது அவர்கள் பேராசைத் தீயில் வெந்து மடிவார்கள் பன்றியைபோல்....

சுருங்கச் சொல்வதானால், அறிவுத் திறன் குறைந்து போகும்போது தீய தன்மைகள் முளைக்க ஆரம்பித்துவிடு கின்றன. அறிவுக்கு அக்கறை காட்டாத சிலர் உலகிலுள்ள தீய சக்திகள் அத்தனைக்கும் தம் மனத்தில் இடம் கொடுத்து விடுகிறார்கள் 'ஷைத்தா'னைப்போல. ஷைத்தான் எனப் படுபவன் தீய சக்திகளின் கூட்டுப் பொருளல்லவா?

நீங்கள் விரும்பினால் உங்கள் வெளியுறுப்புகள், உள் ளுறுப்புகள் அனைத்தையும் இந்தப்புனிதக் குறிக்கோளுக் குப் பயன்படுத்தலாம். இப்படி நீங்கள் பயன்படுத்தினால் உங்களை நான் பாராட்டுகிறேன். இல்லையேல் ஏற்படும் விபரீதங்கள் அளவிட முடியாதவை. இறைவனை நீங்கள் படிப்படியாக நெருங்கவேண்டும். இதை உங்கள் இலட்சிய மாகக் கொள்ளுங்கள். இலட்சியத்தை அடைவதற்கு உங்கள் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்துங்கள்.

• ❖ •

## மனிதனுக்குள் மிருகம்!

மனிதன் குறிப்பாக நான்கு குணங்களைப் பெற்றிருக் கிறான். எனவே அவனிடம் நான்கு விதமான செயல்கள் உருவாகின்றன. விலங்குக் குணம், அந்த நான்கில் ஒன்று. மற்றொன்று மிருகக் குணம். மூன்றாவது 'ஷைத்தான்' குணம். நான்காவது இறைகுணம். ஒவ்வொரு சமயம் அவனிடம் ஒவ்வொரு குணம் இடம் பெறுகிறது. அப் போது அந்தக் குணத்துக்குத் தகுந்த செயல் உருவாகிறது.

மனிதன் சின மேலீட்டால் உணர்ச்சி வசப்படும் போது கரடி, புலி, சிறுத்தை முதலிய விலங்குகளைப்போல் சீறுகிறான்; மற்றவர்கள் மீது வசைமொழியை வீசுகிறான்; நண்பர்களை எல்லாம் பகைத்துக்கொள்கிறான். இந்தக் குணத்தை நான் விலங்குக் குணம் என்று குறிப்பிடுகிறேன்.

வேறுசில சமயம் அவன் காம உணர்ச்சிக்கு அடிமையா கிறான். அப்போது அவனிடம் மிருகத் தனமான செயல்கள் உற்பத்தியாகின்றன.

சூழ்ச்சி, மோசடி முதலியவற்றில் அவன் இறங்கினால் அவனிடம், 'ஷைத்தான்' குணம் செயல்புரிகிறது என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு சில வேளைகளில் அவனிடம் தெய்வீகக் குணம் தோன்றுவதுண்டு. அப்போது அவன் என்ன செய்வான் தெரியுமா? தன்னைவிட உயர்ந்தவர் எவருமில்லை என்று வாதாடுவான். அனைவரையும் அடக்கியாள ஆசைப் படுவான். அனைவரையும் விடச் சிறந்து விளங்க முயற்சி செய்வான். எவருக்கும் அடிபணிய மாட்டேன் என்று மார்தட்டுவான்.

இந்த இறை குணம் ஒரு மனிதனிடம் தோன்றும் போது, உலகிலுள்ள அனைத்தையும் அவன் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான். 'எனக்குப் போதிய ஞானம் உண்டு. நான் ஓர் அறிஞன்' என்று பெருமையடிக்கிறான். அவனைப் பார்த்து நீங்கள் ''அறிஞன்'' என்று கூறினால், அவன் மகிழ்ச்சியடைகிறான். தன்னை ஒன்றும் தெரியாத வன் என்று அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். ''முட்டாள்'' என்ற ஒரு வார்த்தை அவன் மனத்தை புண்ணாக்கிவிடும்!

இதை எல்லாம் நான் இறைகுணம் என்று குறிப்பிடு கிறேன். ஏனென்றால் இறைவன் அனைத்தையும் அறிந்த வன்; அவன் அனைவரையும், அனைத்தையும் அடக்கியாள் கிறான். இறைவனுக்கு இத்தகைய பேராற்றல்கள் இருப்பது போல் தனக்கும் இருக்கவேண்டும் என்று மனிதன் ஆசைப் படுகிறான். அவன் இறைவனின் பிரதிநிதியல்லவா?

சினமும் காமமும் மனிதனின் இயற்கைக் குணங்கள். இவை இரண்டும் வனத்தில் வசிக்கும் விலங்குகளுக்கு இருப்பதுபோல், தெருவில் திரியும் ஆடு, மாடு முதலான மிருகங்களுக்கும் இருக்கின்றன. பன்றியையும் நாயையும் எடுத்துக் கொள்ளுங்கள், அவற்றிற்குக் காமம் கிடையாது என்றா எண்ணுகிறீர்கள்? அல்லது அவற்றிற்குக் கோபம் தான் இல்லை என்று எண்ணுகிறீர்களா? இவை இரண்டும் அவற்றிற்கு உள்ளன.



என்றாலும், மிருகத்துக்கும் விலங்குக்கும் இல்லாத ஒன்று மனிதனுக்கு உண்டு. பகுத்தறிவு சிறப்பு வாய்ந்தது தான். என்றாலும், அத்துடன் சினமும் காமமும் சேரும் போது 'ஷைத்தான்' குணம் உருவாகிறது. எனவே அவன் தீய வழியில் பிரவேசிப்பதற்குரிய சந்தர்ப்பத்தையும் சூழலையும் பகுத்தறிவின் உதவியால் ஏற்படுத்துகிறான். அது அவனுக்குத் தீய வழியில் பெருந்துணையாகத் திகழ்கிறது. மிருகங்களால் செய்ய முடயாத தவறுகளை மனிதன் செய்கிறான். காரணம்: அவனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது! எந்த மிருகமாவது வழிப்பறி செய்ததுண்டா? எந்த விலங்காவது நம்பிக்கைத் துரோகம் செய்ததுண்டா? இவை பகுத்தறிவு படைத்த உயிரினத்துக்கும் சொந்த மானவை. பகுத்தறிவின் உதவியால் மிக உயர்ந்த செயலைச் செய்யும் மனிதன்,அதன் உதவியாலேயே மிகத் தாழ்ந்த செயலையும் செய்கிறான்.

மனிதன் தன் பகுத்தறிவை எப்படி உபயோகிக்கிறான் என்று எண்ணுகிறீர்கள்? எந்தக் குற்றத்தை எப்படிச் செய்யலாம்; எந்தக் காரியத்தை எப்படி முடிக்கலாம் என்று அவன் ஆராய்கிறான். அதற்கு நல்லதொரு முடிவைக் கொடுக்கிறது அவன் பகுத்தறிவு. இவற்றை ஷைத்தானின் குணங்கள் என்று குறி'ப்பிட்டால் அதில் தவறு என்ன?

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதம். ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் மேற்குறிப்பிட்ட நான்கு குணங்களில் ஒன்று இருக்கத்தான் செய்யும். அந்தக் குணத்தையொட்டி அவன் நடக்கத்தான் செய்வான். என்ன

அதிசயம்! மனிதனின் தோலுக்குள் எத்தனை விதமான குணங்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன!

**காமம்:** மனிதனின் நன்மைக்காகப் படைக்கப்பட்ட ஒன்றுஇது. இதனால் அவனுக்கு மகத்தான பயனுண்டு. அவன் மாண்ட பிறகு மண்ணகத்தில் அவன் பெயரை நிலைக்கச் செய்வது காமம் தானே? காமம் இல்லையேல் கல்யாணமில்லை. கல்யாணமில்லையேல் சந்ததி இல்லை.

என்றாலும், காம உணர்ச்சியை நான் பன்றிக்கு ஒப்பிடுகிறேன். காம உணர்ச்சியில் பட்டதுதான் பேராசையும். பன்றியை நாம் வெறுக்கிறோம். அதன் நிறத்தாலோ, அதன் அமைப்பாலோ, அதன் செயலாலோ அதை நாம் வெறுக்கவில்லை. பன்றிசெய்யும் அருவருப்பான வேலையை ஆடுகள் கூடத்தான் செய்கின்றன. ஆடுகளை நாம் வெறுக்கவில்லை. பன்றியின் நிறம் கொண்டதுதான் யானை. அதை நாம் இழிவான பெயர்கொண்டு அழைப்பதில்லை. பன்றியினத்திற்குள்ள பேராசை வேறு எந்த மிருகத்திற்கும் கிடையாது. பன்றியை நாம் வெறுப்பதற்குப் பேராசைதான் அடிப்படைக்காரணம்.

**சினம்:** இது தற்காப்புக்காகப் படைக்கப்பட்ட ஒன்று. சின உணர்ச்சி குறைந்தவர்களால், தமக்கு ஏற்படும் அபாயத்தைத் தடுத்துக்கொள்ள முடியாது. இந்த உணர்ச்சியை நான் நாய் என்று குறிப்பிட விரும்புகிறேன். வனவிலங்குகளின் முக்கியமான குணம் சின உணர்ச்சி. இதே உணர்வு மனிதனுக்கும் உண்டு.

மனிதனின் சினமும் காமமும் சிலவேளைகளில் தூண்டப்படுகின்றன. இப்படித் தூண்டும் சக்திக்கு நான் 'ஷைத்தான்' என்று பெயரிடுகிறேன். தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பவனல்லவா அவன்?



மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. வேறு எந்த உயிரினத்துக்கும் இல்லாத ஒன்று இது. இந்த அருங்குணத்திற்கு 'இறைகுணம்' என்று நான் பட்டம் சூட்டுகிறேன்.

இந்தப் பகுத்தறிவாற்றல் மனிதனின் வாழ்க்கையில் பெரிதும் பங்கு கொண்டிருக்கிறது. அது அவனுக்கு உதவி செய்ய எப்போதும் காத்து நிற்கிறது. தீய எண்ணத்தையும் நல்லெண்ணத்தையும் அது பகுத்துப் பிரித்து வேற்றுமையைக் காட்டுகிறது. காமத்தையும் கோபத்தையும் அவன் எந்த நேரத்தில் உபயோகிக்க வேண்டும்; எந்த நேரத்தில் அவற்றைப் பிரயோகிக்க கூடாது என்று அவனுக்கு அது சொல்லிக் கொடுக்கிறது.

ஆனால் இதே பகுத்தறிவு காமத்துடனோ சினத்துடனோ கலக்கும்போது விபரீதங்கள் பல உருவாகின்றன. அப்போது அது எந்தக் குற்றத்தை எப்படிச் செய்யலாம் என்று சொல்லிக் கொடுக்கிறது. எந்தக் குடியை எவ்வாறு கெடுக்கலாம் என்று திட்டம் தீட்டிக் கொடுக்கிறது. பகுத்தறிவுக்குக் கீழ் கோபமும் காமமும் இயங்க வேண்டுமே தவிர, அவற்றிற்குப் பகுத்தறிவு அடிமையாகி விடக் கூடாது.

காமமும் சினமும் மனிதனுக்குத் தேவையான இரண்டு குணங்கள். அவற்றை நடுநிலையில் இயங்கச் செய்யுங்கள். உங்கள் பகுத்தறிவுக்கு அவை எப்போதுமே அடிமைகளாக இருக்கட்டும். பகுத்தறிவை அவற்றிற்கு அடிமையாக்கி விடாதீர்கள்.

உண்மையைப் பார்த்தால், பெரும்பாலோர் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவுக்கும் அதன் கட்டளைக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை. காமத்துக்கு

அவர்கள் தலை சாய்க்கிறார்கள். சின உணர்ச்சியின் தூண்டுதலால் அவர்கள் மிருகத்தைப் போல் நடந்து கொள்கிறார்கள். பசியையும் காமத்தையும் அவர்கள் விரும்பி வரவேற்றார்கள்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சிலை வணக்கத்தை நீங்கள் வெறுக்கிறீர்கள்; சிலைக்குச் சிர வணக்கம் செலுத்துகிறவர்களை வெறுக்கிறீர்கள். ''இது பகுத்தறிவுக்கு முரண்பட்ட செயல்!'' என்று இடித்துக் கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் நிலைமையை எண்ணிப்பார்த்தீர்களா? அவர்கள் கல்லுக்கும் மண்ணுக்கும் தலை வணங்குகிறார்கள். நீங்கள் பன்றிக்கும் நாய்க்கும் தலை குனிகிறீர்கள். ஆம், காமத்தையும் சினத்தையும் தான் நான் முறையே பன்றி என்றும் நாய் என்றும் குறிப்பிடுகிறேன். அவற்றின் கட்டளையை நிறைவேற்ற நீங்கள் காத்து நிற்கிறீர்கள்.

காமத்தின் குரலுக்கும் சினத்தின் சீற்றத்திற்கும் மனிதன் எத்துணைத் தூரம் மதிப்புக் கொடுக்கிறான். அவன் மனத்தில் ஆசை ஏற்பட்டுவிட்டால், அதை உடனே செயலாக்குவதற்கு எப்படியெல்லாம் பாடு படுகிறான்! தன் ஆவலைத் தீர்த்துக் கொள்வதற்கு அவன் தன் பகுத்தறிவைத் தயங்காமல் பயன்படுத்திக் கொள்கிறான். இவன் செல்லும் வழி பயங்கரமானது. இதை நான் ''ஷைத்தானின் வழி'' என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஷைத்தான் எனப்படும் தீயசக்தி காமத்தையும் கோபத்தையும் தூண்டி விடுகிறது. உண்மையை உணராத மனிதன் தூண்டுதலால் துள்ளுகிறான்....

உங்களை எச்சரிக்கிறேன். உங்களுக்கு இந்த நிலைமை வரவேண்டாம். உங்கள் சொல், செயல், எண்ணம் அனைத்தையும் ஆராய்ந்து பாருங்கள். உங்களுடைய சுண்டு விரலில் ஏற்படும் சிறு அசைவைக்கூட அலட்சியப்படுத்தி விடாதீர்கள்! உங்கள் புறக் கண்கள் கிடக்கட்டும். மனக் கண்ணைத் திறந்து அனைத்தையும் பாருங்கள். காமம் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறது; அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சிந்தனை செய்யுங்கள். காமம் ஏன் படைக்கப்பட்டிருக்கிறது; அதை எந்த நேரத்தில் பிரயோகிக்க வேண்டும் என்று ஆராய்ந்து பாருங்கள்.



உங்கள் இதயம் எப்போதும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். அதுதான் உங்கள் உடல் முழுவதையும் ஆட்சி செலுத்த வேண்டும். உள்ளத்தின் ஆட்சிக்குப் பகுத்தறிவு துணையாக இருக்கட்டும். அவை சுதந்திரப் பிறவிகள். அவற்றை அற்ப உணர்ச்சிகளுக்கு அடிமைகளாக்கி விடாதீர்கள். அப்புறம் உங்களால் இறைவழியில் வெற்றியைக் காண முடியாது. உணர்ச்சிகளுக்கு அடிமையான உள்ளம் இருளடைந்து விடும். அதன் பேராற்றல்கள் அனைத்தும் சிதறிப் போய்விடும்! ஏமாந்து விடாதீர்கள்!

நீங்கள் காமத்துக்குத் தலைகுனியும்போது, எண்ணிலடங்காத தீய செயல்களும் தீய எண்ணங்களும் உங்களிடம் உற்பத்தியாகின்றன. சினத்துக்குத் தலை வணங்கியவர்களின் நிலையும் இதுதான். அவற்றை எப்படிப் பய்ன்படுத்த வேண்டுமோ அப்படி நீங்கள் பயன்படுத்துங்கள். அவற்றிற்கு முழு உரிமை கொடுத்து விடாதீர்கள். அப்புறம் அவற்றால் ஏற்படும் அவமானத்தை உங்களால் தாங்க முடியாது.

மணிமுடி வைக்கும் இடத்தில் செருப்பையோ, செருப்பு வைக்கும் இடத்தில் மணிமுடியையோ மறந்தும்

வைத்து விடாதீர்கள். உணர்ச்சிகளை நீங்கள் அடக்கியாளும் போது உங்கள் உள்ளத்தில் தெய்வீகம் ஒளி விடும். சாதாரண மானிடர்களுக்குப் புரியாத மர்மங்களெல்லாம் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். அனைத்தையும் நீங்கள் அறிந்து கொண்டு விடுவீர்கள். உள்ளது உள்ளபடி எல்லாமே உங்கள் உள்ளத்திற்குள் வந்துவிடும்! உங்கள் அறிவும் தெளிவும் உலக மக்கள் மீது அதிகாரம் செலுத்தும்.

காம உணர்ச்சி நடுநிலையில் இயக்கப்படும்போது சிறப்பான பல குணங்கள் உண்டாகின்றன. பேணிக்கை பற்றற்ற வாழ்வு, திருப்தி - இப்படி எத்தனையோ செல்வங்கள் உங்களிடம் தாமாகவே வருகின்றன. சின உணர்ச்சி நடுநிலையில் இயக்கப்படும்போது வீரம், பொறுமை மனோதிடம் இப்படிப் பல செல்வங்கள் உங்களைத் தேடி வருகின்றன.

உள்ளம் என்பது ஒரு கண்ணாடி. படைத்தவனின் ஆற்றல்களையும், படைப்பினங்களின் மர்மங்களையும் பிரதி பலித்துக் காட்டுவதற்காக அது படைக்கப்பட்டிருக்கிறது. அதனுள் நற்குணங்களும் நல்ல கருத்துக்களும் வளரும் போது அதன் ஆற்றல் பெருகுகிறது. மர்மமான பல உண்மைகள் பளிச்செனத் தெரிகின்றன. மார்க்கத்தின் நுட்பங்களையெல்லாம் அது மிகத் தெளிவாகப் பிரதிபலித்துக் காட்டுகிறது; நல்லதையும் கெட்டதையும் பகுத்துப் பிரித்து அறிவுரை கூறுகிறது.

''ஒரு மனிதனுக்கு இறைவன் நன்மையளிக்க விரும்பினால், அவனுடைய உள்ளத்திலேயே நல்லுபதேசம் செய்யும் ஆற்றலை ஏற்படுத்தி விடுகிறான்!' என்று பெருமானார் குறிப்பிடுகிறார்கள். ''உங்கள் உள்ளம் உங்களுக்கு நல்லுபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டால், இறைவன் உங்களைத் துன்பங்கள் அனைத்தை விட்டும் காத்தருள்வான்!''



அறிவுரை கூறும் உள்ளம்! இந்த உள்ளம் உங்களிடம் இருக்கிறதா என்று எண்ணிப்பாருங்கள். இல்லா விட்டால் உண்டாக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அதற்குரிய வழி; உங்கள் இதயத்தில் எப்போதும் இறை சிந்தனைக்கு இடம் கொடுங்கள். இதனால் உங்களுக்குக் கிடைக்கும் இன்பம் வருணனைக்கு அப்பாற் பட்டது. இதில் நீங்கள் அடையும் அமைதி இணையற்றது.

''இறை சிந்தனையால் இதயங்கள் அமைதி அடைவதில்லையா என்ன?'' என்று திருக்குர்ஆன் உங்களைப் பார்த்துக் கேட்கிறது. இல்லை என்று உங்களால் எப்படிச் சொல்ல முடியும்? மனிதனின் உள்ளம் இறை சிந்தனையால் நிச்சயம் அமைதியடைகிறது. இறை சிந்தனை, இணையற்ற அமைதியை மனிதனின் உள்ளத்திற்கு எடுத்துக் கொண்டு வருகிறது.

இயற்கையை யொட்டிச் சில சமயம் மனிதனின் உள்ளத்தில் தீய எண்ணங்களும் நல்வழிக்கு முரண்பட்ட திட்டங்களும் உருவாகின்றன. அவை கண்ணாடி போன்ற மனத்தில் கறையை ஏற்படுத்துகின்றன. அந்தக் கறை படிப் படியாக வன்மை பெற்று கண்ணாடியின் தன்மையையே முற்றிலும் மாற்றிவிடுகிறது. இந்த நிலைமை ஏற்பட்டு விட்டால் அந்த உள்ளத்தில் இறை ஞானம் தோன்றுவதற்கு வழியேயில்லை! இந்த உண்மை உங்களுக்கு நன்றாகத் தெரியும். கறை படிந்த கண்ணாடியில் எதுவும் பிரதிபலிக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியாதா என்ன?

தீய செயல்களாலும் தப்பான எண்ணங்களாலும் இறை வழியில் முன்னேறி விடலாம் என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை இறைவன் கண் டிக்கிறான்; ''அப்படியில்லை; அவர்களின் செயலாலேயே அவர்கள் உள்ளம் கறை படிந்து விட்டது!''

தப்பான எண்ணங்களாலும் முரணான செயல்களாலும் மனத்தின் தன்மைகள் வலுவிழந்துவிடக் கூடாது. எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் திட்டம் எதுவும் உருவாகாது. மறுமையைப் பற்றிய எண்ணம் உங்களுக்கு ஏற்படாது. இம்மை ஒன்றே உங்கள் குறிக்கோளாக இருக்கும்.

மனத்தில் தோன்றும் புனிதமான எண்ணங்களைச் செயல்படுத்துங்கள். ஒரு காதால் கேட்ட கருத்துக்களை மறு காதால் வெளியே தள்ளிவிடாதீர்கள். காதால் கேட்கும் கருத்துக்களை மனத்தில் பதித்துச் செயலாற்றுங்கள். இப்படித்தான் நீங்கள் நடக்கவேண்டும். இல்லையேல் மறுமையின் வெற்றியைத் தயவு செய்வு எதிர்ப்பார்க்கா தீர்கள். ஏனெனில் உங்களைப் பார்த்துத் திருமறை எள்ளி நகைக்கிறது. ''அவர்கள் மறுமையின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து விட்டார்கள்...''

மைமூன் பின் மஹ்ரான் அடியிலுள்ள கருத்துக் குரியவர். ''ஒரு மனிதன் தவறு செய்தால் அவன் உள்ளத் தில் கரும்புள்ளி ஒன்று விழுகிறது. அவன் பாவ மன்னிப் புக் கோரினால் அந்தப் புள்ளி மறைந்துவிடுகிறது. மன்னிப்புக் கோராமல் அதே குற்றத்தை அவன் மீண்டும் மீண்டும் செய்தால், அந்தக் கரும்புள்ளி விரிந்து பரவி உள்ளம் முழுவதையும் இருளடையச் செய்துவிடுகிறது.''



''நம்பிக்கையுள்ளவனின் உள்ளம் ஒளிவிடும் விளக்கு; நம்பிக்கையற்றவனின் உள்ளம் இருட்டறை'' என்று பெருமானார் குறிப்பிட்டார்கள்.

உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் இறைவழியில் துணிந்து நடைபோடுங்கள். இந்தச் செயல் உங்கள் உள்ளத்தை துடைத்துத் தூய்மைப்படுத்தும் ஆற்றலுடை யது. குற்றம் புரியாதீர்கள். அந்த எண்ணம்கூட உங்களுக்கு வரக்கூடாது. உங்கள் உள்ளம் இருளடைந்து போவதை நீங்கள் வரவேற்பீர்களா என்ன?

கண்ணாடியில் மூச்சு விட்டால் அதில் இலேசான கறை படிவதுபோன்று, நீங்கள் செய்யும் தவறான செயல்கள் ஒவ்வொன்றும் உங்கள் உள்ளத்தில் இலேசான கறையை ஏற்படுத்துகின்றன. மூச்சு விட்டால் ஏற்பட்ட கறையைக் கைக்குட்டையால் துடைப்பதுபோல், தீய செயலால் ஏற்பட்ட மனக் கறையை நற்செயலால் துடையுங்கள்.

மனிதன் தவறு செய்வது இயற்கை. தவறே செய்யாத மனிதனும் நன்மையே செய்யாத மனிதனும் உலகில் இல்லை. இந்த இயற்கையை உங்களால் மாற்ற முடியாது. என்றாலும், ஒரு தரம் தவறு செய்த பிறகு மீண்டும் அதில் பிரவேசிக்காதீர்கள். தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் தவறு செய்து விட்டால் உடனே அதற்கு இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள். தொடர்ந்து நன்மையான காரியத் தைச் செய்யுங்கள். நன்மையின் ஒளிக்கற்றை தீமையின் இருள் கீற்றை அடித்து விரட்டட்டும்!

கைக்குட்டை உங்களிடம் இருந்தாலும், கண்ணாடி மீது மூச்சு விடுவதும் அதைத் துடைப்பதுமாக இருக்காதீர்கள். மூச்சு விடுவதால் ஏற்பட்ட கறை விரைவில் மாறிவிட்

டாலும் அது மாறாதகறை ஏற்படுவதற்கு வழி வகுத்து விடும். இயன்றவரை தீய செயலில் ஈடுபடாமலிருக்க முயற்சி செய்யுங்கள். எந்த நேரமும் நற்செயலைச் செய்ய முயற்சி செய்யுங்கள். தீமையைச் செய்துவிட்டு அதற்கு மன்னிப்புக் கேட்பதும், மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தீமையைச் செய்வதும் சிறந்த குணங்களல்ல. இதனால் ஆழமான கறை ஏற்படாவிட்டாலும், இலேசான கறையாவது மனப் பரப்பில் ஏற்படத்தான் செய்யும். எச்சரிக்கிறேன்!

நான் ஒன்று சொல்கிறேன்; மனத் தெளிவு பொதுவாக எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை. அது பொதுச் செல்வமல்ல. மனத் தெளிவு உங்களுக்குத் தேவையானால், இறை சிந்தனையில் ஈடுபடுங்கள். இறைசிந்தனைக்கு மனத்திலுள்ள கறையைத் துடைத்து அதைத் தெளிவு படுத்தும் ஆற்றல் உண்டு. மனத் தெளிவைப் போன்றது தான் இறை சிந்தனை. அது அநேகருக்குப் பேரின்பத்தைக் கொடுப்பதில்லை. இறை சிந்தனை உங்கள் உள்ளத்தை அலங்கரிக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணினால், இறைவனுக்கு அஞ்சி வழிப்படுங்கள். இறையச்சத்தினால் இறை சிந்தனையும், இறை சிந்தனையினால் மனத் தெளிவும் ஏற்படுகின்றன.

இவ்வாறு நீங்கள் மனத்தெளிவை அடைந்துவிட்டால் நீங்கள் அடையும் இன்பங்கள் மட்டிட முடியாதவை. இது மகத்தானதொரு வெற்றி. இந்த வெற்றி உங்களுக்குக் கிடைத்து விட்டால் இறைவனின் சந்திப்பு உங்களுக்கு அவசியம் கிடைக்கும்.

● ❖ ●

## மனமும் கண்ணாடியும்

இதயத்தில்தான் அறிவு ஏற்படுகிறது என்று முதலிலேயே நான் எழுதிவிட்டேன். எதிரிலுள்ள பொருள்கள் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல், உள்ளத்தில் அனைத்தும் பிரதிபலிக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். இந்த உவமானத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய்வோம்.

உங்களுக்கு எதிரில் பசுமையான மரம் ஒன்று நிழல் பரப்பிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னால் அழகானதொரு வீடு நிழலில் குளித்துக் கொண்டிருக்கிறது. அந்த வீட்டின் கூரை மீது காகம் ஒன்று உட்கார்ந்திருக்கிறது. இவற்றையெல்லாம் நீங்கள் கண்களால் பார்த்தறிகிறீர்கள். ஒரு கண்ணாடியை எடுத்து எதிரில் வைத்துப்பாருங்கள். அதில் உங்கள் முகம் தெரிகிறது. அதே கண்ணாடியை அந்த மரத்துக்கு எதிரில் பிடித்துப் பாருங்கள். அப்போது அதில் மரம், வீடு, காகம் எல்லாமே பிரதிபலிக்கின்றன.

சடப்பொருளின் அமைப்பையும் அதன் நிறத்தையும் கண்ணாடி தெளிவுப்படுத்திக் காட்டுகிறது. கண்ணாடியை வைத்துக் கொண்டு நீங்கள் மரத்தையும் அதன் நிறத்தையும் அதன் அமைப்பையும் அறிந்து கொள்கிறீர்கள். ஒரு

பொருள் பெற்றிருக்கும் தோற்றம் அப்படியே கண்ணாடிக் குள் வந்துவிடுகிறது.

இதே போன்று உள்ளம் எனும் கண்ணாடியில் உலகி லுள்ள பொருள்கள் எல்லாம் பிரதிபலிக்கின்றன.

1. ரசமேற்றப்பட்ட கண்ணாடியில் நாம் முகம் பார்க்கிறோம். வெகு காலத்திற்கு முன்னால் இரும்புப் பட்டையைக் கண்ணாடியாக உபயோகித்து வந்தார்கள் அந்தக் காலத்திலிருந்தவர்கள். இரும்புப் பட்டையை வட்டமாக வெட்டி எடுத்துக் கொள்வார்கள் முதலில். பிறகு அந்த இரும்புத் துண்டைத் தேய்த்துத் தேய்த்துப் பளபளப் பாக்குவார்கள். தேவையான மெருகு ஏறியதும் அதில் பிரதிபலிக்கும் தன்மை உண்டாகிவிடும். மெருகு ஏற்றப் படாத இரும்புத் துண்டுக்குப் பிரதிலிக்கும் ஆற்றல் கிடையாது. ரசம் பூசப்படாத கண்ணாடியும் இத்தகையது தான். அதில் உங்கள் முகத்தைப் பார்க்க முடியாது. அதை முகத்துக்கு நேரே பிடித்துக்கொண்டு நீங்கள் பாருங்கள். அதில் உங்கள் முகமோ அதிலுள்ள தாடியோ மீசையோ தெரியாது. எதிரில், நிழல் பரப்பும் மரமும் நிழல் குளிக்கும் வீடும் நிழல் சுவைக்கும் காகமும் உங்கள் பார்வையில் படும். ஏனெனில், அது ரசம் பூசப்படாத கண்ணாடி. எனவே உங்கள் பார்வை கண்ணாடிக்குள்ளே ஊடுருவிச் சென்று மரத்தையும் வீட்டையும் காகத்தையும் பார்க் கிறது.

எனவே ஒரு கண்ணாடி எதிரிலுள்ளவற்றைப் பிரதி பலித்துக் காட்டவேண்டுமானால், அதற்கு ரசம் பூச வேண்டும். ஒரு இரும்புத் துண்டு கண்ணாடியாகப் பயன்படவேண்டுமானால், அதற்கு மெருகு ஏற்ற வேண்டும்.



சிறுவர் சிறுமியரின் உள்ளத்தை ரசம்பூசாத கண்ணா டிக்கு ஒப்பிடலாம். இந்தக் கண்ணாடியில் முகம் பார்க்க முடியாததுபோல், இளம் உள்ளத்தில் இறைஞானம் பிரதி பலிக்க முடியாது. இது பண்படாத உள்ளம். அதைப் பண் படுத்தும்வரை அதில் இறை அறிவு பிரகாசிக்க முடியாது. ரசம் பூசப்படும்வரை கண்ணாடி எதையும் பிரதிபலிக்காதது போல், பண்படும்வரை உள்ளம் எந்த மர்மத்தையும் தெளிவுபடுத்தாது.

2. கறைபடிந்த கண்ணாடி ஒன்றை இப்போது எடுத்துக் கொள்வோம். தேவையின் அளவுக்கு ரசம் பூசப்பட்டிருந் தாலும் இந்தக் கண்ணாடி நமக்குப் பயன்படுவதில்லை. ஏனெனில், இதன்மேல் படிந்திருக்கும் கறை ஆழமானது. எனவே அது கண்ணாடியின் ஒளியைத் தின்று விடுகிறது.

உள்ளத்தின் ஒளியே அனைத்தையும் ஈர்த்துவருகிறது. சில வேளைகளில் உள்ளத்தில் படியும் ஆழமான கறை அதன் ஒளியைத் தின்று தீர்த்துவிடுகிறது.

மனித இனத்தில் பெரும்பாலோர் இத்தகைய உள்ளத் தையே பெற்றிருக்கிறார்கள். எல்லாருக்கும் உள்ளம் உண்டு. என்றாலும், நன்மையை எண்ணுகிரவர்களும் அதைச் செய்கிறவர்களும் உள்ளத்தின் ஒளியை வளர்த்துக் கொள்கிறார்கள். தீய எண்ணமும் தீய செயல்களும் ஆழமான கறையை உள்ளத்தில் உருவாக்குகின்றன. காமம், கோபம், பொறாமை, சூழ்ச்சி முதலிய துர்க்குணங்கள் வலுவான கறையை ஏற்படுத்துகின்றன. இந்தக் குணங்கள் நிறைந்த உள்ளத்திற்கு இறைவனைக் காணும் பேறு கிடையாது. ஏனெனில் இந்த உள்ளம் தீய எண்ணங்களால் இருள் சூழ்ந்து கிடக்கிறது.

''ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்தால்; உடனே அவன் பகுத்தறிவு அவனிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறது. அது மீண்டும் அவனிடம் திரும்பி வராது'' என்று பெருமானார் குறிப்பிடுகிறார்கள். தீய செயல்களால் ஏற்படும் தீங்கு எத்துணைக் கொடியது என்பதைப் பெருமானார் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஆனால் வாணாள் முழுவதும் சிறியதொரு குற்றமும் இல்லாமல் கழிந்துவிடுமென்று எண்ணிவிடாதீர்கள்; அது சாத்தியமில்லை. குற்றம் செய்யும் சுபாவமுள்ளவன் மனிதன். நீங்கள் ஏதேனும் குற்றம் செய்துவிட்டால், உடனே நற்காரியம் செய்யுங்கள். அது உங்கள் மனத் திரையில் ஏற்பட்ட கறையைப் போக்கட்டும்.

இயன்றவரை குற்றம் செய்யாதீர்கள். நன்மையை எப்போதும் செய்யுங்கள். அதன் ஒளி உங்கள் உள்ளத்தை நிரப்பட்டும். உள்ளத்தில் கறை படியும் அளவுக்கு அசட்டையாக இருந்து விடாதீர்கள். கறையை போக்கிவிட்டால் மட்டும் போதாது. புதிய பல முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும்.

மனத்தின் குரலுக்கு மதிப்புக் கொடுக்காதீர்கள். அதை அடக்கியாள முயற்சியுங்கள். இறைவழியில் துணிவுடன் ஈடுபடுங்கள். இது உங்கள் உள்ளத்தில் பிரத்தியோக ஒளியை உண்டாக்கும்.

''எமது வழியில் மனப் போராட்டம் நடத்தியவர்களுக்கு எமது பாதையைக் காண்பிப்போம்!'' என்கிறது திருக்குர்ஆன்.

''கற்றதை வைத்துச் செயலாற்றும் மனிதனுக்கு இறைவன் ஆசானாயிருப்பான். அவன் அறிந்திராதவற்றை



எல்லாம் இறைவன் அவனுக்கு கற்றுக் கொடுப்பான்!'' என்று பெருமானார் கூறுகிறார்கள்.

3. கண்ணாடியில் பிரதிபலிக்க வேண்டிய பொருள், கண்ணாடிக்கு எதிரில் இருந்தால்தான் பிரதிபலிப்பு ஏற்படுகிறது. கண்ணாடியின் முகம் தெற்கிலிருக்கும் போது கிழக்கிலுள்ள பொருள் அதில் பிரதிபலிக்காது.

இதே போன்று உள்ளம் எத்துணை ஆற்றல் மிக்கதாய் இருந்தாலும் சில வேளை அதில் இறையறிவு தோன்றுவதில்லை. இத்தகைய உள்ளத்தைப் பெற்றவர்களும் அதிகம் தான். இவர்களின் உள்ளம் தெளிவானது; இறைவனைப் பிரதிபலித்துக் காட்டும் பேராற்றல் பொருந்தியது. என்றாலும், இறைவன் அதில் தோன்றுவதில்லை. ஏனென்றால், இவர்கள் கணிசமான அளவுக்கு இறைவனைப்பற்றிச் சிந்திப்பதில்லை. தம் உள்ளத்தின் முகத்தை வேறு திக்கில் திருப்பி விடுகிறார்கள். வணக்கம், மனப்பயிற்சி, வணக்கத்துக்கு ஏற்படும் குறுக்கீடு - இப்படி எல்லாவற்றையும் அவர்கள் அலசிப் பார்க்கிறார்கள். அவர்கள் நல்ல வேலையைத்தான் செய்கிறார்கள். இது புனிதமானதுதான். ஆனால், இவற்றுக்கெல்லாம் அப்பாலுள்ள அந்தத் தனிப் பெரும் ஆற்றலை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இறை வணக்கத்துக்காக அரைமணி நேரத்தைச் செலவிடும் அவர்கள் இறை சிந்தனைக்காக அரை வினாடி நேரத்தையும் செலவிடுவதில்லை. இவர்கள் நல்ல சிந்தனையில் நேரத்தைச் செலவிடுவதால், இவர்கள் ஒளிவிடும் இதயத்தைப் பெறுகிறார்கள். உள்ளத்தில் முகத்தை இறைவனின் பக்கம் திருப்பாததால், இவர்களை இறைவன் அறியும் பேற்றை இழக்கிறார்கள்.

நல்ல காரியம் செய்கிறவர்களின் நிலையே இப்படியிருந்தால், கெட்ட காரியம் செய்கிறவர்களின் நிலையைப் பற்றி கேட்க வேண்டியதில்லை. அவர்கள் எப்படித்தான் இறைவனை அறியப் போகிறார்கள்?

4. கண்ணாடிக்கும் அதில் தோற்றமளிக்க வேண்டிய பொருளுக்கு மிடையில் திரை இருக்கக் கூடாது. திரை போட்ட கண்ணாடியில் எதுவும் தோன்றாது. இதுபோன்ற திரை சிலரது உள்ளத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இது இறைவனுக்கும் உள்ளத்துக்குமிடையில் குறுக்கிடாக நின்று கொண்டிருக்கிறது.

பெற்றோரின் போதனையாலோ, யாரோ ஒரு பிரசங்கி உளறிக் கொட்டியதாலோ இளமையில் ஏற்பட்ட அறிவு - நம்பிக்கை வளர்ந்து வலுப்பெறுகிறது. இவர்கள் விளையாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்தே இறைவன் சம்பந்தமாகச் சில நம்பிக்கைகளை - கொள்கைகளை வளர்த்து வந்திருக்கிறார்கள். நாலுபேர் சொல்வதைக் கேட்ட பிறகு இந்த நம்பிக்கை ஏற்படுகிறது. சிந்திக்கும் வயது வந்த பிறகும் இவர்கள் பழைய நம்பிக்கையை விடுவதில்லை; விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறார்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இறை சிந்தனையில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் என்னதான் இறை சிந்தனை செய்தாலும் விளையாட்டு வயதிலிருந்து வளர்ந்து வந்த மூட நம்பிக்கைகள் இறைவனுக்கும் உள்ளத்துக்குமிடையில் திரைகளாகத் தொங்குகின்றன. கல்லூரிப் படிப்பைத் தவறான வழியில் பயன்படுத்தியதாலும் இந்த நிலைமை ஏற்படுகிறது.

இறைவனைப் பற்றியும் அவன் ஆற்றலைப் பற்றியும் ஆராய்ந்து வாதம் புரிகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள்.



இவர்கள் 'முதகல்லிமீன்' என்று அழைக்கப்படுகிறார்கள். 'பேசுகிறவர்கள்' என்று இந்தப் பதத்திற்குப் பொருள். ஏனெனில், இவர்கள் தமக்குட்பட்ட விரவரங்களைப் பகுத்தறிவுக்குத் தக்கவாறு எடுத்துப் பேசுகிறார்கள். ஆனால் உண்மையான இறையறிவை இவர்கள் பெற முடியாது. ஏனெனில், அவர்களின் கொள்கையும் பூர்வீகமான நம்பிக்கையும் அவர்களின் உள்ளத்திற்குத் திரை போட்டு விடுகின்றன.

5. கண்ணாடியில் தோன்ற வேண்டிய பொருள் எங்கு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளவேண்டும். இல்லையேல் அதை உங்களால் கண்ணாடியில் காணமுடியாது. பொருள் இருக்கும் இடம் தெரிந்தால்தானே அதன் பக்கம் கண்ணாடியைத் திருப்பி வைக்க முடியும்?

இன்றைக்கு இத்தகைய நிலையில் இருப்பவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். இறை ஞானத்தை அடையத் துடிக்கும் அவர்கள், தமது மனக் கண்ணாடியை எப்படித் திருப்ப வேண்டும் என்று தெரிந்து கொள்ளாமல் தவிக்கிறார்கள். ஏனெனில், இறைஞானம் எங்கு இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

புதுவிவரம் ஒன்றை அறிகிறவர்கள் ஒருமுறையைக் கையாள்கிறார்கள். தாம் ஏற்கனவே அறிந்த இரண்டு விவரங்களை வைத்துக்கொண்டு மூன்றாவதாகப் புதியதொரு விவரத்தை அறிந்துகொள்கிறார்கள். ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து செயல்படுவதால் குழந்தை பிறப்பதுபோல், மேற்குறிப்பிட்ட இரண்டு விவரங்கள், முற்றும் புதிதான மூன்றாவது விவரத்தைக் கொண்டு வந்துவிடுகின்றன.

'மனிதன் பகுத்தறிவு பெற்றவன்' என்பது ஒரு விவரம்.

'சுல்தான் என்பவன் ஒரு மனிதன்' என்பது இரண்டாவது விவரம்.

இந்த இரண்டு விவரங்களையும் சேர்த்து வைத்துப் பார்க்கும்போது புதியதொரு அறிவு பிறக்கிறது; 'சுல்தான் பகுத்தறிவு பெற்றவன்'.

இது சாதாரண உவமானம். இப்படித்தான் புது அறிவை உண்டாக்க வேண்டும். இந்த முறையைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களால் அறிவுத்துறையில் வெற்றியடைய முடியாது.

உங்கள் கையில் ஒரு கண்ணாடி, அதில் உங்கள் பிடரியைப் பார்க்க விரும்புகிறீர்கள். நேரே தூக்கிப் பிடித்தால் அதில் உங்கள் முகம் தெரியும்; பிடரி தெரியாது. அதைப் பிடரிக்கு நேரே பிடித்தால் கண்ணாடியையே உங்களால் பார்க்க முடியாது; இப்போது என்ன செய்வீர்கள்? ஒரே கண்ணாடியால் பிடரியைப் பார்ப்பது சாத்தியமில்லை. இன்னும் ஒரு கண்ணாடி தேவைப்படுகிறது. ஒரு கண்ணாடியைப் பிடரிக்கு நேராகவும் மறு கண்ணாடியை முகத்துக்கு நேராகவும் தூக்கிப் பிடித்தால், உங்கள் பிடரியை நீங்கள் பார்க்கலாம். இந்த முறையைத் தெரிந்துகொள்ளாதவர்கள் பிடரியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தையே விட்டுவிடுவதுதான் நல்லது.

இதே போன்று, இறை ஞானத்தை உண்டாக்குவதற்கு விசித்திரமான பல வழிகள் இருக்கின்றன. ஆனால் அந்த வழிகளை எல்லாம் நன்கு தெரிந்தவர்கள் மிக மிகக் குறைவு என்றே நான் எண்ணுகிறேன்.



உள்ளம் என்பது சிறப்பு மிக்க ஒன்று. அதில் இறையறிவு உட்பட எல்லாமே பிரதிபலிக்கத்தான் செய்யும். என்றாலும், அதனுள் இயற்கையான சில தடைகள் வளர்வதால் இறையறிவு ஏற்பட முடியாமற் போகிறது. இறையறிவு உண்டாக வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் மேற்குறிப்பிட்ட தடைகள் அனைத்தையும் அப்புறப்படுத்துங்கள். எல்லாருக்கும் இருப்பதுபோல் உங்களுக்கும் புனிதமானதொரு இதயம் உண்டு. உங்களுக்கு மட்டுமல்ல, மானிட இனத்தில் தோன்றிய ஒவ்வொரு உயிருக்கும் அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த உள்ளம் மனிதனுக்கு மட்டுமே உரித்தான ஒரு செல்வம் என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். இது மலைக்கோ விண்மீன்களுக்கோ கொடுக்கப்படவில்லை. எனவே அவற்றிற்கு இறைவனை அறியும் பேறு கிடைக்கவில்லை. நான் மீண்டும் கூறுகிறேன்; ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனை அறியும் பேறு உண்டு. சூழ்நிலையாலும் பயிற்சியாலும் உருவான சில தடைகள் அந்த இறையறிவைத் தடுத்தி நிறுத்தி விடுகின்றன.

இந்தத் தத்துவத்தைத்தான் பெருமானார் இப்படிச் சுட்டிக் காட்டினார்கள். ''ஒவ்வொரு குழந்தையும் இறை நம்பிக்கையின் அடிப்படையிலேயே பிறக்கிறது. என்றாலும், அதன் பெற்றோர் கிறிஸ்தவனாகவோ, யூதனாகவோ, நெருப்பை வணங்குகிறவனாகவோ அதை மாற்றி விடுகிறார்கள்.''

எச்சரிக்கிறேன்; உங்கள் உள்ளத்தின் ஆற்றலுக்கு ஊறு விளைவித்து விடாதீர்கள். அதன் ஆற்றலை எப்படி வளர்க்க வேண்டுமோ அப்படி அதை வளருங்கள். அப்போது

உங்கள் உள்ளத்தில் விண்ணகத்தின் மர்மங்கள் அனைத்தும் பிரதிபலிக்கும்.

இதோ பெருமானார் கூறுகிறார்கள்: ''மனிதனின் உள்ளத்தைச் சுற்றிலும் தீயசக்திகள் வட்டமிடவில்லை என்றால், அவன் விண்ணகத்தின் ஆட்சி முழுவதையும் கண் கூடாகப்பார்ப்பான்!'' மனத்தில் வளரும் தீய உணர்வுகள் இறையறிவுக்குத் தடைவிதிக்கின்றன என்ற உண்மை இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் ஓர் அரபியர் அண்ணலாரிடம் கேட்டார்: ''இறைவன் எங்கு இருக்கிறான்? அவன் மண்ணகத்தில் இருக்கிறானா? விண்ணகத்தில் இருக்கிறானா?''

பெருமானார் சுருக்கமாக விடை கொடுத்தார்கள். ''இறை நம்பிக்கையுள்ளவர்களின் உள்ளத்தில்!''

இதே கருத்தை உமர் அவர்கள் இப்படி வெளியிடு கிறார்கள்: ''என் உள்ளம் இறைவனைப் பார்த்தது!''

இறைவணக்கத்தாலும் இறையச்சத்தாலும் உங்கள் உள்ளம் சிறப்படைகிறது. அவை அந்த உள்ளத்தின் ஆற்றலை விரிவுபடுத்துகின்றன. மானிட உள்ளத்திற்கும் இறைவனுக்கு மிடையிலுள்ள திரை கிழித்தெறியப்படு கிறது. இறையச்சம் அத்தனை சக்தி வாய்ந்தது. உங்கள் உள்ளத்தின் திரையைக் கிழித்தெறிய முயற்சி செய்யுங்கள். அந்தத் திரை அகன்று விட்டால், விண்ணக ஆட்சி முழுவ துமே உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலுள்ள மர்மங் களும் மறைபொருள்களும் உங்களுக்குச் சுத்தமாகத் தெரியும்.



இத்தகைய பேராற்றல் உங்கள் உள்ளத்திற்குக் கிடைக்க வண்டும். இதில் தான் உங்கள் முழுத் திறமையையும் ங்கள் காட்டவேண்டும். இந்த ஆற்றல் உங்கள் இறை ம்பிக்கையைக் கணிசமான அளவுக்கு வளர்த்துவிடும்.

மார்க்க நம்பிக்கை என்பது பொதுவான ஒன்று. வ்வொருவருக்கும் மார்க்கத்தில் நம்பிக்கையுண்டு. பற்றோர் சொல்வதையும் பெரியோர் சொல்வதையும் கட்டுச் சிலர் மார்க்கத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். வறு சிலர் ஓயாத சிந்தனையாலும் சலியாத ஆராய்ச்சி ாலும் ஒரு தீர்மானத்திற்கு வருகிறார்கள். இன்னும் சிலர் ள்ளத்தின் ஒளியால் அனைத்தையும் உணர்ந்து, இறை ம்பிக்கையை வலுப்படுத்துகிறார்கள். இவ்வாறு நம்பிக் கையை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். எனவே மக்கட் ரள், இந்த மூன்று பிரிவுகளில் கட்டுப்பட்டு விடுகிறது.

**முதற் பிரிவினர்:** இவர்கள் முஸ்லிம்கள்தாம். முஸ்லிம் ளான பெற்றோருக்குப் பிறந்து இஸ்லாமியச் சூழ்நிலை யில் வளர்கிறவர்கள். இளம் வயதிலிருந்தே படிப்படியாக இஸ்லாத்தைப் பற்றித்தெரிந்து கொள்கிறார்கள். இவர்கள் பெற்றோர் தமக்குத் தெரிந்ததைத் தம் பிள்ளைகளுக்குக் ற்றுக் கொடுக்கிறார்கள். பிள்ளைகள் தம் பெற்றோர் சொல்லிக் கொடுத்ததை மனத்தில் பதித்துக் கொள் றார்கள்.

சரியான வயதை வந்தடைந்ததும் எல்லாருக்கும் இத்த கைய அறிவுதான் முதலில் கிடைக்கிறது. இதில் அசையாத ம்பிக்கையும் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. ஏனெனில், நம் பெற்றோர் பொய் சொல்ல மாட்டார்கள் என்பதும் நம் நம் பிக்கை. எனவே அவர்கள் சொல்வது அனைத்தையும் நாம் ம்பிவிடுகிறோம். ஆனால் பெற்றோரிடமிருந்து நமக்குக்

கிடைத்திருப்பது உண்மைதான் என்பதற்கு நம்மிடம் ஆதாரம் கிடையாது. மேற்குறிப்பிட்ட நம்பிக்கைக்காக நாம் ஆதாரம் தேடவில்லை. ஆதாரம் தேவைப் படவுமில்லை.

உங்கள் நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக நீங்கள் அவர் வீட்டுக்குப்போகிறீர்கள். அந்த நண்பர் வீட்டில் இருக்கிறாரா, இல்லையா என்று உங்களுக்குத் தெரியவில்லை. வீட்டு வாசலை நெருங்கியதும் வீட்டிலிருந்து வெளியில் வருகிறார் நண்பரின் தந்தை. உங்கள் நண்பர் வீட்டில் இருப்பதாக அவர் உங்களிடம் சொல்கிறார்.

இந்தக் கட்டத்தில் அவர் வார்த்தையில் உங்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில், உங்கள் நண்பரின் தந்தை பொய் சொல்லமாட்டார் என்பது உங்கள் நம்பிக்கை. அவர் பொய் சொன்னதை இதற்கு முன் நீங்கள் கண்டதில்லை. எனவே இப்போது அவர் உண்மையைத் தான் சொல்லியிருக்க வேண்டும் என்ற தீர்மானம் உங்களுக்கு ஏற்படுகிறது.

பெரும்பாலோரின் மனத்தில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை இத்தகையதுதான். அவர்கள் தம் பெற்றோரையும் பட்டதாரிகளையும் மதிக்கிறார்கள்; பேச்சாளர்கள் கூறுவதையும் எழுத்தாளர்கள் எழுதுவதையும் நம்புகிறார்கள். இந்த வழியிலேயே அவர்கள் இறைவனைப் பற்றியும், இறைத் தூதரைப்பற்றியும், இறை மார்க்கத்தைப் பற்றியும், இறை ஆற்றல்களைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்கிறார்கள். இவற்றில் அவர்களுக்கு முழு நம்பிக்கையும் ஏற்பட்டு விடுகிறது. எனவே எந்த ஆதாரத்தையும் அவர்கள் தேடியலைவதில்லை.

இது மறுமையில் வெற்றி தரக்கூடிய நம்பிக்கைதான். என்றாலும், இதைச் சிறப்புமிக்கது என்று குறிப்பிட



முடியாது. இறையாண்மையைப் பெறுவதற்கு இந்த நம்பிக்கை போதாது. ஏனெனில், இதில் சில சமயம் தவறு ஏற்பட்டு விடக்கூடும். உங்கள் பெற்றோர் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவை அனைத்தும் உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்பது என்ன நிச்சயம்? சரியா, தப்பா என்று அவர்களுக்கே தெரியாதிருக்கக்கூடும். சரியானது என்று அவர்கள் எண்ணியதை உங்களுக்குச் சொன்னார்கள்; அவ்வளவுதான். அது முற்றிலும் தப்பானதாகக்கூட இருக்கலாமல்லவா?

யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஆரம்பத்தில் தம் பெற்றோரிடமிருந்துதான் மார்க்கத்தை அறிகிறார்கள். முஸ்லிம்கள் நம்பிக்கை வைப்பதுபோல் அவர்களும் தம் மார்க்கத்தில் முழு நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொண்டிருப்பது தவறான நம்பிக்கை. உண்மைக்கு மாறுப்பட்ட நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு வித்திட்டவர்கள் பெற்றோர்தாமே? உங்கள் நம்பிக்கை உண்மையானது. ஆனால் அதற்கு உங்களிடம் எந்த ஆதாரத்தையும் கூறவில்லை. கண்ணால் கண்டதை விவரிப்பது போல் அவர்கள் விவரித்தார்கள். ஆதாரத்துடன் கூடியதை நம்புவதுபோல், அவர்களின் கூற்று முழுவதையும் நீங்கள் நம்பிவிட்டீர்கள்.

**இரண்டாம் பிரிவினர்:** நண்பர் வீட்டு வாசலில் நின்று கொண்டு நீங்கள் யோசிக்கிறீர்கள். வீட்டுக்குள்ளிருந்து உங்கள் நண்பரின் குரல் கேட்கிறது. அவர் குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கிறார். அவர் வீட்டில்தான் இருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு இது போதும்.

இக்கட்டத்திலும் உங்களுக்குப் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது. என்றாலும், முதலில் ஏற்பட்ட நம்பிக்கைக்

தும் இப்போது ஏற்பட்டிருக்கும் நம்பிக்கைக்குமிடையில் வித்தியாசமுண்டு. நண்பரின் குரலைக் கேட்டதால் ஏற்பட்ட நம்பிக்கை, நண்பரின் தந்தை சொன்னதால் ஏற்பட்ட நம்பிக்கையைவிட வலுவானது. இதில் ஆதாரம் கலந்திருக்கிறது. அவர் குர்ஆன் ஓதுவது உங்களுக்குக் கேட்கிறதல்லவா? அவர் வீட்டில்தான் இருக்கிறார் என்பதற்கு இந்த ஓர் ஆதாரம் போதாதா?

தர்க்க ஞானிகள் கொண்டிருக்கும் நம்பிக்கை இத்தகையதுதான். இறைவனையும் இறையாற்றல்களையும் இவர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கைக்கு இவர்கள் தேவையான ஆதாரத்தையும் தேடிக் கொள்கிறார்கள். சிந்தனையாலும் தெளிவான ஆதாரத்தாலும் இந்த நம்பிக்கை அவர்களுக்குக் கிடைக்கிறது. பாமரர்களின் நம்பிக்கையைப் பார்க்கிலும் இவர்களின் நம்பிக்கை வலுவானது என்பது தெளிவான ஒன்று. ஏனென்றால், இவர்கள் பெற்றோர் சொன்னதை நம்பியதோடு அதற்கு ஆதாரமும் தேடிக் கொள்கிறார்கள் - நண்பரின் குரலை வைத்து நீங்கள் ஆதாரம் தேடிக்கொண்டது போல்!

ஆனால் இந்த நம்பிக்கையும் சில வேளைகளில் தப்பான அடிப்படையில் அமைந்துவிடக்கூடும். நண்பரின் குரலைக் கேட்டீர்கள் என்பது உண்மைதான். அவர் வீட்டில் இருக்கிறார் என்பதற்கு இதை நீங்கள் ஆதாரமாக அமைத்துக்கொண்டீர்கள் என்பதும் நியாயம்தான். என்றாலும், இந்தக் கட்டத்திலும் சில சமயம் தவறு ஏற்பட முடியும். உங்கள் நண்பரைப் போல் குர்ஆன் ஓதுகிறவர்கள் உங்கள் ஊரில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவரைப்போல் பேசுகிறவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களில் ஒருவர் உங்கள் நண்பருக்கு நண்பராயிருந்து, அவர் இந்த வீட்டிற்கு வந்திருக்கக் கூடுமல்லா?



உங்கள் நண்பரின் தந்தை சற்று முன் சொன்னாரே - தம் மைந்தன் வீட்டில் இருக்கிறான் என்று! அவர் ஏன் அப்படிச் சொன்னார்? அவர்மீது குற்றம் சொல்ல முடியாது. உங்களைப்போல்தான் அவரும் தம் மகனை, அவர் கண்ணால் பார்க்கவில்லை. மாடியிலிருந்து குர்ஆன் ஓதும் சத்தம் கேட்டது. ஓதப்பட்ட முறை அவருக்குப் பழக்கமானது. தம் மைந்தனிடமிருந்து அந்தத்தொனியை அவர் பல தடவைகள் கேட்டிருக்கிறார். எனவே மாடியிலிருந்து குர்ஆன் ஓதுவது தம் மைந்தன் தான் என்று தீர்மானித்து விட்டார்! அவர் நம்பியதை உங்களிடம் சொல்லிவிட்டார். தம் மகன் வீட்டில் இல்லை என்பதோ, சந்தித்துப் போகலாம் என்று வந்திருக்கும் நண்பன் குர்ஆன் ஓதுகிறான் என்பதோ அவருக்குத் தெரியாது.

இவ்வாறு உங்கள் நம்பிக்கையில் கோளாறு ஏற்பட்டு விடக்கூடும்; இது சாத்தியமே. பெரும்பான்மை இப்படி நடப்பதில்லை. ஒரு சில சமயமாவது இப்படி நடக்க முடியுமல்லாவா?

இதேபோன்று தர்க்க ஞானிகளின் நம்பிக்கையில் சில சமயம் கோளாறு ஏற்பட்டுவிடுவதுண்டு. தர்க்க ரீதியில் அவர்கள் ஆதாரம் ஏற்படுத்திக் கொண்டாலும், ஒரு சில சந்தர்ப்பங்களில் அந்த ஆதாரமும் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. தம் பெற்றோர் சொல்லிக் கொடுத்ததும் சொந்தச் சிந்தனையால் கண்டுபிடித்ததும் உண்மைக்கு மாறுபட்டவை என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பெரும்பான்மை இப்படி நடப்பதில்லை. என்றாலும், மிகச் சில சந்தர்ப்பங்களில் இப்படி நடப்பது சாத்தியமே!

இந்த விளக்கத்தை நீங்கள் தவறாக உணர்ந்து கொள்ள வேண்டாம். நண்பரின் குரலை நீங்கள் கேட்கும் போதெல்

லாம், அந்தக் குரலுக்குரியவர் நண்பரின் நண்பராகத்தான் இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. சில வேளைகளில் அப்படி ஏற்படுகிறது என்பதே என் கருத்து. இதே போன்று, இறைவனுக்கும் இறை ஆற்றல்களுக்கும் நீங்கள் ஆதாரம் ஏற்படுத்தும் போதெல்லாம், அந்த ஆதாரம் தப்பான நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகின்றன என்று நான் சொல்லவில்லை. சில வேளைகளில் மனிதனின் ஆதாரம் அவன் நம்பிக்கையில் கோளாறை ஏற்படுத்துகிறது என்பதே என் கருத்து.

**மூன்றாவது பிரிவினர்:** நண்பரின் வீட்டு வாசலில் நீங்கள் நிற்கிறீர்கள். நண்பரின் தந்தை கொடுத்த விளக்க மும் வீட்டுக்குள்ளிருந்து வந்த குரலொலியும் உங்களுக்குப் பூரண நம்பிக்கையை ஏற்படுத்திவிடுகின்றன. என்றாலும், நீங்கள் ஒரு வேலை செய்கிறீர்கள். உங்கள் நண்பரை உங்கள் கண்களாலேயே பார்க்கிறீர்கள். இதற்குமேல் உங்கள் நம்பிக்கை வளர முடியாது. இனிமேல் உங்கள் நம்பிக்கையை எவராலும் குலைக்க முடியாது. ஏனெனில் உங்கள் கண்களை நீங்கள் என்றைக்குமே சந்தேகித்த தில்லை!

நீங்களே சொல்லுங்கள். இப்போது உங்கள் நண்பர் வீட்டில்தான் இருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. உண்மையை கண்ணால் கண்டுவிட்டீர்களல்லவா?

கண்ணால் கண்டதை நீங்கள் எப்படி நம்புகிறீர்களோ, அப்படியே கண்ணால் கண்டதுபோல் இறைவனையும் இறைமார்க்கத்தையும் மறுமை நாளையும் இறைத் தூதர் களையும் நம்புகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். இத்தகைய வர்கள் சிலர் இருக்க முடியும். இந்தப் படித்தரத்தைப் பலரால் அடைய முடியாது.



இவர்களின் உள்ளம் கண்ணாடி போன்றது; ஏன் - கண்ணாடியை விடத் தெளிவானது. மார்க்கத்தைப் பற்றிய மர்மங்கள் அனைத்தும் அந்தக் கண்ணாடி மனத்தில் தோற்ற மளிக்கின்றன. அவர்களுக்கு மார்க்கத்தில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை ஆழமானது. எத்தகைய புரட்சிக்கும் அது அசை யாது. இந்த நம்பிக்கை குலைந்து போவது அசாத்தியமான என்று. ஏனெனில் அவர்கள் அனைத்தையும் மனக் கண்ணால் பார்த்துவிட்டார்கள். எனவே மறுமையைப் பற்றியோ சொர்க்க நரகத்தைப் பற்றியோ இம்மியளவும் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுவதில்லை.

இவ்வாறு அசையாத நம்பிக்கையைப் பெற்றவர்கள் இறையண்மையுள்ளவர்கள். இவர்கள் அரபி மொழியில் 'முகர்ரபீன்' என்று அழைக்கப்படுகிறார்கள். 'நெருங்கிய வர்கள்' என்று அர்த்தம்! 'ஸித்தீகீன்'களும் இந்தப் படித் தரத்தில் உள்ளவர்கள்தாம். இந்தப் பதத்திற்கு 'உண்மை யானவர்கள்' என்று பொருள். ஏனெனில் இவர்கள் உண்மையை உண்மையாகவே உணர்ந்து கொள்கிறார்கள்.

இவர்களுக்கு உறுதுணையாய் நிற்பது மனத்தெளிவு. இதன் உதவியால்தான் அவர்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிறார்கள். இதை அரபி மொழியில் 'கஷ்பி' என்று குறிப்பிடுகிறார்கள். மனத்தெளிவை எடுத்துக்கொண்டால் அதில் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றன. மனத்தெளிவு பெற்றவர்கள் எல்லாரும் ஒரே படித்தரத்தில் உள்ளவர்கள் என்று கூறமுடியாது. அவர்களுக்கிடையே ஏற்றத் தாழ்வு நிச்சயமாக உண்டு.

● ❖ ●

# மனமும் அறிவும்

மனிதனின் மனம் எந்த அறிவையும் ஏற்றுக் கொள்ளும் ஆற்றலுடையது. இதை முன்னர் நான் பல தடவைகள் எழுதிவிட்டேன். அறிவு ஏற்படுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. கண்ணால் காணும் ஒவ்வொன்றிலிருந்தும் - காதால் கேட்கும் ஒவ்வொன்றிலிருந்தும் அறிவு பெறுகிறவர்கள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சில சமயம் யாரும் சொல்லிக் கொடுக்காமல் எந்தப் புத்தகத்தையும் படிக்காமல் நமக்கு அறிவு கிடைக்கிறது. தனக்குத் தானாகவே ஏற்படும் அறிவு இது. வேறு சில சமயம் பள்ளிக்கூடமும் கல்லூரியும் நமக்கு அறிவு புகட்டுகின்றன. இது முயற்சியால் கிடைக்கும் அறிவு. இன்னும் சில சமயம் திருமறையிலிருந்தும் பெருமானாரின் மணிமொழியிலிருந்தும் நாம் அறிவு பெறுகிறோம். இப்போது நம் சிந்தனைக்கு வேறொரு கோணத்திலிருந்து வேலை கொடுப்போம். அறிவுக்கும் மனத்துக்குமிடையிலுள்ள தொடர்பு பற்றி நான் இப்போது எழுதப்போகிறேன்.

**தானாக ஏற்படும் அறிவு:** இப்படியும் ஒருவித அறிவு இருக்கத்தான் செய்கிறது. 'ஒரு மனிதன் அல்லது ஒரு பொருள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில்



இருக்க முடியாது!' - இது ஒரு தத்துவம். எக்காலத்துக்கும் இது பொருந்தும். இதை நீங்களும், நானும் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் உணர்ந்திருக்கிறான். இதனால்தான் மனிதன் பெட்டியில் வைத்த பணத்தைப் பையில் தேடுவதில்லை. ஏனென்றால் பணம் என்பது ஒரு பொருள். அது பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டு விட்டது. அதே நேரத்தில் அது பையினுள் வரமுடியாது என்று அவனுக்குத் தெரியும். காரணம்: ஒரே பொருள் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்க முடியாது. பணத்தைப் பெட்டியில் வைத்துவிட்டு அவன் பையில் தேடினான் என்றால், தான் பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டியதை அவன் மறந்துவிட்டான் என்பதே பொருள். பணத்தையும் பெட்டியையும் மறக்காத எவனும் பணத்தைப் பையில் தேடமாட்டான்.

இந்த அறிவு உங்களிடம் நிச்சயம் உண்டு. ஆனால் இந்த அறிவு உகளுக்கு எங்கிருந்து எப்போது எப்படிக் கிடைத்தது என்பது உங்களுக்கே தெரியாத ஒன்று. இது தனக்குத் தானாக ஏற்பட்ட அறிவு. ''ஒரு பொருள் ஒரே நேரத்தில் உயிருள்ளதாகவும் உயிரற்றதாகவும் இருக்க முடியாது'' என்னும் தத்தவமும் இத்தகையதுதான். இது மிகவும் எளிய தத்துவம். இதை நீங்கள் முதன் முதலில் எப்போது தெரிந்து கொண்டீர்கள்? இது சுத்தமாகப் பதில் சொல்ல முடியாத கேள்விதான். மனிதனின் பால்யப் பிராயத்திலிருந்தே இத்தகைய அறிவுகள் அவன் மனத்தில் வளர்ந்து வந்திருக்கின்றன. இத்தகைய அறிவுகள் முதன் முதலில் ஏறபட்ட காலம் ஒன்று இருக்கத்தான் வேண்டும். என்றாலும், அவை எப்போது ஏற்பட்டன என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இவை தமக்குத் தாமாக ஏற்பட்டு விட்டாலும்,

இவற்றைப் படைத்தவன் இறைவன்தான் என்பது நிச்சயமான ஒன்று.

''இறைவனின் படைப்புகளில் சிறப்புமிக்கது அறிவு'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள். மேற்குறிப்பிட்ட அனுபவ அறிவைத்தான் பெருமானார் இங்குக் குறிப்பிடு கிறார்கள்.

**சிந்தனையில் கிடைக்கும் அறிவு:** சிந்தனை என்பது சிறப்புமிக்கது மட்டுமல்ல, சக்தி வாய்ந்ததும்கூட. அறிவு கிடைப்பதற்குச் சிந்தனை அருமையானதொரு வழி. சிந்தனை எந்த அறிவையும் ஈர்த்துக் கொண்டு வந்துவிடும். சிந்தனைச் சிற்பிகள் தம் சிந்தனையாலேயே அறிவு பெற்றுக் கொள்கிறார்கள். எனவே சிந்தனையாளர்களுக்கு மறுபெயர் 'அறிஞர்கள்'.

அறிஞர் அலீ(ரலி)யைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர்கள் சிறந்த அறிஞர்களில் ஒருவர். ஒப்பற்ற சிந்தனையாளர் என்று துணிந்து கூறலாம். அவர்களது சிந்தனை அவர்களை அறிஞராக்கிற்று.

அவர்களைப் பார்த்துப் பெருமானார் கூறினார்கள்: ''மற்றவர்கள் நற்காரியங்களால் இறைவனை அணுகும் போது நீர் உம்முடைய அறிவால் அவனை நெருங்கும்'' சிந்தனையால் ஏற்படும் அறிவையே பெருமானார் இங்குக் குறிப்பிடுகிறார்கள். மக்களின் உரையாடலிலிருந்து உங் களுக்குக் கிடைக்கும் அறிவு இறை வழிக்குப் பயன்படாது. அவர்கள் பெரும்பான்மை தேவையில்லாத காரியங்களைப் பற்றியே பேசுகிறார்கள். மக்களின் மத்தியில் சிந்தனை யாளர்கள் சிலர் இருக்கலாம். என்றாலும், அவர்கள் தேவை யில்லாமல் உரையாடிக் கொண்டிருக்க மாட்டார்கள்.



நீங்கள் சிந்தனையைச் செலுத்துங்கள். இறைவனை அணுகுவதற்கும் அவனிடம் நன்மதிப்புப் பெறுவதற்கும் தேவையான அறிவு எது என்று ஆராய்ந்து பாருங்கள். இந்த அறிவை உங்கள் சிந்தனை ஈர்த்துக் கொண்டு வந்துவிட்டது என்றால் உங்களை அறிஞர் அலீ (ரலி)க்கு ஒப்பிடலாம். அவர்களின் சிந்தனை இத்தகைய வேலையைத்தான் செய்கிறது.

ஆனால் இந்த அறிவு சிறுவர்களுக்கு ஏற்பட முடியாது. ஏனென்றால், அவர்களின் மனப்பரப்பு இறையறிவை ஏற்கும் அளவுக்கு வளர்ச்சியடையவில்லை. உள்ளம் என்பது ஒரு கண். கண்ணில் பார்வையுண்டு. ஆனால் கண் பார்க்க வேண்டுமென்றால், ஒளி தேவைப்படுகிறது. இருளை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் உங்கள் கண்களுக் குக் கிடையாது. இதே போன்று சிறுவர் சிறுமியரின் உள்ளத்தில் அறிவொளி படர வேண்டுமானால், அந்த உள்ளம் தேவையான வளர்ச்சியைப் பெற வேண்டும். பருவ வயதை அடைந்த பிறகுதான் மனிதனுக்கு அறிவு கிடைக்கிறது. சூரியனின் ஒளி எங்கும் பரவிய பிறகுதான் கண்கள் உலகத்தைப் பார்க்கின்றன.

அறிவு என்பது இறையாற்றல்களில் ஒன்று. இறைவ னின் உதவியின்றி மனிதனுக்கு அது கிடைக்க முடியாது. இறைவன் மனிதனின் மனத்தில் அந்த அறிவை உண்டாக்கு கிறான். மனப்பரப்பில் இறையறிவைப் பதிக்கும் ஆற்ற லுக்கு நாம் 'பேனா' என்று பெயர் கொடுக்கிறோம். பேனா வின் உதவியால் தானே நாம் அறிவை எழுத்திலடைக் கிறோம்? நம் கையிலுள்ள பேனாவினால் நாம் காகிதத்தில் எழுதுவது போல் இறைவன் தெய்வீகப் பேனாவினால் மனிதனின் மனத்தில் எழுதுகிறான்.

''இறைவன் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தான் அவன் அறிந்திராதவற்றை'' என்கிறது திருக்குர்ஆன்.

நமக்கும் இறைவனுக்குமிடையில் பாரதூரமான வித்தியாசமிருப்பதுபோல், நம் பேனாவுக்கும் அவன் பேனாவுக்குமிடையில் கரை காணமுடியாத வேற்றுமையுண்டு.

மரத்தாலோ உலோகத்தாலோ நாம் பேனா தயாரிக்கிறோம். ஆனால் இறைவனின் பேனா மரத்தால் ஆனதுமல்ல; உலோகத்தால் ஆனதுமல்ல. அது இறையாற்றல் பொருந்தியது; மனப்பரப்பில் அறிவை எழுதும் தனியாற்றல் பெற்றது. சிந்தித்துப் பாருங்கள். இதிலுள்ள உண்மை உங்களுக்குத் தெரியும். மனத்தின் கண்ணுக்கு எதையும் பார்க்கும் ஆற்றல் உண்டு. பகுத்தறிவை என்றைக்கும் பயன்படுத்தத் தவறாதீர்கள். பகுத்தறிவுதான் மனக்கண்ணைச் சிறப்புடையதாக்குகிறது. பகுத்தறிவை வீரனுக்கு ஒப்பிட்டால், புறக்கண்ணைக் குதிரைக்கு ஒப்பிடலாம். குதிரையின் கண்கள் பார்வையை இழந்து விட்டாலும் பரவாயில்லை; குதிரை வீரனின் கண்கள் பார்வையுள்ளளவையாக இருக்க வேண்டும். வீரன் குருடனாயிருந்தால் குதிரையின் கண்கள் அவனுக்குப்பயன்படமாட்டா!

தெளிவான புறக்கண்ணைப் பெற்ற எத்தனையோ பேர் மனக் கண்ணை இழந்து தவிக்கிறார்கள். ''இம்மையில் குருடர்களாயிருப்பவர்கள் மறுமையிலும் குருடர்களாகத்தான் இருக்கவேண்டும். அவர்கள் வழிகெட்டவர்கள்!'' என்று திருக்குர்ஆன் சுட்டிக் காட்டுகிறது. இங்கு மனத்தின் குருட்டுத் தன்மையே குறிப்பிடப்படுகிறது.

**மார்க்க அறிவு:** இது உங்களுக்கும் எனக்கும் எல்லாருக்கும் எக்காலத்துக்கும் பயன்படக்கூடிய அறிவு. இறைத்[தூ]தர்களிடமிருந்து இந்த அறிவு நமக்குக் கிடைத்திருக்[கி]றது. திருக்குர்ஆன், திருத்தூதர் மணிமொழி ஆகியவற்றின் [உ]தவியால் இந்த அறிவை யாரும் அடையலாம். மனித[னி]ன் மனத்தை நிறைவு படுத்துவதற்கு இது அருமையான [ஒ]ரு வழி. மனப்பிணியை அகற்ற எண்ணுகிறவர்கள் [இ]ந்தத் துறையில் இறங்கட்டும்!

மனப்பிணி எல்லாருக்கும் உண்டு. அதை அகற்றுவதற்[கு]ப் பகுத்தறிவு ஒன்று இருந்தால் மட்டும் போதாது. மார்க்க அறிவும் இருக்கவேண்டும். பகுத்தறிவு மிக முக்கியமான ஒன்றுதான். என்றாலும், வெறும் பகுத்தறிவால் மனித[னு]க்கு ஏற்பட்டிருக்கும் வியாதியைப் போக்க முடியாது. வியாதிக்குப் பரிகாரம் செய்ய விரும்புகிறவர்கள் மருந்து வகைகளைப் பற்றியும் மூலிகைகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டும். உங்கள் பகுத்தறிவு, எந்த மூலிகையால் எந்த வியாதியைக் குணப்படுத்தலாம் என்று உங்களுக்கு சொல்லிக் கொடுக்காது. ஏனெனில் வைத்தியம் என்பது தனிப்பட்ட ஓர் அறிவு. அதை இன்னும் நீங்கள் கற்றுக்கொள்ளவில்லை. எனவே அதைப்பற்றி உங்கள் பகுத்தறிவுக்கு ஒன்றும் தெரியாது.

நோயாளிக்குப் பகுத்தறிவு பயன்படாததுபோல், ஆரோக்கியசாலிக்கு வைத்தியம் பயன்படாது. ஒன்று மட்டும் நிச்சயம்: வைத்தியத்தைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், உங்களிடம் கண்டிபாய்ப் பகுத்தறிவு இருக்கவேண்டும். பகுத்தறிவு இல்லாமல் எவரும் எந்த அறிவையும் புரிந்துகொள்ள முடியாது. எனவே வியாதியைப் போக்குவதற்குப் பகுத்தறிவோடு வைத்திய[மு]ம் தேவைப்படுகிறது. இவற்றில் ஒன்று மற்றொன்று இல்லாமல் பயன்படாது. இந்த இரண்டுமே வாழ்க்கைக்குத் தேவையானவைதாம்.

இந்த உவமானத்தைப் போன்றதுதான் நான் விளக்க முற்பட்டிருக்கும் விஷயமும். பகுத்தறிவை மூட்டைகட்டி வைத்துவிட்டு, பேச்சாளர்கள் பேசியதையும் எழுத்தாளர்கள் எழுதியதையும் எடுத்து நடப்பது அறியாமை. திருக்குர்ஆனும் பெருமானார் மணிமொழியும் பகுத்தறிவு பெற்றவர்களுக்கே பெரிதும் பயன்படுகின்றன. திருக்குர்ஆனையோ பெருமானாரின் மணிமொழியையோ பின்பற்றும்போது பகுத்தறிவை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பகுத்தறிவும் தேவைதான். அதே நேரத்தில், பகுத்தறிவை நம்பிக்கொண்டு மார்க்க அறிவை இகழ்வதும்கூடாது. பகுத்தறிவின் மதிப்பை இப்படி உயர்த்தி எடை போடுகிறவர்களை நான் 'இறுமாப்புடையவர்கள்' என்று குறிப்பிடுகிறேன். எனவே, இவற்றில் ஒன்றை மட்டிலும் நீங்கள் தேர்ந்தெடுக்காதீர்கள். இரண்டையும் ஏக காலத்தில் தேர்ந்தெடுங்கள்.

பகுத்தறிவை உணவு என்றால், மார்க்க அறிவை மருந்து என்று சொல்லலாம். உணவும், மருந்தும் மனிதனுக்குத் தேவைப்படுகின்றன. ஆரோக்கியசாலிக்கு உணவு தேவைப்படுவதுபோல், நோயாளிக்கு மருந்து தேவைப்படுகிறது. நோயை நீக்கும் ஆற்றல் சாதாரண உணவுக்குக் கிடையாது. எனவே உணவை நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்த முடியாது.

உண்மையைப் பார்த்தால் பெரும்பாலோர் மனோ வியாதி கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு விருந்து கொடுப்பதைவிட மருந்து கொடுப்பதே சிறந்தது. இப்போது அவர்களுக்குத் தேவைப்படுவது மருந்து; விருந்து அல்ல.



நீங்கள் மார்க்கத்திற்கு மதிப்புக் கொடுக்காத வரட்டுப் பகுத்தறிவாளராக இருக்கவேண்டாம். பகுத்தறிவை அழித்துவிட்டு மார்க்க அறிவே உயிர் என்றும் எண்ண வேண்டாம். இந்த இரண்டு அறிவுகளையும் ஏக காலத்தில் பயன்படுத்துங்கள். மனோ வியாதிக்கு எப்படிப் பரிகாரம் செய்வது என்பதைத் திருத்தூதர்கள் தெளிவுபட விளக்கியிருக்கிறார்கள். அந்த விளக்கத்தைத் தெரிந்துகொண்டு செயலாற்றுங்கள். பொறாமை, முகஸ்துதி முதலான மனப்பிணிகளை அகற்றுவதற்கு இதைவிடச் சிறந்த முறையை வேறு எங்கும் உங்களால் காணமுடியாது.

பகுத்தறிவையும் மார்க்க அறிவையும் சரியாக எடை போட முடியாமல் தவிக்கிறார்கள் சிலர். ''பகுத்தறிவுக்கும் மார்க்க அறிவுக்குமிடையில் எத்தகைய சம்பந்தமும் கிடையாது! அது வேறு; இது வேறு!'' என்று வாதிக்கிறார்கள் அவர்கள். ''இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. இவை இரண்டும் ஒரு மனிதனிடம் ஏககாலத்தில் இடம்பெற முடியாது. அதாவது: ஒரு மனிதன் ஏக காலத்தில் மார்க்க அறிவையும் பகுத்தறிவையும் பின்பற்றி நடக்க முடியாது...''

இப்படி வாதிப்பவர்கள் எதை மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, நமக்குத் தெரியாது. என்றாலும், இந்த எண்ணம் கலப்பற்ற அறியாமையிலிருந்து உருவானது என்பது மட்டும் சர்வ நிச்சயமான ஒன்று. மார்க்கத்தைப் பின்பற்றாதவர்கள் எல்லாரும் பகுத்தறிவாளர்கள் தான் என்று இவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மார்க்கத்தைப் பகுத்தறிவற்ற மிருக இனத்துக்கென்று தயாரிக்கப்பட்ட சட்டத் தொகுப்பு என்று இவர்கள் ஏன் எண்ண வேண்டும்? மார்க்கம் மனித இனத்துக்குக் கொடுக்

கப்பட்டிருக்கிறது. பகுத்தறிவுக்கு அது எப்படி முரண்பட முடியும் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. உங்கள் பகுத்தறிவுக்கு மார்க்கத்தின் சிறப்புப் புரியவில்லை என்றால், அது யார் குற்றம்? உங்கள் பகுத்தறிவு இப்போது தான் படிப்படியாக வளர்ந்து வருகிறது. இன்னும் அது முதிர்ச்சியடையவில்லை. உங்கள் பகுத்தறிவிலும் சிந்தனையிலும் எத்தனையோ கோளாறுகள், குறைபாடுகள் இருக்கின்றன. உங்கள் குறைபாடுகளை மூடிமறைப்பதற் காக ஏன் மார்க்கத்தின்மீது குற்றம் சுமத்துகிறீர்கள்?

மார்க்கம் என்பது பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஒன்று எனக் கூறுகிறவர்கள் அறியாமையின் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும். இறைவன் நம்மைக் காத்தருள்வானாக! பகுத்தறிவு மார்க்கத்திற்கு முரண்பட்டது என்று மட்டும் இவர்கள் சொல்லவில்லை. சில வேளைகளில் இவர்கள் மார்க்கத்தில் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு முரண்பட்டது என்கிறார்கள். குர்ஆனில் ஒரு வசனம் மற்றொரு வசனத் திற்கு முரண்படுகிறது என்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை முழுவதும் ஒரே குழப்பம்! அந்தக் குழப்பமே அவர்களுக்கு மார்க்கத்தில் அவ நம்பிக்கையை உண்டாக்கி விடுகிறது. பட்டாடை மேனியைவிட்டு நழுவதுபோல், இவர்கள் மார்க்கத்தை விட்டு நழுவி விடுகிறார்கள். பாலில் கிடந்த பாச்சையை எடுத்துப் போடுவதுபோல், மாவில் கிடந்த ரோமத்தைப் பொறுக்கி வீசுவதுபோல், இவர்களை அறிஞர் குழு இஸ்லாத்தை விட்டு, ஒப்பற்ற அதன் சட்டத்தை விட்டு ஒதுக்கித் தள்ளி விடுகிறது.

எதையும் சிந்திக்க வேண்டியதுதான்; தவறில்லை ஆனால் நேர்மையோடு சிந்தித்துப் பாருங்கள். மார்க்கத்தின் சிறப்பு உங்களுக்குத் தெரியும். மனப் பிணியை அகற்று



வதற்கு இறைமார்க்கம் ஒன்றைத் தவிர்த்து வேறுமருந்து எங்கும் கிடையாது என்ற உண்மை புரியும். தம் பகுத்தறி விலுள்ள குறைபாடு அவர்களுக்குத் தெரியவில்லை. சுய குறைபாட்டைத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக அவர்கள் மார்க்க அறிவில் குறைபாட்டை உண்டாக்கு கிறார்கள். பச்சைக் கண்ணாடி அணிந்தவனுக்கு உலகமே பச்சையாகத்தானே தெரியும்? குருடனுக்குச் சூரிய ஒளி தெரியவில்லை என்றால், அது சூரியனின் குற்றமா?

இவர்கள் குருடர்கள். அந்நியரின் வீட்டுக்குள் நுழை கிறார்கள். முதலாவதாக, இவர்கள் கதவில் மோதிக் கொள் கிறார்கள். இரண்டாவதாகத் தூணில் முட்டிக் கொள் கிறார்கள். மூன்றாவதாக, மேஜை நாற்காலியில் தடுக்கி விழுகிறார்கள். ஆத்திரத்தில் அலறுகிறார்கள்: ''இந்த வீட்டிலுள்ளவர்கள் அத்தனை பேரும் முட்டாள்கள். எதை எங்கு வைக்கவேண்டும் என்று இவர்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஒதுக்குப் புறமாக வைக்க வேண்டிய பொருள்களை எல்லாம் நடுப்பாதையில் போட்டு வைத்திருக்கிறார்கள்.''

வீட்டுக்காரர்கள் குற்றவாளிகளல்லர். எங்கு எதை வைக்கவேண்டுமோ அங்குத்தான் அதை வைத்திருக் கிறார்கள். அவர்கள் எதையும் நடுப்பாதையில் போட்டு வைக்கவில்லை. முதலில் அவர்கள், ''பாவம் குருடன்'' என்று அனுதாபம் தெரிவிக்கிறார்கள். இரண்டாவதாக ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது'' என்கிறார்கள். மூன்றாவதாக வசை மொழியை அள்ளி வீசுகிறார்கள் இப்படி: ''உனக்கு அதெல்லாம் எங்கே தெரியப் போகிறது? நீ குருடன். வீட்டிலுள்ள பொருள்களி லெல்லாம் மோதிக் கொள்கிறாய். உன் குற்றத்தை மறைக்க

மற்றவர்கள் மீது குற்றம் சொல்லுகிறாய்... போ வெளியே!''

மேற்குறிப்பிட்ட பகுத்தறிவாளர்களின் நிலை இதுதான். தம் குருட்டுத் தனத்தைப் புரிந்துகொள்ளாமல் அவர்கள் மார்க்கத்துக்குக் குருட்டுப் பட்டம் கட்டுகிறார்கள்.

**கல்லூரி அறிவு:** கல்லூரியில் உங்களுக்குக் கிடைக்கும் அறிவு இரண்டு வகை. அவற்றில் ஒன்று இம்மைக்குப் பயன்படக்கூடியது. வைத்தியம், தர்க்க இயல், வானியல், கணிதம் முதலியவை இதற்கு உதாரணங்கள். மற்றொன்று இம்மைக்கும் மறுமைக்கும் ஒருங்கே பயன்படக்கூடியது. மனத்தைப் பற்றிய ஆராய்ச்சி, செயல்களின் விபரீதங் களைப் பற்றிய அறிவு, இறைவனைப் பற்றிய ஞானம் முதலியவை இதற்கு உதாரணங்கள். இந்த இரண்டு அறிவுகளையும் நான் ''அறிவினங்கள்'' என்ற நூலில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இவை இரண்டும், சந்தேகத்திற்கிடமின்றி ஒன்றுக் கொன்று முரண்பட்டவை. இவை இரண்டும் ஒரு மனித னிடம் முழு உருவத்துடன் இடம்பெற முடியாது. ஒன்று உயர்ந்தால், மற்றொன்று தாழ்ந்துவிடும். அவற்றைச் சமப்படுத்த விரும்பினால், எதிலும் பூரணத் திறமை இருக்காது. முதல் வகையில் நீங்கள் கவனம் முழுவதையும் செலுத்தும் அதே நேரத்தில், இரண்டாவது வகையில் உங்களுக்குத் தேர்ச்சி இல்லாமல் போய்விடும். அறிஞர் அலீ அவர்கள் இந்த அறிவினங்களுக்கு அருமையான மூன்று உவமானங்கள் கொடுக்கிறார்கள். நிறுவையின் இரண்டு தட்டுகள் - அவற்றில் ஒன்று உயர்ந்தால், மற்றது தாழ்ந்துவிடும். தென்துருவமும் வட துருவமும் - ஒரு



மனிதனால் ஏககாலத்தில் இரண்டு துருவங்களையும் சென்றடைய முடியாது. இரண்டு வேலைக்காரிகள் - ஒருத்தியைப் பார்த்து நீங்கள் சிரித்தால், மற்றொருத்தி உங்கள்மீது ஆத்திரம் கொள்வாள்!

இந்த உண்மையை நீங்கள் இப்போதும் கண்கூடாகப் பார்க்கலாம். வைத்தியத் துறையிலும், கணிதத் துறையிலும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்ற அனேகர் மார்க்கத்தைப் பொறுத்தமட்டில் ஒன்றுமே தெரியாதவர்களாக இருக் கிறார்கள்! மார்க்கத்தை நன்குணர்ந்த அனேகர் கணித இயலைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஏன் இப்படி என்று கேட்கிறீர்களா? மனிதனிடம் இதய முண்டு. ஆனால் அவனிடம் இருப்பது பல இதயங்கள் அல்ல. அவனிடம் இருப்பதெல்லாம் ஒரே இதயம். அது ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு அறிவுகளில் முழு வளர்ச்சியைப் பெற முடியாது. பொதுவாக இப்படித்தான் சொல்லவேண்டும். இதனால்தான் பெருமானார், ''சுவன வாசிகள் ஒன்றும் தெரியாதவர்களாக இருப்பார்கள்!'' என்று குறிப்பிட்டார்கள். ஏனெனில், அவர்களுக்கு உலக வாழ்க்கையைப் பற்றி எதுவுமே தெரியாது. மறுமை பற்றிய அறிவுத் துறையில் ஆழமாகப் போனதால் ஏற்பட்ட விளைவு இது.

ஹஸன் பஸ்ரீயின் பிரசங்கத்தில் ஒரு துண்டு இது. ''ஒரு சமுகத்தவரிடம் நாங்கள் பழகினோம். உண்மையிலேயே அவர்கள் விசித்திரமானவர்கள். அவர்களை நீங்கள் பார்த்தால், 'பித்தர்கள்' என்பீர்கள். உங்களை அவர்கள் பார்த்தால், 'ஷைத்தான்கள்' என்பார்கள்

மார்க்க அறிவு என்பது பல்வேறு உட்பிரிவுகளைப் பெற்ற ஒன்று. அதில் எத்தனையோ மர்மங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை நீங்கள் அறிந்து நம்பும் அதே நேரத்தில், மற்ற அறிவுகளில் தேர்ச்சி பெற்ற பெருந்தகைகள் அதை மறுக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு மார்க்க அறிவைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்கள் மறுப்பதைப் பார்த்து நீங்கள் வேதனைப்பட வேண்டியதில்லை.

ஏனெனில் நீங்கள் தென் துருவத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தென் துருவப் பிரயாணத்தில் காணும் அற்புதங்களை, வடதுருவத்தை நோக்கிப் பிரயாணப் பட்டிருப்பவர்களால் கண்டிப்பாய் நம்பமுடியாது. அதைப் பற்றி நீங்கள் ஏன் குழப்புகிறீர்கள்? மறுத்தவர்கள் மார்க்க அறிவைப் பெறாதவர்கள், வைத்தியம், கணிதம் முதலிய அறிவினங்களிலுள்ள மர்மங்களை நீங்கள் மறுப்பதுபோல் அவர்கள் மார்க்க அறிவிலுள்ள மர்மத்தை மறுக்கிறார்கள். நீங்கள் மறுப்பது குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. எனவே அவர்களின் மறுப்பைப் பார்த்து நீங்கள் கவலைப்படவேண்டாம். அவர்கள் உங்கள் அறிவைத் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் அவர்களின் அறிவைத் தெரிந்துகொள்ளவில்லை. அவ்வளவுதான். கவலையை விடுங்கள்; வேலையைச் செய்யுங்கள்!

இம்மையின் அறிவுக்கும் மறுமையின் அறிவுக்குமிடையேயுள்ள வேற்றுமையை இதுவரை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். இந்த இரண்டு அறிவுகளிலும் ஒரே நேரத்தில் தேர்ச்சியடைவது மிகச் சிரமம்.

என்றாலும், சிலரை இறைவன் இம்மையின் நிர்வாகத்திற்கெனத் தேர்ந்தெடுக்கிறான். அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவார்கள். இம்மையில் மனிதன் எப்படி வாழ வேண்டும். அதை மறுமைக்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் விளக்குவார்கள். இவர்கள் திருத்தூதர்கள், இவர்களின் அறிவு விரிவானது. இவர்களுக்கு எதிலும் குழப்பம் ஏற்படுவதில்லை. தெய்வீக அறிவுரைகளை பெறுகிறார்கள். இவர்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு அறிவுகளிலும் தேர்ச்சியடைய முடியும். திருத்தூதர்கள் மன வளர்ச்சிக்குப் போதனை செய்யும் அதே நேரத்தில், உலக வாழ்வைத் துறந்துவிட வேண்டும் என்று சொல்வதில்லை. இம்மையின் இன்பங்களைத் தியாகம் செய்யாமல் மறுமையின் இன்பங்களுக்கு உரிமை பெறுவது எப்படி என்று அவர்கள் எல்லோருக்கும் சொல்லிக் கொடுத்தார்கள்.



ஆனால் இந்தப் படித்தரத்தை அடைவது எல்லோருக்கும் சாத்தியமில்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, உலகுக்கு அனுப்பப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே அது சாத்தியம். அவர்களிடம் இருப்பதும், நம்மிடம் இருப்பது போல், ஒரே உள்ளம்தான். எனினும் தெய்வீக அருள் பெற்ற அந்த உள்ளம் எல்லா அறிவுகளையும் ஏற்றுக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறது.

மற்றவர்களுக்கு இந்த ஆற்றல் நிச்சயமாய்க் கிடையாது. அவர்கள் வைத்தியத் துறையிலோ கணிதப் படிப்பிலோ முழுக் கருத்தைச் செலுத்தினால் அவர்களால் மார்க்க ஞானத்தில் தேர்ச்சி பெற முடியாது. மார்க்க ஞானத்தில் முழுக் கவனம் செலுத்துகிறவர்களால் மற்ற அறிவினங்களில் திறமையை உண்டாக்கிக் கொள்ள முடியாது.

● ❖ ●

# கல்லூரிப்படிப்பும் ஞானோதயமும்

கல்லூரியின் பாடப் புத்தகங்களும் அதன் ஆசிரியர் களும் மனித சமுதாயத்திற்கு அறிவு வழங்குகிறார்கள். காற்றும் தண்ணீரும் எங்குமிருப்பது போல், இந்த அறிவு எங்குமுண்டு. இந்த அறிவை, குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் சொந்தப்படுத்த முடியாது. இதை நீங்களும் அடையலாம்; நானும் அடையலாம். ஆர்வம் இருந்தால் உங்கள் மைந்தனைப் பட்டதாரியாக்கலாம் - அவன் பாடத் தில் கெட்டிக்காரனாக இருந்தால்தான்! இது எல்லாருக்கும் பொதுவான அறிவு. என்றாலும், கல்லூரியின் உதவியின்றி, விரிவுரையாளரின் விரிவுரையின்றி இதை உங்களால் அடைய முடியாது.

கல்லூரிப் படிப்பைவிடச் சிறந்தது ஞானோதயம். இது கல்லூரிப் படிப்பைப் போல், அனைவருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. மனத் தெளிவு பெற்றவர்கள் ஞானோதயம் பெறலாம். எந்தக் கல்லூரிக்கும் செல்லாமல், எந்தப் புத்தகத்தையும் படிக்காமல் ஏற்படும் ஞானத்தையே நான் ஞானோதயம் எனக் குறிப்பிடுகிறேன். வீட்டின் மூலையில்



அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கும்போதோ, ஒரு பிரச்னை குறித்துக் குழம்பிக் கொண்டிருக்கும்போதோ, ஞானோதயம் ஏற்படுகிறது. இது திடீரென்று ஏற்படுகிறது. எப்படி, எங்கிருந்து ஏற்பட்டதென்று சொல்ல முடியாது. ஏதோ ஒரு சக்தி அந்த அறிவைத் திடீரென்று உண்டாக்கி விட்டது போலிருக்கும். உங்கள் மனத்தை தூய்மைப் படுத்திய பிறகு இந்த ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கக் கூடும். உங்கள் சிக்கலை அது தீர்க்கும். உங்கள் பிரச்சினைக்கு அது வழிகாட்டும். இந்த ஆற்றல் இறையன் பர்களுக்கு நிச்சயம் உண்டு.

ஞானோதயத்தை விடச் சிறப்பு வாய்ந்தது 'வஹி' - இறைச் செய்தி. இது திருத் தூதர்களுக்கு மட்டும் சொந்தமான ஒன்று. இவர்கள் அறிஞர்களின் பட்டியலில் எல்லாருக்கும் முதலில் இடம்பெற வேண்டியவர்கள். ஏனெனில், இவர் களின் அறிவு குழப்பத்திலிருந்து தூய்மை யானது. மர்மங்கள் கூட இவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். காரணம்: இவர்களுக்கு ஆசான் இறைவன். இறைவனுக்குத் தெரியாத எந்த மர்மமும் எங்கும் கிடையாது. அந்த இறையறிவு வானவர் ஒருவர் மூலம் திருத்தூதர்களுக்குக் கிடைக்கிறது. அறிஞர் ஒருவரின் கருத்து, அவர் எழுதிய புத்தகத்தின் வாயிலாக நமக்குக் கிடைப்பது போல்! இது சிறிதளவும் உண்மைக்கு மாறுபடாது. வானவரின் வாயிலாக மர்மங்கள் அனைத்தும் தெளிவுப்படுத்திக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு பொருளைப் பற்றியும் பலகோடி உண்மைகள் இருக்கின்றன. எல்லாப் பொருளின் உண்மை களையும் அறிந்தவன் இறைவன் ஒருவனே. அந்த அறிவு மனிதனுடைய உள்ளத்திற்குப் பரிமாறப்படுகிறது. என்றா

லும், இறைவன் அறிந்த எல்லா உண்மைகளையும் ஒரு மனிதனால் அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில், இறையறிவு வரம்பற்றது; எல்லையற்றது. எல்லைக்குட்பட்ட மானிடவர்க்கத்தாரால் அதைப் பூரணமாக அறிய முடியாது.

உண்மைகளை எல்லாம் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் அந்த இறையாற்றலுக்கு 'லவ்ஹுல் மஹ்பூல்' என்று அரேபியர்கள் பெயர் கொடுக்கிறார்கள்.* அதை இறை நூல் என்று வேண்டுமானாலம் குறிப்பிடலாம். அதில் உள்ள உண்மைகளில் சில மனிதனின் உள்ளத்தில் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு இறைவனிடமுள்ள அறிவைப் பிரதிபலிக்கும் ஆற்றல் உங்கள் உள்ளத்திற்கு வரவேண்டுமென்றால், உங்கள் மனக்கண்ணாடி மிகத் தெளிவாக இருக்கவேண்டும்.

---

* 'லவ்ஹுல் மஹ்பூல்: ''காக்கப்பட்ட பலகை'' என்பது இதன் பொருள். பலகை என்பது அறிவைக் குறிக்கிறது. பள்ளிப் படிப்பே பலகையிலிருந்துதானே ஆரம்பமாகிறது. இந்த இறையறிவு கரைகாண முடியாத கடலாயிருப்பதால், அதை யாராலும் பூரணமாக அறிந்துகொள்ளமுடியாது. மனிதனுடைய சிந்தனைக்கு அது அப்பாற்பட்டது. அவன் ஆராய்ச்சியிலிருந்து அது காக்கப்பட்டிருக்கிறது. எனவே அகில உலக உண்மைகளையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் அந்த இறையாற்றலுக்குக் ''காக்கப்பட்ட பலகை'' என்று நாம் பெயர் சூட்டுகிறோம். இதற்கு 'உம்முல் கிதாப்' என்ற பெயரும் உண்டு. 'தாய் நூல்' என்று அர்த்தம். தாய்க்குள் சேய் இருப்பதுபோல், இந்த மூல நூலுக்குள் எல்லா உண்மைகளும் இருக்கின்றன. சேய்க்கு தாயே மூலம். இதுபோல் எல்லா உண்மைகளுக்கும் அந்த இறை நூலே மூலம்.



மேற் குறிப்பிட்ட இறை நூலை நான் ஒரு கண்ணாடிக்கு ஒப்பிட விரும்புகிறேன். அது உண்மைகள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அனைத்தையும் பிரதிபலித்துக் காட்டும் ஆற்றல் கொண்டது அந்தக் கண்ணாடி. உங்கள் மனக் கண்ணாடியைத் தெளிவுப்படுத்தி விட்டீர்கள் என்றால், அந்த இறைக் கண்ணாடியிலிருந்து உங்கள் மனக் கண்ணாடிக்குச் செய்தி கிடைக்கும். இப்படிக் கிடைக்கும் செய்தி உண்மைக்குச் சிறிதும் மாறுபடாதது. அது என்றைக்கும் குழப்பத்தை உண்டாக்காது. இதை முந்திய அத்தியத்தில் ஓரளவு விளக்கியிருக்கிறேன். அந்த விளக்கத்தை மீண்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

எதிரிலிருக்கும் பொருள்கள் கண்ணாடியில் பிரிதிபலிப்பதுபோல், மனக்கண்ணாடியில் அறிவு பிரதிபலிக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். உள்ளம் கண்ணாடி போன்றது தான். அது எந்த அறிவையும் பிரதிபலித்துக் காட்டும் ஆற்றலுடையது. என்றாலும், சிலரது உள்ளத்தில் இறையறிவு ஏற்படுவதேயில்லை. அவர்கள் தெரிந்து கொண்டிருக்கும் விவரங்கள் தேவையில்லாத குழப்பத்தை உண்டாக்குகின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதையும் முதல் அத்தியாயத்தில் எழுதிவிட்டேன். இதற்கு ஒரு காரணமல்ல, ஐந்து காரணங்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் அந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

கண்ணாடிக்கு முன் திரை தொங்கினால், திரைக்கு அப்பாலுள்ள பொருள் கண்ணாடியில் பிரதிபலிக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியும். பெரும்பாலோரின் உள்ளத்தில் இறையறிவு ஏற்படாமலிருப்பதற்கு இத்தகைய திரைதான் காரணம். சில வேளைகளில் இறையருள் என்ற

காற்று வீசுவதுண்டு. சிறிது நேரத்திற்கு அந்தத்திரை விலகும். அப்போது அந்த உள்ளத்தில் இறையறிவு பிரதிபலிக்கும். மேற்குறிப்பிட்ட இறை நூலிலுள்ள சில விவரங்கள் அந்த உள்ளத்திற்குக் கிடைக்கும். இந்தப் பேறு சிலருக்குக் கனவுலகில் கிடைக்கிறது. தாம் கண்ட கனவை வைத்து அவர்கள் நாளை நடப்பதை ஓரளவு தெரிந்து கொள்கிறார்கள்.

மனத்துக்கும் இறைவனுக்குமிடையிலுள்ள திரை, மரணத்திற்குப் பிறகுதான் பூரணமாக விலகுகிறது. இறையருள் பெற்றவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள். மின்னலைப் போல் தோன்றி மறையும் இந்த இறையறிவு அவர்களுக்குத் தொடர்ந்து தோற்றமளிக்கிறது. இதனால் அவர்களின் அறிவு வளர்கிறது. என்றாலும், இந்த அறிவு மின்னல் நிரந்தரமாக மனிதனின் மனத்தில் ஒளி வீசுவது அபூர்வம். பெருமானாருக்குக்கூட இறைச் செய்தி நிரந்தரமாகக் கிடைக்கவில்லை. அவர்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் இறைச் செய்தியை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு செய்திக்கும் மறுசெய்திக்குமிடையில் மாதக் கணக்கில்கூட இடைவெளி ஏற்பட்டதுண்டு.

ஞானோதயத்தில் கிடைக்கும் அறிவுதான் இறைச் செய்தியில் கிடைக்கிறது. இந்த வகையில் இரண்டும் ஒன்றுதான். என்றாலும், இறைச்செய்தி வானவர் ஒருவர் வாயிலாக மனிதனுக்குக் கிடைக்கிறது. இறைச் செய்தியைப் பெற்றவர்கள் வானவரைக் காணும் பேறு பெற்றவர்கள். ஞானோதயமும் வானவரின் வாயிலாகத்தான் மனிதனுக்குக் கிடைக்கிறது. என்றாலும், இந்தக் கட்டத்தில் உள்ளவர்களால் வானவரைப் பார்க்க முடியாது. அவர் எதிரில் தோன்றமாட்டார். மனிதனின் மனத்தில் அறிவைத்



திணித்துவிடுவார். ஞானோதயம் அவரது துணையால்தான் மனத்துக்கு வருகிறது.

இதனால்தான் இறையன்பர்கள் தம் அறிவு வளர்ச்சிக்காக இந்த முறையைக் கையாள்கிறார்கள். அவர்கள் சிறந்த அறிஞர்கள். ஆனால் அவர்களது அறிவு கல்லூரியிலும் புத்தகத்திலும் கிடைத்ததல்ல. கொஞ்சமும் பிசகாமல் அற வழியில் நடந்ததால் அவர்களின் உள்ளம் தெளிவடைந்து விட்டது. தெளிவு பெற்ற அந்தக் கண்ணாடி மனம் அறிவை ஈர்த்து வருகிறது.

நம்மைப் போன்று மனிதர்கள்தாம் அவர்கள். ஆனால் நம்மைப்போல் அவர்கள் நடப்பதில்லை. நமக்கு இருப்பது போல் அவர்களுக்கும் அறிவு உண்டு. ஆனால் நம்மைப் போல் அவர்கள் குழப்பமடைவதில்லை. நம் அறிவு குழப்பத்தை உருவாக்குகிறது. அவர்களின் அறிவு குழப்பத்தைப் பிடுங்கி எறிகிறது.

இத்துணைப் பெரிய படித்தரத்தை அவர்கள் எப்படி அடைந்தார்கள்?

இந்தக் கேள்விக்கு அவர்களே பதில் கொடுக்கிறார்கள். ''மனத் தெளிவும் ஞானோதயமும் ஏற்படுவதற்குரிய ஒரே வழி இதுதான்: மனப் போராட்டம் நடத்தி மனத்திலுள்ள தீக்குணங்களை எல்லாம் அழிக்க வேண்டும். இம்மையின் விவகாரங்களில் பற்றுக் கொள்ளக் கூடாது. உலகில் பற்றற்று வாழவேண்டும். கருத்து முழுவதையும் இறைவன் பக்கம் திருப்புங்கள். இறைவனுக்காக உங்கள் இன்பங்களை அர்ப்பணித்தால், இறைவனின் பேரன்பு உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் உள்ளத்தில் அறிவொளியைப் படரச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவன்

செய்வான். அதற்குத் தன்னை அவன் பொறுப்பாளியாக்கிக் கொள்வான். இதன் பிறகு உங்களுக்குக் கிடைக்கும் இன்பம் வரம்பற்றது. இந்தக் கட்டத்தில் உங்களுக்குத் தெய்வீக மர்மங்களெல்லாம் தெளிவாகத் தெரியும். மற்றவர்களால் அறிய முடியாத உண்மைகள் உங்கள் மனத் திரையில் சுத்தமாகப் பிரதிபலிக்கும்''

இதே வழியின் அடிப்படையில்தான் திருத்தூதர்கள் அறிவு பெறுகிறார்கள். என்றாலும், அவர்களுக்கு வானவரைக் காணும் பேறு உண்டு. இறைச் செய்திகள் அந்த வானவர் வாயிலாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. திருத்தூதர்களும் இறையன்பர்களும் அறிஞர்கள் தாம். எந்தச் சிக்கலையும் அரை வினாடியில் தீர்க்கும் அறிவுப்பலம் அவர்களுக்கு உண்டு. என்றாலும், அவர்கள் கல்லூரிக்குச் செல்வதுமில்லை; பாடப் புத்தகத்தைப் புரட்டுவதுமில்லை. கல்லூரியின் வகுப்பறையில் உட்கார்ந்தபடி, விரிவுரையாளரின் பேச்சைக் கேட்டவாறு சிலர் அறிவு பெறும் அதே நேரத்தில், இவர்கள் ஒரு குகையில் உட்கார்ந்தபடி, வானவரின் பேச்சைக் கேட்டவாறு அறிவு பெறுகிறார்கள். பெருமானாருக்கு இத்தகைய ஞானம் கிடைத்தது, முதன் முதலில் ஒரு குகையில்தான் என்ற வரலாற்றுக் குறிப்பை இதுவரை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் என்று என்னால் நம்பமுடியவில்லை!

இறையன்பர்களுக்கு இந்தப் படித்தரம் எப்படிக் கிடைக்கிறது என்ற கேள்விக்கு அவர்களே சற்று முன்னர் விடை கொடுத்தார்கள். உலகப் பற்றை அறுத்தெறியும் போது மனத்தெளிவு ஏற்படுகிறது. மனத் தெளிவினால் ஞானோதயம் உண்டாகிறது என்று சுருக்கமாகப் பதில் கூறலாம். உங்கள் இன்பங்கள் அனைத்தையும் இறைவனுக்



காக நீங்கள் தியாகம் செய்யும் போது, இறைவனின் பேரன்பு உங்களுக்குக் கண்டிப்பாய்க் கிடைக்கும்.

உலகப் பற்றை அறுத்தெறிய வேண்டும் என்றால், தற்கொலை செய்துகொள்வது என்று பொருளல்ல. நடுக்காட்டுக்கோ மலையுச்சிக்கோ ஓடிவிடுவது என்றும் அர்த்தமல்ல. இன்பங்களுக்கு மத்தியில் இருந்து கொண்டே அவற்றிற்கு மனத்தைப் பறிகொடுக்காமல் வாழவேண்டும். உங்கள் மனத்தை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் உலகிலுள்ள எந்தப் பொருளுக்கும் இருக்கக் கூடாது. அந்த இறையன்பர்கள் நடுக் காட்டுக்குப் போகவில்லை, மலையுச்சிக்கும் ஏறவில்லை. மக்களுக்கு மத்தியில் மக்களாகவே வாழ்ந்தார்கள். மனைவியையும் மக்களையும் பெற்றார்கள். பணமும் பதவியும் அவர்களைத் தேடி வந்தன. என்றாலும், இவற்றில் எதற்கும் அவர்கள் தம் உள்ளத்தைப் பறி கொடுக்கவில்லை. மனைவியோ மக்களோ வணக்கத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை. நல்லதைச் செயலாற்றினார்கள். கெட்டதைத் தவிர்த்தார்கள். இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு எந்தக் குறிக்கோளையும் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

இவர்கள் வாழ்க்கையை இப்போது இன்னும் கொஞ்சம் விரிவாக ஆராயவேண்டும். அவர்கள் முதலில் உலகப் பற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். மனைவி, மக்கள், சமூகம், பணம், பதவி, கண்ணியம் இவற்றில் எதையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. மனைவி இருக்கும்போது எந்த மனநிலையில் அவர்கள் இருக்கிறார்களோ, அதே மனநிலையில்தான் மனைவியின் மரணத்தின் போதும் இருப்பார்கள். பணம் குவிந்து தேங்குவதால் அவர்கள் மகிழ்வதில்லை. திரண்ட செல்வம் கொள்ளை

யடிக்கப்படுவதால் அவர்கள் கலங்குவதில்லை. அது இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுதான் என்ற உறுதியான மனப்பக்குவம் அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

கடமைகளை முடித்துக் கொண்டு, அவர்கள் ஒரு மூலையில் உட்கார்ந்து இறை சிந்தனையில் ஈடுபடு கிறார்கள். இறைவனைத் தவிர்த்து வேறு எதுவும் தம் உள்ளத்தில் புகுந்துவிடாதபடிப் பார்த்துக் கொள்கிறார்கள். குர்ஆன் ஓதுவது, அதன் விரிவுரைகளில் முழுக்கவனம் செலுத்துவது, சட்ட நூல்களை ஆராய்வது முதலிய புனித மான காரியங்களைக்கூட அவர்கள் ஒதுக்கி வைத்து விடு வார்கள். இறைவனையே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் அவர்களின் எண்ணம், குழப்ப வசப்பட்டு விடுமோ என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்

இவ்வாறு மன ஒருமையுடன் உட்கார்ந்திருக்கும் அவர்கள் 'அல்லாஹ், அல்லாஹ்' என்று இறைவனைத் துதிப்பார்கள். சிறிது நேரம் இந்த வார்த்தை வெளியில் தொடர்ந்து கேட்கும். பிறகு நாவு திடீரென்று நின்றுவிடும். வெளியில் சத்தம் கேட்காது. என்றாலும், தம் நாவு அல்லாஹ் என்ற வார்த்தையைத் தொடர்ந்து கூறிக் கொண் டிருக்கிறது என்றே அவர்கள் எண்ணுவார்கள். இதன் பிறகு மற்றொரு நிலை ஏற்படுகிறது. இப்போது அவர்கள் அந்த வார்த்தையின் தொனி, வடிவம், எழுத்து அனைத்தையும் மனத்தை விட்டு அழித்துவிடுவார்கள். வரம்பிட முடியாத அந்தத் தனிப் பெரும் சக்தியை அவர்களின் உள்ளம் துதித்துக் கொண்டிருக்கும் - கடின முயற்சிக்குப் பிறகு ஒரு மனிதனால் இந்த அளவுக்கு முன்னேற முடியும். அவன் மனோபலம் கொண்டவனாயிருந்தால், அடிக்கடி உருவாகும் குழப்பங்களைக் களைந்தெறிந்து விடலாம்.



ஆனால் இவ்வாறு முயற்சி செய்வதால் மட்டிலும் இறையன்பைப் பெற்றுவிட முடியும் என்று எண்ணி விடா தீர்கள். இறையன்பை இழுத்துவரும் சக்தி உங்கள் முயற் சிக்குக் கிடையாது. என்றாலும், இது புனிதமான முயற்சி. இறைவனின் அன்பு கிட்டும் வரை பொறுத்திருங்கள்.

இந்த வழியில்தானே இறையன்பர்கள் அறிவு பெற் றார்கள்? அதுபோல் உங்களுக்கும் அறிவு கிடைப்பது சாத்தியமே!

மனத்திலுள்ள கறையை முதலில் அகற்றுங்கள். பொறாமை, மமதை, சூழ்ச்சி, காமம் - இப்படி ஒவ்வொன் றாக எண்ணிப் பார்த்து ஆவன செய்யுங்கள். இவை ஒவ்வொன்றும், உங்கள் மனத்துக்கும் இறை ஞானத்துக்கு மிடையிலுள்ள ஒவ்வொரு திரையாகும். இவற்றை நீங்கள் அகற்றவில்லை என்றால், உங்கள் உள்ளத்தில் இறை ஞானம் தோன்ற முடியாது.

தேவையான அளவுக்கு மனத்தை நீங்கள் தூய்மைப் படுத்திவிட்டால், மின்னலைப் போன்று அதில் இறையறிவு பளிச்சிடும். ஆரம்பத்தில் அது மின்னலைப் போலவே தோன்றி மறைந்துவிடும். பின்னர் அதே மின்னல் மீண்டும் முகம் காட்டும். பின்னர் அதே நேரம் உங்கள் உள்ளத்திலேயே நிலைக்கும். இந்தச் சிறிது நேரத்தை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சிலருக்குப் பல்வேறு விவரங்கள் கிடைக்கும். வேறு சிலருக்கும் ஒரே விவரம் திரும்பத் திரும்ப ஒளிபாய்ச்சப்படும். இதனால் அவர்களுக்கு அந்த ஒரே துறையில் தேர்ச்சியும் முதிர்ச்சியும் கிடைக்கின்றன. இப்படி இறையன்பர்களுக்குப் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒருங்கே கூறி முடிப்பது சாத்தியமில்லை.

ஆராய்ச்சியாளர்களும், அறிஞர்களும் இந்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது மிகச் சிரமமான வழிதான். என்றாலும், இப்படி ஒரு வழியுண்டு என்பதை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால் எடுத்த எடுப்பிலேயே இந்தத் துறையில் தேர்ச்சியடைந்து விட முடியாது. இந்தத் துறையில் தேர்ச்சி பெற விரும்புகிறவர்கள் பொறுமையோடு செயலாற்ற வேண்டும். இதற்குப் பல நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் முறைப்படி உருவாக்க வேண்டும்.

ஆராய்ச்சியாளர்கள் இதன் நிபந்தனைகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். 'ஞானோதயம் ஏற்பட வேண்டுமானால், உலகப் பற்றுதலை அறுத்தெறிய வேண்டும். உலகிலுள்ள எந்த இன்பமும் மனத்தை ஈர்க்கக் கூடாது. ஆனால் இந்த அளவுக்கு உலகத்தை ஒதுக்கித் தள்ளுவது அசாத்தியமான ஒன்று. ஒரு சமயம் இப்படித் துறவு கொண்டு விட்டாலும், அந்தத் துறவு நிலை நீடித்து நிற்கும் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. மனத்தில் உருவாகும் சிறியதொரு குழப்பம் இந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடும். என்ன என்ன எண்ணங்கள், எப்போது எப்போது ஏற்படும் என்று உங்களால் நிச்சயமாய்க் கண்டுபிடிக்க முடியாது...''

இதனால்தான் பெருமானார், ''முஸ்லிமின் உள்ளம் சூடேறிய தண்ணீரைவிட அதிகமாகக் கொந்தளிக்கும் தன்மையுடையது'' என்று குறிப்பிட்டார்கள். ''முஸ்லிமின் உள்ளம் இறைவனின் விரல்களுக்கிடையில் இருக்கிறது'' என்பதும் பெருமானார் கூறியதுதான். நாம் விரல்களை அசைப்பதுபோல், இறைவன் மனிதனின் உள்ளத்தைத் தன் விருப்பபடிப்படி அசைக்கிறான் என்பது கருத்து.



இந்தப் பயிற்சி புனிதமானது என்று நான் உங்களுக்குச் ...சால்லித் தர வேண்டியதில்லை. அது ஒவ்வொருவருக்கும் ...தரிந்த உண்மை. என்றாலும், இந்தப் பயிற்சியால் சில ...டையூறுகளும் ஏற்படுகின்றன. ஒரே இடத்தில் ...ட்கார்ந்து சிந்தனைக்கு வேலை கொடுப்பதால், ...ரோக்கியம் சில சமயம் பாதிக்கப்படும். ஏனென்றால், ...ல்லா வேலைகளையும்விடக் கடினமானது சிந்தனை. சில ...ளை மூளைக் கோளாறும் ஏற்படக்கூடும். இந்தப் ...பிற்சியில் வெற்றி கிட்டவில்லை என்றால், ஆயுள் ...ழுவதும் தப்பான நம்பிக்கைகளிலேயே கழியும் படியாகி ...டும். இந்தத்துறையில் ஈடுபட்ட எத்தனையோ பேர் ...றிவு பெறுவதற்கு முன்பே மாண்டிருக்கிறார்கள்! இருபது ...ண்டுகளின் கடின முயற்சிக்குப் பிறகும் ஞானோதயம் ...டையாதவர்கள் எத்தனையோ பேர்!

இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, ஞானோ...ப் பயிற்சியில் இறங்குவதைவிடப் பள்ளிப் படிப்பும் ...லூரிப் படிப்பும் சிறப்புள்ளவை என்பது தெளிவு. ...லூரிப் படிப்பில் இத்துணைச் சிரமங்கள் கிடையா. ...ரைவிலேயே நற்பயனும் கிடைத்துவிடுகிறது.

...பெருமானார் பட்டதாரியல்ல. அவர்கள் எந்தக் ...லூரியையும் மிதித்ததில்லை. அந்தக் காலத்திலிருந்த ...த அறிஞரிடமும் அவர்கள் சென்று பாடம் படிக்க ...ல்லை. இருந்தும், அவர்களின் அறிவுத் திறன் இன்றைக் ... உலகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒளி கொடுக்கிறது. ...ர்களுக்குக் கற்றுக் கொடுத்தது இறைவன். புத்தகம் ...ிரியரின் கருத்தைத் தெரிவிப்பதுபோல், வானவர் ...ிரயீல் இறை கருத்தைப் பெருமானாருக்குத் தெரிவித்... இதுவும் ஞானோதயம்தான். ஆனால இறையன்பர்

களின் ஞானோதயத்தைவிட இது மிக உயர்ந்தது. இறையன்பர்களிடம் வானவர் ஜிப்ரயீல் வருவதில்லை!

''பெருமானார் அறிவு பெற்றது போல் நானும் ஏன் அறிவு பெறக்கூடாது'' - இப்படி வாதிப்பவர்கள் சிலர் இருப்பார்கள். இவர்கள் நம் அனுதாபத்திற்குரியவர்கள். கல்லூரிப் படிப்பையும், அனுபவத்தில் கிடைக்கும் ஞானத்தையும் பொருட்படுத்தாத இவர்கள், தெரிந்தோ தெரியாமலோ, தம் வாணாள் முழுவதையும் வீணாக்கு கிறார்கள்.

பெருமானார் கல்லூரியை மிதிக்கவில்லை என்ப தையோ, ஞானோதயத்தால் தான் அவர்கள் அறிவு பெற்றார்கள் என்பதையோ நான் மறுக்கவில்லை. என்றா லும், அவர்கள் தம் சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் நபித்துவத்தை அடைந்துவிடவில்லை. முயற்சியால் அடைய முடியாத படித்தரம் அது. இறைவனின் பேரன்பு அவர்களைச் சூழ்ந்து நின்றது. தம்முடைய கருத்துக்களைப் பாரெங்கும் பரப்புவதற்கு இறைவனால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பெருமானார். எங்கும் நிறைந்த இறையன்பு பெருமானார் மீது முழு உருவத்துடன் இல்லை என்றால் அவர்கள் நபித்துவத்தை அடைந்திருக்கவே முடியாது. அவர்கள் கொடுத்த வழியைப் பின்பற்றுங்கள். அவர்களைப்போல உங்களாலோ என்னாலோ கண்டிப்பாய் ஆக முடியாது. அவர்கள் பின்பற்றப்பட வேண்டிய தூதர். நாம், பின்பற்ற வேண்டிய மாந்தர்.

சம்பாத்திய முயற்சியை விட்டுவிட்டுப் புதையலை எதிர்ப்பார்ப்பது தவறல்லவா? பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு ஞானோதயத்தை எதிர்பார்க்காதீர்கள்.



புதையல் சிலருக்குக் கிடைக்கிறது. எல்லோருக்கும் கிடைப்பதில்லை. புதையலை எதிர்பார்ப்பவர்கள் அனை வரும் அதை அடைய முடியாது. இதுபோலவே ஞானோ தயம் என்பது ஒரு புதையல். அது சிலருக்கு மட்டும் கிடைக்கிறது. எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களில் பெரும்பாலோர் ஏமாந்து போகிறார்கள்!

எனவே, இப்போதைக்கு நீங்கள் தயதுசெய்து ஞானோ தயத்தை எண்ணிப் பார்க்காதீர்கள். அது கிடைத்தால் திருப்தியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவரை பள்ளிப் படிப்புக்கும் கல்லூரிப் புத்தகங்களுக்கும் மதிப்புக் கொடுங்கள். ஞானோதயத்தை எதிர்பார்த்துக் கொண்டு கையிலிருக்கும் நேரத்தை வீணாக்காதீர்கள். மற்றவர்கள் எப்படி அறிவை வளர்க்கிறார்களோ, அப்படியே நீங்களும் அறிவை வளருங்கள். நூல்களையும் பிரசங்கங்களையும் சுத்தமாகத் தெரிந்து கொள்ளுங்கள். ஞானோதயம் பெற்ற வர்கள் கூறியதை எல்லாம் ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடியுங்கள். இப்படியெல்லாம் செய்தபிறகு நீங்கள் ஞானோதயத்தை எதிர்பார்த்தால் அதில் அர்த்தமுண்டு. மற்றவர்களைப்போல் தேவையான ஞானத்தை பெற்றுக் கொண்டு விட்டீர்கள். இந்தக் கடின முயற்சியின் பயனாக மற்றவர்களுக்குத் தெரியாத மர்மங்கள் உங்களுக்குத் துலங்கக் கூடும். அவ்வளவுதான் சொல்ல முடியும். நிச்சயமாக எதுவும் சொல்லமுடியாது!

● ❖ ●

## உவமானங்கள் சில

[இதற்கு முந்திய அத்தியாயத்தைத் தெளிவு படுத்துவற்காகவே இமாம் கஸ்ஸாலியவர்கள் இந்த அத்தியாயத்தை எழுதியிருக்கிறார்கள். முந்திய அத்தியாயத்தைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான் இந்த அத்தியாயத்தின் முழுப் பொருள் தெளிவாகத் தெரியும்.

இமாமவர்கள் மக்களை மூன்று பிரிவினராகப் பிரிக்கிறார்கள்: ஆலிம்கள்; அவ்லியாக்கள்; அன்பியாக்கள்.

**ஆலிம்கள்:** இவர்கள் பள்ளிப் படிப்பையும் கல்லூரி ஞானத்தையும் பயன்படுத்தி அறிவு பெற்றவர்கள். இவர்கள் அறிவு விரிவானதல்ல. பாடப் புத்தங்களோடு கட்டுண்டிருக்கும் அறிவு இது. இந்த அறிவு சில வேளைகளில் நிரந்தரமான குழப்பத்தையும் ஏற்படுத்திவிடும். அறிவுத் துறையில் இது முதற்படி என்பது இமாம் அவர்களின் கருத்து. 'ஆலிம்' என்ற அரபிப் பதத்தை நான் 'பட்டதாரி' என்று மொழி பெயர்த்திருக்கிறேன்.

**அவ்லியாக்கள்:** வலீ என்ற வார்த்தைக்கு இது பன்மை. இதை இறையன்பர்கள் என்று தமிழாக்கி



யிருக்கின்றேன். இறையன்பர்கள் என்றால் இறைவன் மீது அன்புள்ளவர்கள் என்றோ, இறைவனின் அன்பைப் பெற்றவர்கள் என்றோ பொதுப் படையாகச் சொல்லிவிட முடியாது. இவர்கள் அதைவிட உயர்ந்தவர்கள். இவர்கள் மீது இறைவனுக்கு அன்பு உண்டு. இவர்களுக்கும் இறைவன் மீது பூரண அன்பு உண்டு. சாதாரண முஸ்லிம்களுக்கு இருப்பது போன்றதல்ல இந்த அன்பு; மிக வலுவானது. இந்த அன்பின் அடிப்படையில் அவர்கள் அனைத்தையும் துறக்கத் தயாராயிருப்பார்கள். அவர்கள் இறைவனின் அன்பர்கள்; அவன் அன்புக்காக அவர்கள் எந்த இன்பத்தையும் தியாகம் செய்யத் தயார். இவர்களுக்குக் கிடைக்கும் அறிவு, ஞானோதயம் என்பது இமாமவர்களின் கருத்து.

**அன்பியாக்கள்:** அன்பியா என்பது நபி என்ற வார்த்தைக்குப் பன்மை. இவர்கள் இறை கருத்தை உலகில் பரப்புவதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களுக்கும் ஞானோதயம் கிடைக்கிறது. ஆனால் வானவர் ஒருவர் மூலம் இவர்களுக்கு இந்த ஞானம் கொடுக்கப்படுகிறது. இந்த வார்த்தை திருத் தூதர்கள் என்று தமிழாக்கப் பட்டிருக்கிறது இப்போது இமாமவர்கள் மேற் குறிப்பிட்ட அறிவினங்களை உவமானம் கூறி விளக்குகிறார்கள் -]

மனிதனின் உள்ளம் எண்ணற்ற அதிசயங்கள் நிறைந்தது. அதனுள் மறைந்திருக்கும் மர்மங்கள் அனைத்தையும் எழுதி முடிப்பது சாத்தியமில்லை. அவற்றைப் புலனறிவால் கண்டறியவும் முடியாது. உள்ளம் என்ற மாமிசப் பிண்டமே கண்ணுக்குத் தெரியாதபடி நெஞ்சுக்

கூட்டுக்குள்தானே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது? அதன் ஆற்றல்களும் அப்படித்தான். அவற்றைக் கண்களால் பார்த்தறிய முடியாது. எந்தப் புலனும் அதன் மர்மங்களைத் துலக்காது.

இப்போது நாம் கண்ணுக்கோ மற்றப் புலன்களுக்கோ தெரியாத ஒன்றைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறோம். அதைத் தெரிந்து கொள்வது சிரமம். எனவே உவமானத்தின் உதவியை நான் நாடுகிறேன். புலனறிவால் அறிய முடியாதவற்றை ஓரளவேனும் உவமானத்தால் அறிந்து கொள்ள முடியாது என்பது என் நம்பிக்கை.

ஒரு குளம், அதைச் சுற்றிலும் ஐந்து வாய்க்கால்கள் இருக்கின்றன. அவற்றின் வாயிலாகக் குளத்துக்கு நீர் வருகிறது. இந்த வாய்க்கால்களை நம்பிக் கொண்டுதான் இந்தக் குளத்தை நீங்கள் தோண்டியிருக்கிறீர்கள்.

மனிதன் உள்ளம் ஒரு குளம் போன்றது. ஐம்புலன்கள் எனும் வாய்க்கால்களினால் அதற்கு அறிவு என்ற நீர் கிடைக்கிறது. ஐம்புலன்களால்தான் சாதாரணமாக மனிதன் அறிவைப் பெறுகிறான். கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் வைத்துப் படிப்பினை பெறுகிறவர்கள் ஏராளம். பட்டதாரிகளும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் கல்லூரி வகுப்பறையில் விரிவுரையாளர் கொடுக்கும் விரிவுரைகளைக் கேட்கிறார்கள். கல்லூரிக்கு வெளியே புத்தகங்களையும் படிக்கிறார்கள். இந்த முறையால் இவர்களின் அறிவு வளர்கிறது.

குளத்தின் நீருக்கு வாய்க்கால்கள் எத்தனை முக்கியமோ, அத்தனை முக்கியம் மனிதனின் அறிவுக்குப் புலன்கள். புலன்கள்தாம் அறிவை உள்ளத்தில் ஊற்றி நிரப்புகின்றன.



குளத்தில் தண்ணீர் இருப்பது போல் கிணற்றிலும் தண்ணீர் இருக்கிறது. ஆனால் குளத்துக்கு வாய்க்கால்கள் இருப்பது போல் கிணற்றுக்கு வாய்க்கால்கள் இல்லை. அப்படியானால் கிணற்றிலுள்ள தண்ணீரை நீங்கள் பெருக்க எண்ணினால் என்ன செய்வீர்கள்? தூர் எடுக்கிறீர்கள். இதனால் கிணற்றுக்கடியில் புதுப் புனலூற்றுக்கள் உருவாகின்றன. வாய்க்கால்களிலிருந்து கிடைக்க முடியாத சுத்தமான நீர் இந்த ஊற்றுக்களிலிருந்து கிடைக்கிறது. ஏனெனில் வாய்க்காலின் நீர் வண்டலோடு கலந்துதான் வரும். வண்டல் தெளிந்து சுத்தமான நீர் ஆவதற்கு நேரம் பிடிக்கும். ஆனால் ஊற்றிலிருந்து வெளிவரும் நீர் சுத்தமானது. அதில் மருந்துக்கும் வண்டல் கிடையாது.

அறிவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களின் உள்ளம் இத்தகையதுதான். அவர்கள் புலன்களைப் பொருட்படுத்துவதில்லை. அவற்றை அடக்கியாண்டு உள்ளத்தைத் தூய்மைப் படுத்துகிறார்கள் - தூர் எடுத்துக் கிணற்றைச் சுத்தமாக்குவதுபோல்! எனவே தூர் எடுத்த கிணற்றுக்கடியிலிருந்து நீர் புறப்படுவது போல், இவர்களின் உள்ளத்திலிருந்து அறிவூற்றுப் பொங்குகிறது. ஊற்று நீர் வண்டல் இல்லாதது. இதே போன்று, மனத்திலிருந்து பொங்கும் அறிவு களங்கமற்றது. அது குழப்பத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்காது. கற்றுத் தேர்ந்தவர்களின் அறிவைப் பார்க்கிலும் இது பல மடங்கு சிறப்பு வாய்ந்தது. கற்றவர்களில் எத்தனையோ பேர் குழப்பத்துக்கும் சந்தேகத்துக்கும் பலியாகிக் கிடக்கிறார்கள்!

நீங்கள் கேட்கலாம்: ''கிணற்றுக்கடியிலிருந்து நீர் பொங்குவது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. மண்ணுக்குக் கீழே நீர்த்தாரைகள் ஓடுவதால் மண்ணுக்கு மேலே நீருற்றுக்கள் ஏற்படுகின்றன. ஆனால் மனிதனின் உள்ளத்தி-

லிருந்து எப்படி அறிவு பொங்கி வர முடியும்? அதனுள் எத்தகைய அறிவும் கிடையாது. எந்த மனிதனும் தாய் வயிற்றிலிருந்தே அறிவு பெற்று வரவில்லை. அறிவு பெறுவதற்குப் புலன்களே வழிகள். அவற்றை அடைத்து விட்டால், ஏற்படும் அறிவுக்கு அது தடையாகிவிடும். ஆனால் நீங்கள் நேர் எதிராகக் கூறுகிறீர்கள். புலன்களை அடைத்துவிட்டால் உள்ளத்தில் அறிவுப் புனல் பொங்கு கிறது என்று கூறுகிறீர்கள். இது எப்படிச் சாத்தியமாகும்?

இது நீங்கள் என்னைப் பார்த்துக் கேட்க நினைக்கும் கேள்வி. உண்மையில் இது நியாயமான கேள்விதான். ஆனால் மனிதனின் உள்ளத்துக்கும் அதனுள் பளிச்சிடும் அறிவுக்குமிடையிலுள்ள தொடர்புகளைப் பற்றித் தெரியாததால் ஏற்பட்ட கேள்வி இது. இந்த வினாவுக்குரிய விடையைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் முதலில் வேறு சில விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் மனிதனின் உள்ளத்தில் புலன்களின் துணையில்லாமலே, எவ்வாறு அறிவுப் புனல் பொங்கு கிறது என்பதைச் சுத்தமாகத் தெரிந்து கொள்ள முடியும்.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் இறை நூலைப் பற்றிக் குறிப்பிட்டேன். அந்த இறை நூல், உண்மைகள் அனைத் தையும் - அறிவுகள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். உலகம் படைக்கப்படுவதற்கு முன்பே இந்த இறை நூல் அறிவுக் களஞ்சியம்தான். அந்த நூலிலுள்ள அமைப்புப்படியே இறைவன் அனைத்தையும் படைத்தான்.

கட்டிடக் கலை வல்லுனர்களை நீங்கள் பார்த்திருப் பீர்கள். ஒரு வீடு கட்ட எண்ணினால் அவர்கள் ஒரு காகிதத் தில் சித்திரம் வரைகிறார்கள். கட்டிடம் எழுப்புவதற்கு முன்பே இந்தச் சித்திரம் உருவாக்கப்பட்டு விடுகிறது.



அந்தச் சித்திரத்தை ஆதாரமாக வைத்து, அதன் அமைப்புப் படியே அவர்கள் கட்டிடத்தை எழுப்புகிறார்கள். இதே போன்றுதான் இறைவன் அனைத்தையும் படைக்குமுன் திட்டம் தீட்டினான். உலகிலுள்ள எல்லாம் அந்த இறை நூலில் இடம் பெற்றிருக்கின்றன. ஓர் அணுவும் அந்த நூலிலிருந்து தப்ப முடியாது.

ஒரு கட்டிடத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பு கிறீர்கள். இதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று கட்டிட வல்லுணர்களால் தயாரிக்கப்பட்ட நீலநிறக் காகிதத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அல்லது உண்மையான கட்டிடத்தையே நேரில் பார்க்கலாம். ஆனால் இந்தக் கட்டிடத்திற்கு மூலம் அந்தக் காகிதம்தான். இந்தக் கட்டிட்திலுள்ள சிறிய, பெரிய பகுதிகள் அனைத்தும் அந்தக் காகிதத்திலும் இருக்கின்றன.

இதே போன்று, உண்மைகளை அறிந்துகொள்ள எண்ணு கிறவர்களில் சிலர் இறை நூலையே பார்த்துத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். உலகிலுள்ள அத்தனையும் அந்த மூல நூலில் இருக்கின்றன. ஆனால் இப்படித் தெரிந்து கொள்வது அப்படி ஒன்றும் இலகுவான செயலல்ல. சிலருக்கு - ஏன், பலருக்கு இது சாத்தியமில்லாத ஒன்று. புலன்களால் அறிவு வளர்வது போல் மனத் தூய்மையாலும் அறிவு வளர்கிறது. இறை வணக்கத்துக்கென்று தனித்து நின்று செயலாற்றுகிறவர்களாலேயே அந்த மூல நூலைப் படித்துணர முடியும்.

இந்த அத்தியாயத்தை, இறையன்பர்களின் அறிவுக்கும் பட்டாதர்ரிகளின் அறிவுக்குமிடையிலுள்ள வேற்றுமை யைக் காட்டுவதற்காகவே நான் எழுதுகிறேன். மீண்டும் நினைவுறுத்த விரும்புகிறேன்; இறையன்பர்களின் அறிவு

உட்புலனால் உண்டாகிறது. பட்டதாரிகளின் அறிவு வெளிப் புலனால் உருவாகிறது.

இந்த இரண்டு அறிவுகளுக்குமிடையில் வேற்றுமை இருப்பதுபோல், இவை உள்ளத்தில் தோன்றும் விதத்திற்கிடையிலும் வேற்றுமையுண்டு. பட்டதாரிகள் அறிவைத் தேடியலைகிறார்கள். சிரமப்பட்டுப் படிக்கிறார்கள். கண்டதையும் கேட்டதையும் அனுபவித்ததையும் மனத்தில் பதித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதனால் அவர்கள் கல்லூரியின் வகுப்பறையில் மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்க வேண்டி ஏற்படுகிறது. பொழுதில் பெரும்பான்மை நேரத்தை விரிவுரையாளரின் வாயைப் பார்த்தப்படி, அவர் பேச்சைக் கேட்டவாறு செலவிட வேண்டி ஏற்படுகிறது.

ஆனால் இறையன்பர்கள் இப்படிப் பலதரப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. மனத்தைத் தூய்மைப் படுத்துவது ஒன்றைத் தவிர்த்து, அவர்கள் வேறு எதுவும் செய்ய மாட்டார்கள். பாடப் புத்தகத்தையும் கல்லூரி வகுப் பறையையும் அவர்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். மனத்தூய்மை ஏற்படுவதற்கு எதைச் செய்ய வேண்டுமோ, அதைக் குறைவின்றிச் செய்வார்கள். எனவே அவர்கள், பட்டதாரிகளுக்குக் கிடைக்காத தெளிந்த ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இந்தத் தத்துவத்தை விளக்குவதற்கு அடியிலுள்ள வரலாற்றுத் துணுக்கு ஒன்று போதும் என்று எண்ணுகிறேன்.

ஒரு சமயம் ரோம் தேசத்தவர்களும் சீனா தேசத்தவர்களும் சிற்பக்கலையில் போட்டியிட்டார்கள். இந்த இரண்டு தேசத்தவர்களும் திறமைசாலிகள் தாம். அவர்களின் பண்டைய கலைகளைப் பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். சித்திரக் கலைக்குப் புது மெருகு சேர்த்த



வர்கள் சீனர்கள். அப்போது செல்வாக்குடன் வாழ்ந்த ஓர் அரசருக்கு முன்னால் இந்தப் போட்டி நடக்கவிருந்தது.

எதிரெதிரான இரண்டு சுவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன. சீனர்களிடம் ஒரு சுவரும் ரோமர்களிடம் ஒரு சுவரும் ஒப்படைக்கப்பட்டன. அந்தக் கருங்கற் சுவரில் அவர்கள் திறமையைக் காட்ட வேண்டும். சிற்ப வேலைகள் முடிந்த பின்னர், அரசர் பார்வையிடுவார். ரோமர்களின் சித்திரத்தையும் சிற்பத்தையும் சீனர்கள் பார்க்க முடியாதபடி இரண்டு சுவர்களுக்குமிடையில் கனத்த திரையொன்று தொங்கிற்று. சீனர்களின் சித்திரத்தை ரோமர்களாலும் பார்க்க முடியாது.

வேலை துவங்கிற்று. கல்லுளிகளின் குரல் தொடர்ந்து கிளம்பிற்று.

சில தினங்கள் உருண்டோடி மறைந்தன. அரசர் சிற்பக் கலையின் நுணுக்கத்தைப் பார்வையிடும் நாள் அருகில் வந்தது.

சீனர்கள் அரசரை அணுகினார்கள். ''ரோமர்கள் வேலையை முடித்துக் கொண்டு வெளியில் வந்துவிட்டார்கள். எங்கள் வேலை முன்பே முடிந்துவிட்டது. அவர்கள் முடிக்கும்வரை நாங்கள் காத்திருந்தோம்!'' என்றார்கள்.

அரசருக்கு ஆரம்பத்திலேயே சீனர்கள் மீது சந்தேகம். அவர்கள் விசேஷமான கருவிகள் எதுவும் இல்லாமல் வேலையை ஏற்றுக் கொண்டார்கள். ரோமர்கள் எண்ணற்ற ஆயுதங்களுடன் வேலையை ஒப்புக் கொண்ட அந்நேரத்தில், சீனர்கள் மிகச் சில ஆயுதங்களுடன் வேலைக்குப் போனார்கள். ''என்னால் நம்ப முடியவில்லையே!'' என்றார் அரசர். ''அவர்கள் ஏராளமான ஆயுதங்களுடன் வேலையைத் துவக்கியிருக்கிறார்கள். அவர்கள் மீது நான்

சந்தேகப்பட முடியாது. உங்கள் வேலை உண்மையிலேயே முடிந்துவிட்டாதா!''

''திரையை அகற்றித்தான் பாருங்களேன். நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும்'' என்றான் சீனர்களில் ஒருவன்.

திரை அகற்றப்பட்டது. அரசரின் கண்கள் வியப்பால் விரிந்தன. ஒருபுறம் ரோமர்களின் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் போட்டியிட்டன. எதிர்ப்புறத்தில் -? எதிர்ப்புறத்திலும் அதே சிற்பங்கள், சித்திரங்கள் பல மடங்கு ஒளியுடன் மின்னிக் கொண்டிருந்தன.

''அவர்கள் தம் திறமை முழுவதையும் கல்லில் காட்டினார்கள்!''என்றான் சீனத் தலைவர்.

''நாங்கள் எங்கள் திறமையை வேறொரு கோணத்தில் செலுத்தினோம். எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சுவரை நாங்கள் கண்ணாடியாக்கிவிட்டோம். இதோ பாருங்கள், அவர்களின் திறமை முழுவதும் இங்குப்பிரதிபலிப்பது தெரியவில்லையா?''*

எப்படிப் பார்த்தாலும், கல்லூரிகள் கொடுத்த அறிவானாலும், ஞானோதயம் தந்த செல்வமானாலும் அறிவு என்பது என்றைக்கும் அழியாத ஒன்று. மனிதன் மாண்டாலும் அவன் உள்ளம் இறப்பதில்லை.

---

* *சீனர்கள் செய்த வேலையை இறையன்பர்கள் செய்கிறார்கள். உள்ளத்தை அவர்கள் கண்ணாடியாக்குகிறார்கள். அகில உலக அறிவுகளெல்லாம் அதில் பிரதிபலிக்கின்றன. ரோமர்கள் செய்த வேலையைப் பட்டதாரிகள் செய்கிறார்கள். கல்வியை உள்ளத்துக்குக் கொண்டு வருவதற்காக அவர்கள் அரும்பாடு படுகிறார்கள். தம் திறமை முழுவதையும் அதற்குச் செலவிடுகிறார்கள்.*



நெஞ்சுக் கூட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சதைப் பிண்டத்தை இங்கு நான் குறிப்பிடவில்லை. அந்தப் பிண்டத்தில் அமைந்துள்ள பேராற்றலையே இங்குக் குறிப்பிடுகிறேன். மனிதனுக்குக் கிடைக்கும் ஆற்றல், அறிவாற்றல் உள்ளத்தின் சிறப்பையே உயர்த்துகிறது. உள்ளத்தில் தானே இறை நம்பிக்கையும் வேரூன்றுகிறது? மரணத்திற்குப் பிறகும் இந்த ஆற்றல் பயன்தர வல்லது. மனிதனின் உடலைத் தின்று தீர்க்கும் மண்ணகத்திற்கு இந்தச் சக்தியைத் தீர்த்துக் கட்டும் துணிவு கிடையாது.

இதே கருத்தை அறிஞர் ஹஸன்பஸ்ரீ இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''இறை நம்பிக்கை ஏற்படும் பகுதியை மண் தின்பதில்லை'' இறை நம்பிக்கை ஏற்படும் பகுதி, என்ற சொற்றொடர் இங்கு உள்ளத்தைக் குறிப்பிடுகிறது. ஏனெனில், எந்த நம்பிக்கையும் உள்ளத்தில்தான் ஏற்பட முடியும்.

நம்பிக்கை என்பது பொதுவாக எல்லாருக்கும் உண்டு. இதில் எண்ணற்ற படித்தரங்கள் இருக்கின்றன. சிலரது நம்பிக்கை கடலைப் போன்றிருக்கும். வேறு சிலரது நம்பிக்கை துளியளவு இருக்கும். இந்த இரண்டு படித்தரங்களுக்கும் மத்தியில் பல்வேறு படித்தரங்கள். ஒருவரின் படித்தரத்தை மற்றொருவரால் உணரமுடியாது. என்றாலும் நம்பிக்கையின் படித்தரத்துக்குத் தக்கவாறு ஒவ்வொரு மனிதனுக்கும் மறுமையில் வெற்றி கிடைக்கும். இதைச் சூசகமாகக் காட்டக்கூடிய நபிக் கருத்துக்கள் எண்ணற்றவை. சிலரது உள்ளம் மெழுகுவர்த்தியைப் போல் மங்கிய ஒளியைக் கொடுக்கும். வேறு சிலரது உள்ளம் சந்திரனைப்போல் நடுத்தர ஒளியைக் கொடுக்கும். இந்த ஒளிக்குப் பெயர் நம்பிக்கை. நம்பிக்கை அறிவால் ஏற்படுகிறது.

இந்தத் தத்துவத்தைத் திருமறை இப்படிச் சுட்டிக் காட்டுகிறது: ''அறிவு பெற்றவர்களுக்குப் பல்வேறு படித் தரங்கள் இருக்கின்றன.''

இதிலிருந்து அறிவாற்றலின் அளவினால்தான் மனிதன் மறுமையில் அடையும் வெற்றியின் அளவு உயர்கிறது என்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். அறிவுத் துறையில் முழுத் தேர்ச்சி அடையாவிட்டாலும், ஓரளவேனும் அறிவுச் செல்வம் பெற்றிருக்கத்தான் வேண்டும். இதுவும் இல்லை என்றால் அது வருந்தத் தக்க நிலை என்பது என் நம்பிக்கை.

இறைவனைப் பற்றியும் இறையாற்றல்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளாதவர்கள், அவனையும் அவன் ஆற்றல்களையும் நம்புவார்கள் என்று நம்மால் எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே இறை நம்பிக்கைக்கு அடிப்படை அறிவு. அது இல்லையேல் ஒளி சிந்தும் நம்பிக்கை என்றைக்கும் ஏற்பட முடியாது.

ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையை யொட்டித்தான் மறுமையில் மனிதன் வெற்றியடைகிறான். இந்த வெற்றியில் தான் எத்தனை படித்தரங்கள்! பணம் என்பது இம்மையின் செல்வங்களில் ஒன்று. பணக்காரர்களுக்கு மத்தியில் ஏற்றத் தாழ்வு இருப்பதுபோல், மறுமையில் வெற்றி வீரர்களுக்கு மத்தியிலும் ஏற்றத்தாழ்வு நிச்சயம் உண்டு. கோடி கோடியாகப் பணம் குவித்த ஒரு மனிதனைச் சாதாரணப் பணக்காரன் ஏறிட்டுப் பார்ப்பதுபோல், மறுமையில் சாதாரண வெற்றியை அடைந்தவர்கள், தம்மைவிட மேலான வெற்றியை அடைந்தவர்களை ஆச்சரியத்துடன் ஏறிட்டுப் பார்ப்பார்கள்.

அறிவும் நம்பிக்கையும் உள்ளவர்கள் மறுமையில் வெற்றி வீரர்கள். இவற்றை இழந்தவர்கள் நிரந்தரமான துன்பத்தை அனுபவிக்க வேண்டியவர்கள்!

## குர்ஆனின் தீர்ப்பு

இறையன்பர்கள் ஞானோதயத்தால் அறிவு பெறுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். இதற்காக அவர்கள் தம் உள்ளத்தைக் கண்ணாடியாக்குகிறார்கள் என்றும், மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட முறையை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் குறிப்பிட்டேன்.

இப்போது அவர்கள் வகுத்துக் கொண்டிருக்கும் வழியைத் திருக்குர்ஆனின் தீர்ப்பை வைத்து ஆராய்வோம்.

இதற்கு ஆதாரமான கருத்துக்கள் குர்ஆனில் அங்கங்கே காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இப்போது நாம் பார்க்கவேண்டும்.

ஞானோதயம் என்றால் என்ன என்பதை முந்திய அத்தியாயங்களில் போதிய அளவு விவரித்துவிட்டேன். அதை மீண்டும் இப்போது உங்கள் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். எந்தப் புத்தகத்தையும் படிக்காமல், எந்த மனிதனிடமும் கேட்காமல் மனத்தில் திடீரென்று பொங்கிவரும் அறிவையே நான் ஞானோதயம் எனக் குறிப்பிடுகிறேன்.

இப்போது உங்கள் மனத்தை நீங்களே கேட்டுப் பாருங்கள். இப்படி எப்போதாகிலும் உங்களுக்கு அறிவு பொங்கியதுண்டா? உண்டு என்றால் இந்தப் பயிற்சியை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்பது திண்ணம். ஏனெனில், அனுபவத்தால் கிடைத்த உண்மையை யாரும் மறுப்ப தில்லை. இதுவரை உங்களுக்கு இத்தகைய அனுபவம் ஏற்படவில்லை என்றால், தயவு செய்து இறையன்பர்களின் அறிவைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். இதற்குக் குர்ஆன் மட்டுமல்ல, அறிஞர் பெருமக்களின் அனுபவங்களும் ஆதரவு தருகின்றன.

குர்ஆன் வாயிலாக இறைவன் பேசுகிறான், கேளுங்கள்: ''நம் விஷயத்தில் மனப் போராட்டம் நடத்தியவர்களுக்கு நம்முடைய வழிகளை நாம் காண்பிப்போம்!'' கடின முயற்சியுடன் மனப்பயிற்சி புரிந்து, அறவழியில் துணிந்து நடப்பவர்களுக்கு இறைஞானம் உரித்தானது என்பது இதன் கருத்து.

''தான் கற்றதை வைத்து ஒருவன் செயலாற்றினால் அவனுக்குத் தெரியாததை எல்லாம் இறைவன் கற்றுக் கொடுப்பான்!'' என்ற நபிக் கருத்தும் இதையே காட்டு கிறது.

குர் ஆனில் மற்றோரிடத்தில், ''நம்பிக்கையாளர்களே! நீங்கள் இறைவனுக்கு அஞ்சி வழிப்பட்டால் அவன் உங் களுக்கு வேற்றுமை காட்டும் ஞானத்தைக் கொடுப்பான்!'' வேற்றுமை காட்டும் ஞானம்! இது குறிப்பிட்ட ஓர் அறிவு. அது நல்லதையும் கெட்டதையும் பிரித்துக் காட்டும். நன்மையான எண்ணத்தையும் முரணான எண்ணத்தையும் பகுத்துக் காண்பிக்கும். இந்த ஞானம் உங்களுக்குக் கிடைத்துவிட்டால் அறவழியில் உங்களுக்குக் குழப்பமே



ஏற்படாது. இருளில் அகப்பட்டுக் கொண்டு தடுமாடுகிற வனுக்கு மின்னலொளி பயன்படுவதுபோல், உங்களுக்கு இந்த ஞானம் எப்போதும் பயன்படும்.

பெருமானார் இந்த ஆற்றலை 'ஒளி' என்று குறிப்பிட் டார்கள். அவர்கள் இறைவனிடம் கேட்ட பிரார்த் தனைகளில் ஒன்று இதோ இடம் பெறுகிறது: ''இறைவா! எனக்கு ஒளியைக்கொடு. என் ஒளியை நீ விரிவுபடுத்து. என் உள்ளத்திலும் மண்ணறையிலும் ஒளியை உண்டாக்கு. என் பார்வையிலும் கேள்வியிலும் ஒளியை உண்டாக்கு!''

இத்துடன் பிரார்த்தனை முடியவில்லை. பெருமானார் பிரார்த்தனையைத் தொடருகிறார்கள். '' என் உடல், சதை, தோல், உதிரம், எலும்பு, ரோமம் முதலிய அனைத்திலும் ஒளியைப் படரச் செய்வாயாக!

பெருமானாரின் காலத்தில் ஒரு வியாக்கியானம் கொடுக் கப்பட்டிருக்கிறது. பெருமானாராலேயே கொடுக்கப் பட்டது அந்த விரிவுரை.

''யாருடைய உள்ளத்தை இறைவன் விரிவுபடுத்தி விட் டானோ, அவர்கள் இறைவனின் ஒளியில் இருக்கிறார்கள்!'' என்பது திருக்குர் ஆனின் ஒரு வசனம்.

''இதற்குப் பொருள் என்ன?'' என்று ஒருவர் கேட்டார். ''நாயகம் அவர்களே, இந்த வசனத்தின் பொருள் எனக்குச் சரியாகத் தெரியவில்லை,. தயவு செய்து கொஞ்சம் விளக்கம் தருகிறீர்களா?''

பெருமானாரின் விளக்கம் சுருக்கமாக வெளிப்பட்டது. ''இதிலென்ன சந்தேகம்? ஒரு மனிதனின் உள்ளத்தில் இறையொளி புகுந்துவிட்டால் அது விரிவடைந்து தானே ஆக வேண்டும்? விரிவடைய முடியாத உள்ளத்திற்கு அந்த

ஒளி கிடைக்காது. அந்த ஒளியை ஏற்கும் உள்ளம் விரியக்கூடியதாகத்தான் இருக்கவேண்டும்.''

அபுத்தர்தா இவ்வாறு சொல்லிக் கொண்டிருப்பாராம்: ''இறையொளியின் உதவியால் மர்மங்கள் அனைத்தையும் ஊடுருவிப் பார்ப்பவனே உண்மையான முஸ்லிம். அவன் உள்ளத்தில் இறைவன் அறிவை ஏற்படுத்துகிறான். அந்த அறிவு நாவின் உதவியால் மற்றவர்களுக்குப் பரிமாறப் படுகிறது.'' இது ஒரு விஷயம் நம் கவனத்திற்குரியது. அபுதர்தா என்பவர் பெருமானாரின் நண்பர்களில் ஒருவர். எனவே, அவர் குறிப்பிடும் கருத்து பெருமானாரிடமிருந்தே அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். இந்தத் துறைக்குப் பெருமானாரின் கருத்தை ஆதாரமாகக் கொண்டால், அவர்களின் கருத்துக்கள் ஒவ்வொன்றும் இதற்கு ஆதரவு தருவதாகவே அமையும்.

இறையச்சம் என்பது ஞானோதயம் ஏற்படுவதற்குரிய அருமையான வழி என்பது திருக்குர்ஆனின் தீர்ப்பு. குர் ஆனுக்கு அடுத்தபடியாகப் பெருமானாரின் பொன் மொழி கள் நமக்கு ஆதாரங்களாக இருக்கின்றன. நபித்தோழர் களும் இதற்குப் பேராதவு கொடுத்திருக்கிறார்கள். அபூ ஸைத் முதலானவர்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டிருப் பார்களாம்: ''புத்தகத்திலுள்ளதை மனனம் செய்பவன் அறிஞனல்லன். அதை அவன் மறந்துவிட்டால் அவன் முட்டாளாகி விடுவான். நினைத்த நேரத்தில் இறைவனிட மிருந்து அறிவு பெறுகிறவனே உண்மையான அறிஞன்.''

இது மிகச் சிறந்த அறிவு. இதற்கு 'இல்ம் ரப்பானீ' என்று அரேபியர்கள் பெயரிடுகிறார்கள். தெய்வீக அறிவு என்பது இதன் பொருள். 'இல்ம் லதுன்னீ' என்றும் பெயரி



டப்படுகிறது. 'இறைவனிடமிருந்து கிடைக்ககும் அறிவு' என்பது இதன் அர்த்தம். ''நாம் அவருக்கு எம்மிடமிருந்து அறிவு புகட்டினோம்!'' என்னும் குர்ஆனின் குரல், இந்த அறிவைத்தான் குறிப்பிடுகிறது. இது திருத்தூதரைக் குறிப் பிடும் வசனம். எந்தத் திருத்தூதரும் பள்ளி சென்று படித்ததில்லை.

மார்க்க ரீதியான ஆதாரங்களை எழுதிவிட்டேன். இது உங்களுக்குப் போதும் என்பது என் நம்பிக்கை. இப்போது அனுபவ ரீதியான ஆதாரங்களைப் பார்ப்போம்.

திருக்குர்ஆனின் ஆதாரங்களைப் போலவே, நபிகள் நாதரின் ஆதாரங்களைப் போலவே, அனுப ஆதாரமும் ஏராளமாக இருக்கின்றன. நபித் தோழர்களும் அவர்களை அடுத்து வந்த சந்ததியினரும் இந்தத் துறையில் பெரிதும் அனுபவப்பட்டிருக்கிறார்கள்.

அபூ பக்ர் (ரலி) அவர்களின் மனைவி கருவுற்றிருந்தார். தாயின் வயிற்றில் வளரும் குழந்தை ஆணா, பெண்ணா என்று அபூ பக்ர் (ரலி) அவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது போலவே பிறந்த குழந்தை பெண்ணாக இருந்தது. நாளை நடப்பதை அவர்கள் ஞானக் கண் கொண்டு பார்த்துவிட்டார்கள்.

ஒரு சமயம் உமர்(ரலி) அவர்கள் மதீனமா நகரின் பள்ளியிலிருந்து வெகு தூரத்திலிருந்தவர்களுக்கு எச்ச ரிக்கை விடுத்தார்கள். ''மலைகளைக் கடந்து செல்பவர் களே...'' அவர்கள் மதீனாவுக்கு வெகுதூரத்தில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களை விரோதிகள் தாக்க விருந்தார்கள். உமரின் எச்சரிக்கை அவர்களுக்கு விழிப்பூட் டிற்று. மதீனாவிலிருந்து கிளப்பிய உமரின் குரல் மைல்

கணக்கில் சென்று விட்டது என்றால், இதை அற்புதம் என்று குறிப்பிடுவதில் தவறு என்ன?

அனஸ்பின் மாலிக் தெருவில் சென்று கொண்டிருந்தார். எதிரில் ஒரு பெண்மணி வந்தாள். அவளை அனஸ் சபல எண்ணத்துடன் ஏறிட்டுப் பார்த்தார். அவள் அழகை ஆராய்ந்தார். அன்னியப் பெண்ணை ஏறிட்டுப் பார்த்ததன் மூலம் அவர் தவறு செய்துவிட்டார். அவர் கண்கள் குற்றம் புரிந்துவிட்டன. அவ்வளவுதான்; திடீரென்று தன் குற்றத்தை உணர்ந்தவர் போல் அந்த இடத்தை விட்டகன்றார்.

அங்கிருந்து நகர்ந்த அனஸ், உஸ்மான் அவர்களிடம் சென்றார்.

உஸ்மான் ஏறிட்டுப் பார்த்தார்கள். ''நீர் தவறு செய்து விட்டு வந்திருக்கிறீர். அந்தத் தவற்றின் சாயல் உம் கண்ணில் தெளிவாகத் தெரிகிறது!''

அனஸ் குறுக்கிட்டார். ''உண்மை! ஆனால் இது எப்படி உங்களுக்குத் தெரிந்தது? பெருமானாருக்குப் பின்னர் இறைவன் உங்களுக்கு 'வஹீ' - இறை செய்தி அனுப்பி விட்டானா?''

உஸ்மானின் விடை: ''இல்லை எனக்கு 'வஹீ' வரவில்லை. என் மனம் தெளிவானது. அது உம்முடைய குற்றத்தை எனக்குத் தெளிவாகக் காண்பித்துவிட்டது. அவ்வளவுதான்.''

ஒரு சமயம் அபூ சயீத் மக்காவின் பள்ளிக்குள் புகுந்தார். பள்ளியில் ஒரு வழிப்போக்கர் உட்கார்ந்திருந்தார். அவர் அணிந்திருந்த கந்தலான துணி அபூசயீதின் மனத்தில் இலேசான வெறுப்பை ஏற்படுத்தியது, ''பிச்சைக்காரன்! இத்தகையவர்களால் யாருக்கு என்ன நன்மை? இவர்களால் பொதுமக்கள் தொல்லையனுபவிக்கிறார்கள்!'' என்று எண்ணினார்.



உட்கார்ந்திருந்தவர் நிமிர்ந்து பார்த்தார். ''உங்கள் உள்ளத்தில் நெளியும் எண்ணங்களை எல்லாம் இறைவன் அறிகிறான். அவனுக்குப் பயப்படுங்கள்!''

அபூசயீத் சிலையாகிவிட்டார். உடனே தன் தவற்றுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோரினார்.

இப்போது அந்த வழிப்போக்கர் அபூசயீதைக் கூப்பிட்டார். அபூ சயீத் அணுகினார். ''மக்கள் கேட்கும் பாவமன்னிப்பை அங்கீகரிப்பவன் இறைவன்!'' என்றார் அந்த வழிப்போக்கர். இதன் பிறகு அந்த அற்புத மனிதர் அந்த இடத்தை விட்டே மறைந்து விட்டார்.

அபுல் பஸ்ல் ஹாஷிமீ நோயுற்றிருந்தார். அவரைப் பார்க்கப் போனார் அபுல் அப்பாஸ். அபுல் பஸ்லுக்கு எந்தத் தொழிலும் கிடையாது. வருமானம் இல்லாமல் அவர் எப்படி வாழ்கிறார் என்பது அபுல் அப்பாஸின் வியப்பு.

உடனே அபுல் பஸ்ல் கூறினார். ''உம் மனத்திலுள்ள மட்டமான எண்ணத்தை விட்டுவிடும். இறைவனின் அன்பை எவராலும் எடை போட முடியாது.''

நடக்கப் போவதையும் பிறர் மனத்தில் மறைந்திருப்பதையும் கண்டுணரும் ஆற்றல் பெற்றவர்கள் இந்தக் காலத்தைவிட அந்தக் காலத்தில் அதிகமாக இருந்தார்கள் என்பது என் எண்ணம். அவர்களது அனுபவங்கள் அனைத்தையும் இந்தச் சிறிய நூலில் எப்படித்தான் எழுத முடியும்! அவர்களில் சிலர், மகான் கிள்ரு (அலை) அவர்

களையும் கண்டிருக்கிறார்கள்; உரையாடியிருக்கிறார்கள். அசரீரிக் குரலின் எச்சரிக்கையைப் புரிந்துகொள்ளும் பேறு பெற்றிருக்கிறார்கள்.

ஆனால், நான் எதை எழுதினாலும் நம்பாதவர்களுக்கு அது கண்டிப்பாய் பயன்படாது. அவர்கள் நம்பவேண்டு மானால் சொந்தமாகவே அவர்கள் அவற்றை எல்லாம் அனுபவத்தில் காணவேண்டும்.

என்றாலும், இதுவரை நான் எழுதி வந்தது மறுக்க முடியாத உண்மை. நம்மால் இதற்கு இரண்டு கோணங் களில் ஆதாரம் கொடுக்க முடியும்.

1. கனவுலகில் சில வேளை உண்மைகள் பளிச்சிடு கின்றன. நாளை நடப்பதுகூடக் கனவில் தோன்றிவிடுகிறது சிலருக்கு. இது பெரும்பாலோர் அனுபவித்திருக்கும் நிலை. ஒரு சமயம் இல்லாவிட்டால் மறு சமயம். ஒவ்வொரு மனிதனும் இந்த அறிவினத்தைப் பெறத்தான் செய்கிறான். இப்போது சொல்லுங்கள். கனவிலேயே இது சாத்தியமென்றால், நனவில் மட்டிலும் எப்படி அசாத்திய மாக முடியும்? தூக்கம் என்பது ஐம்புலன்கள் ஓய் வெடுக்கும் இடைவெளி. ஆழ்ந்த சிந்தனையின் காரணமாக எத்தனையோ பேர் எதிரில் நடப்பதையும் காதில் கேட் பதையும் உணராமல் பித்துப் பிடித்தாற்போல் உட்கார்ந் திருக்கிறார்கள். இத்தகையவர்களை நீங்கள் பார்த்த தில்லையா?

2. பெருமானாருக்கு இந்த ஆற்றல் கிடைத்திருந்தது என்பது வரலாறு. நடக்கப் போவதை அவர்கள் முன் கூட்டியே சுட்டிக் காண்பித்து எச்சரிக்கை செய்தார்கள். இது பெருமானாருக்குச் சாத்தியம் என்றால் மற்றவர்களுக்கும்



இது சாத்தியம்தான் என்பது என் முடிவு. ஏனெனில் பெரு மானார் உங்களைப் போன்ற ஒரு மனிதர். இறையருளால் அவர்கள் இந்தத் துறையில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தார்கள். எனவே, அவர்களுக்கு மர்மங்கள் எல்லாம் கண்முன் தெரிந்தன. இப்படித் தெரிந்து கொள்ளக்கூடிய வர்கள் பெருமானாருக்குப் பிறகு தோன்றக் கூடாதென்பது என்ன நியாயம்? ஆனால் இத்தயைவர்களைத் திருத்தூதர் என்று குறிப்பிட முடியாது. 'வலீ' (இறையன்பர்) என்று குறிப்பிடலாம். ஏனெனில், பெருமானாருக்குப் பின்னர் உலகில் எந்தத் திருத்தூதரும் தோன்ற முடியாது.

திருத்தூதரையும் அவர்களுக்குக் கிடைத்த ஞானோதய அறிவையும் நம்புகிறவர்கள், உள்ளத்திற்கு இரண்டு வாயில்கள் இருக்கின்றன என்பதையும் நம்பித்தான் ஆக வேண்டும். புலனறிவு என்பது ஒரு வாயில். இதன் வழியாக உள்ளத்திற்கு அறிவு கிடைக்கிறது. எல்லோருக்கும் கிடைப் பதுபோல் ஞான ஊற்று என்பது மற்றொரு வாயில். இதன் வழியாகச் சுத்தமான அறிவு கிடைக்கிறது, திருத்தூதர் களுக்கும் இறையன்பர்களுக்கும் கிடைப்பது போல்!

நீங்கள் கனவுலகில் எத்தனையோ விதமான தோற்றங் களைப் பார்க்கிறீர்கள். இதே மாதிரி திருத் தூதர்கள் நனவுல கில் பல்வேறு உருவங்களைப் பார்க்கிறார்கள். வானவர் இப் படிப் பல்வேறு உருவங்களில் திருத்தூதர்களுக்கு எதிரில் தோன்றுகிறார் - கனவில் அல்ல! நாம் கனவில் காணும் காட்சிகளை வியாக்கியானம் செய்து கொள்ளுகிறோம். இதே மாதிரிப் பல்வேறு தோற்றத்தில் வரும் வானவர் பலதரப் பட்ட அறிவுரைகளைத் திருத்தூதர்களுக்குக் கற்றுக் கொடுக் கிறார் - இதுவும் உள்ளத்தின் விந்தைகளில் ஒன்றுதான். மனத் தெளிவற்றவர்களால் இதைச் சரிவரப் புரிந்து கொள்ள

முடியாது. எனவே, இத்துடன் என் வியாக்கியானத்தை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுவரை நான் எழுதி வந்தது உங்கள் முன்னேற்றத்திற்குப் போதுமானது. அதை வைத்தே மனத்தூய்மை பெற்று ஞானத்தையும் நீங்கள் அடையலாம்.

கடைசியாக ஒரு வார்த்தை: நம் முன்னோர்கள் இந்தத் துறையில் மற்றவர்களைப் பார்க்கிலும் பெரிதும் முன்னேறி யிருந்தார்கள். அவர்கள் கூறியதை ஊன்றிக் கவனித்துச் செயலாற்றுங்கள். அவர்கள் தெளிவான உள்ளத்தைப் பெற் றிருந்தார்கள். அதில் உருப்பெறும் அறிவுகள் உண்மைக்கு மாறுபடாதவை.

''அவர்கள் கூறுவதைச் செவமடுத்துக் கேளும்...'' இது உமர்(ரலி) அவர்கள் தம் தளபதிகளில் ஒருவருக்கு எழுதிய கடிதம். ஏனென்றால், உண்மையான விவரங்கள் எல்லாம் அவர்களின் உள்ளத்தில் பிரதிபலித்து விடுகின்றன.

ஓர் அறிஞர் குறிப்பிட்டார்: ''மெய்ஞ்ஞானிகளின் வாயை இறைவனின் கரம் மூடிக்கொண்டிருக்கிறது. இறைவன் கொடுத்த உண்மையான அறிவைத் தவிர்த்து அவர்கள் வேறு எதையும் வெளியிட மாட்டார்கள்!''

நம் உள்ளத்தில் ஒளியையும் தீர்மானத்தையும் உண் டாக்குவதற்குரிய மனப் பக்குவத்தை இறைவன் நமக்குத் தந்தருள்வானாக!

● ❖ ●